நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

සරිනිහර්

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 189 ஜன. 27 - பெப். 09 2000 விலை ரூபா 10. 00.



## அரசு பின்னோக்கிப் பயணம்!

வருண கருணாதிலக்க




## சாரதாம்பாளின் இறுதிச்சடங்கு!

ஒரு தாயின் அடக்கமும் குழந்தையின் துயரமும்



## புலிகளுக்கு 'பாஸ்' விற்குமாறு மிரட்டல்

ஒரு பொலிஸ்காரரின் வாக்குமூலம்!



## யுத்தத்தின் கதை மேடையில்....

## பயங்கரவாத தடைச்சட்டம் பற்றி ஒரு ஆய்வு

நன்றி - நூலகத்திட்டம்



# பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்தே வருகின்றன

– சரோஜா சிவச்சந்திரன்

கடந்த டிசெம்பர் மாதம் 28ம் திகதி புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சாரதாம்பாளுக்கு யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையம் கண்டனக் கூட்டமொன்றை யாழ். நாவலர் மண்டபத்தில் நடாத்தியிருந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள பெண்களின் பிரச்சினைகள் பற்றி விபரிக்கிறார் மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவி சரோஜா சிவச்சந்திரன்.

**அண்மையில் புங்குடுதீவில் இடம் பெற்ற சாரதாம்பாள் மீதான பாலியல் வல்லுறவு கொலைச்சம்பவம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

பெண்களுக்கெதிரான வன்முறைகள், இன்றைய காலகட்டத்தில் அதிகரித்து வருகின்றன. இவை வீடு, சமுதாயம், அரசு எனப் பல்வேறு மட்டங்களிலும் காணப்படுகிறது. சாரதாம்பாளின் சம்பவத்தைப் பார்க்கும் போது, அவர் படையினரால் கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபடியால், யாழ்ப்பாணத்தில் இயங்கும் பெண்கள் அமைப்பு என்ற ரீதியில் சாரதாம்பாளின் கொலைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டியது எமது கடமை.

போர் நடைபெறும் இடங்களில் இராணுவம், மக்களை அச்சுறுத்தி, அடிமைப்படுத்தும் நோக்குடன் பாலியல் வல்லுறவை மக்கள் மீது திணித்து வருகிறது. இந்த நிலைமை எமது நாட்டில் மட்டுமல்ல, போர் நடைபெறும் பல நாடுகளிலும் காணப்படுகிறது.

**இதற்கு முன்னரும் யாழ்ப்பாணத்தில். இது போன்ற பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றைத் தடுத்து நிறுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவை அவை எந்தளவுக்குப் பலனளித்தன?**

கிருஷாந்தி விடயத்தில் எமது அமைப்புத் தான் முதன் முதல் கண்டனம் வெளியிட்டது. இப்படியான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாது பார்த்துக் கொள்ளுமாறு, யாழ். இராணுவத் தளபதி காமினி ஜயசுந்தரவிடம் நாங்கள் வேண்டுகோள் விடுத்தோம். அவரும் இனிமேல் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாது பார்த்துக் கொள்வதாக உறுதியளித்தார். எனினும், இப்படியான சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே தான் உள்ளன.

**சாரதாம்பாளின் விடயத்தில் இலங்கையிலுள்ள ஏனைய பெண்கள் அமைப்புகள் மௌனமாக இருப்பது ஏன்?**

அது ஏன் என்று, எனக்கும் தெரியவில்லை. எமது பிரதேசத்தில் நடைபெற்ற சம்பவத்திற்கு நாங்கள் குரல் கொடுக்க வேண்டும். நாங்கள் சாரதாம்பாளின் கொலையைக் கண்டித்து ஆயிரம் பேரிடம் கையொப்பம் வாங்கி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளோம்.

**பொதுவாக யாழ்ப்பாணத்தில் பெண்களின் நிலைமை எப்படி உள்ளது?**

1996,1997 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துக் கஷ்டம், பயம் காணப்பட்டது. இப்போது, பெண்கள் அதற்குப் பழக்கப்பட்டு விட்டார்கள். முன்பெல்லாம் பெண்கள் காவலரண்களைத் தாண்டி வருவதற்குப் பயப்பட்டார்கள். இப்போது, பெண்கள் அதற்குப் பழக்கப்பட்டு விட்டனர். ஆனால், தனியே வாழும் பெண்கள் பயத்துடனேயே காலத்தைக் கழிக்க வேண்டியுள்ளது. இராணுவம் சந்திக்குச் சந்தி நிற்கும் வரை, இராணுவம் புலிகளைத் தேடும் வரை, ஊடரங்கு உள்ள வரை ஒன்றும் செய்ய முடியாது. இராணுவம் நீண்ட காலம் ஒரே



பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட சாரதாம்பாளின் தந்தை சந்திரசேகரக் குருக்களும் சாரதாம்பாளின் மகள் சுமிதாவும்



பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட சாரதாம்பாளின் தந்தை சந்திரசேகரக் குருக்கள்

இடத்தில் தரித்திருப்பதும் பிரச்சினைகளுக்குக் காரணம் எனலாம்.

சாரதாம்பாளின் விடயம் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டு விட்டது. இச்சம்பவத்தை ஒரு பெண்ணுக்கு நடந்த கொடூரம் என்ற ரீதியில் பார்க்காமல், சாரதாம்பாளின் பிரச்சினையை வைத்து அரசியல் நடத்தும் நிலை காணப்படுகிறது. தனியே வாழும் பெண்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் நடக்கும் பல சம்பவங்கள் கௌரவப் பிரச்சினை காரணமாக வெளியே தெரிய வருவதில்லை.

அத்துடன் இன்றைய சினிமா மோகம் போன்றவற்றால் பல சமூகச் சீர்கேடுகள் இடம் பெறுகின்றன. இப்படியான பிரச்சினைகள் வெளியே தெரிய வருவதில்லை. இதனால் இராணுவத்தினரால் மேற் கொள்ளப்படும் சம்பவங்கள் கூட, அப்பாவி இளைஞர்களின் தலையில் பழி சுமத்துவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

புஸல்லாவ:

# தோட்டத் தொழிலாளர் உரிமைக்கோரிக்கையை எழுப்பினால் அது இனவாதமா?

கடந்த 20. 12. 1999 அன்று புரடொப் தோட்டத் தொழிலாளர் ஒருவர் புரடொப் தோட்டத்திற்குச் செல்வதற்காக வான் ஒன்றை வாடகைக்காகப் பேசித் தமது பொருள் பண்டங்களையும் வானில் ஏற்றிக் கொண்டிருக்கும் போது புரடொப் தோட்டத்துக்கு ஆட்களை ஏற்றிச் செல்லும் வானின் சாரதி(இவர் ஒரு சிங்களவர்), அந்தத் தொழிலாளரை மிரட்டி, அடித்துத் தமது வானில் தான் அங்கு செல்பவர்கள் செல்ல வேண்டும், வேறு எந்த வாகனத்திலும் செல்ல முடியாது எனவும், "தெமலு அபி கியன விதியட்ட தமய் வெட கரண்ணட ஓனே" என இனவாதமாகப் பேசி அந்தத் தொழிலாளியைத் தாக்கியுள்ளளார்.

தொடர்ந்து அந்த வானில் செல்லத் தடை விதித்துவிட்டு, தனது வானில் ஏறும்படி பலவந்தமாகச் சாமான்களையும், ஏற்றித் தோட்டத்துக்குச் சென்றதும் எல்லோரிடமும் 40/- விகிதம் அறவிட்டு விட்டு, இந்தச் சம்பந்தப்பட்ட தொழிலாளியிடம் 150/- தரும்படி கூறி, மேலும் இரண்டு கன்னமும் வீங்க அடித்ததைத் தொடர்ந்து, தோட்ட மக்கள் அனைவரும் சேர்ந்து அந்த வான் சாரதியை அடித்து, அங்கிருந்த மரம் ஒன்றில் கட்டி வைத்து விட்டனர்.

பின்னர் புஸல்லாவையில் இருந்து நான்கு வான்களில் அத்தோட்டத்துக்கு வந்தவர்கள் அங்குள்ள தோட்டத் தமிழ் மக்களைத் தாக்க முற்பட்ட பொழுது, அந்த நான்கு வான்களில் சென்றவர்களையும் கடுமையாகத் தாக்கிப் பாரிய மரங்களையும், பாலங்களையும் தகர்த்ததோடு, வான்களில் சென்று தாக்கியவர்களையும் வான்களோடு சேர்த்துக் கட்டி வைத்துவிட்டனர். மறுநாள் காலையில் பொலிசார் வந்து அவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, தோட்டத் தொழிலாளர்கள் 500க்கும் மேற்பட்டோர் அணி திரண்டு கம்பு, தடி, கத்தியுடன் புஸல்லாவை நகரையும், பக்கத்தில் இருந்த சிங்களக் கிராமத்தையும் தாக்க வந்து கொண்டிருந்த பொழுது பொலிசார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகக் கேள்விப்பட்ட கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ராஜரட்ணமும், உடபலாத்த பிரதேச சபைத் தலைவர் நிஸ்சங்க ஹேரத்தும் அவ்விடம் விரைந்து சமாதானஞ் செய்ய முற்பட்டபோது, தோட்ட மக்கள் ஆத்திரமுற்றுப் பாராளுமன்ற உறுப்பினரை ஏசிவிட்டதாகவும், பொலிசார் அவருக்குப் பாதுகாப்பளித்ததாகவும் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, புரடொப் தோட்ட மக்கள் தேர்தலையும் பகிஷ்கரித்துள்ளனர்: தேர்தல் தினத்தன்று எவருமே வாக்களிக்கச் செல்லவில்லை என்றும் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக, அரசியல் ரீதியாகவும் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக 20ம் திகதி முதல், ஐந்து நாட்கள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. கண்டி டி. ஐ. ஜீ. உட்படப் புஸல்லாவைப் பகுதி பொலிஸ் ஓ. ஐ. சீ. றணதுங்க ஆகியோரும் சில அரசியல் பிரமுகர்களும், கடந்த 24. 12. 1999 அன்று அயரி தமிழ் வித்தியாலயத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி, வான்கள் அங்கு ஓடுவதைத் தடை செய்துள்ளனர். அன்றிலிருந்து மூன்று பஸ்கள் கம்பளை டிப்போவிலிருந்து சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

புரடொப் தோட்டம் புஸல்லாவையில் இருந்து 14 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. பஸ் கட்டணம் 8.50 ஆக இருக்கின்ற போதிலும், வான்களில் 40/- முதல் விரும்பிய கட்டணத்தை வான் சொந்தக்காரர்கள் அறவிட்டு வந்தனர். பலவந்தமாகவே தோட்டத் தொழிலாளர்களைத் தமது வான்களில் ஏற்றியும் வந்தனர். குறிப்பிட்ட சிலரைத் தவிர (அதுவும் சிங்களவர்களாக இருக்க வேண்டும்) யாரும் வான் சேவை மேற்கொள்ள முடியாதெனவும் கட்டளை இட்டிருந்தனர். அதுமட்டுமின்றிப் பள்ளி மாணவிகளைப் பாலியல் இம்சைகளுக்கு உட்படுத்துவதையும் விட்டுவைக்கவில்லை. 15 பிரயாணிகள் செல்லும் வான்களில் 35 - 40 வரை பிரயாணிகளையும் ஏற்றிச் சாமான் பார்சல்களையும் ஏற்றிக் கொண்டு நினைத்த அளவு கட்டணங்களையும் உயர்த்தியே வந்தனர்.

இந்த வான் சொந்தக்காரர்கள் சிங்களவர்கள் என்றபடியால் பொலிசில் முறைப்பாடு செய்தாலும் சரியான நடவடிக்கையோ அல்லது விசாரணையோ நடக்கவில்லை. தோட்ட மக்கள் இந்த அநீதியைத் தட்டிக் கேட்க முற்பட்டவுடன் இனவாதிகளும், இன ஐக்கியம் என்று பேசிய அமைப்புக்களும் கூட இச்சம்பவத்தையடுத்து இனவாதம் பேசத் தொடங்கி விட்டனர். தமிழ் பேசும் மக்கள், அது யாராக இருந்தாலும் தலை நிமிர்ந்து தட்டிக் கேட்டுவிட்டால் அவனைப் புலி என முத்திரை குத்தி விடுவது இலகுவானது. அங்கு அதுவும் நடந்தது.


அநீதியைத் தமிழர், குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர் தட்டிக் கேட்டுவிட்டால், அதை பெரும்பான்மை இனம் என்பதாலோ என்னவோ அவர்களால் ஜீரணிக்கவே முடிவதில்லையே !


இந்தத் தாழ்வு மனப்பான்மையும், எதையும் ஏற்றுக்கொள்ளமுடியாத தன்மையும் சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் வரை இந்த நாட்டில் சமாதானம் ஒருபோதும் பிறக்காது.

மலையக அரசியல்வாதிகள் இன்னும் ஏன் சிங்களப் பேரினவாத சக்திகளோடு ஒத்து ஊதுகிறார்கள் ? தமக்கென ஒரு தனித்துவமான சிந்தனையை ஏன் வளர்த்துக் கொள்ளவில்லை. இது மலையக மக்களுடைய வாழ்நிலையையும் உரிமைகளையும் அல்லவா பாதிக்கிறது,

மலையக அரசியல்வாதிகள் கவனத்தில் கொள்வார்களா?

- மலை மணியன்



நன்றி - நூலகத்திட்டம்



# அரசாங்கத்தின் புதிய யோசனை: தடை தாண்டி ஓட்டம்?

"எவ்விதப்பட்டேனும் மூன்று மாதங்களுக்குள் புதிய அரசியல்வரைவைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவந்து நிறைவேற்றி, இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட வேண்டும் என்று சூளுரைத்திருக்கிறது அரசு.

கேட்பதற்குக் காதில் தேனாகப்பாயும் இந்தச் சூளுரைப்பு. நடைமுறைக்கு வருமா என எண்ணிப் பார்க்கும் போது சற்று வேதனையாகத்தான் இருக்கிறது.


நடைமுறைக்குச் சாத்தியமில்லாத அறிவிப்புக்களை வெளியிடுவதும், பின்னர் அமைதிகொள்வதும் இந்த அரசுக்குக் கைவந்த கலை. நிறைவேற்றப்படப் போவதில்லை என்ற தீர்மானத்தை மனதில் வைத்துக் கொண்டு நிறைவேற்றிக் காட்டுகிறேனா இல்லையா? பார் என்று வீறாப்புப் பேசிக் காலக்கெடு வைப்பதுவும் இவர்களுக்குக் கஷ்டமானதொன்றல்ல.

செவ்வாய்க்கிழமைகளில் சோறு சாப்பிடக் கூடாது, விருந்து வைபவங்களில், நூறு பேருக்கு மேல் சாப்பாடு கொடுக்கக் கூடாது என்றெல்லாம் ஒரு காலத்தில் சட்டம் போட்டிருந்தார் எங்கள் ஜனாதிபதியின் தாயார். இந்த உத்தரவு எவ்வளவு தூரம் சாத்தியமானது என்று நடுத்தர வயதினருக்கு நன்கு புரியும்.

இத்தகைய கேலிக் கூத்துகளின் வழி வந்த கட்சியின் தொடர்ச்சிதான் இன்றைய அரசும். இதன் முதலாவது "டமார்" அறிவிப்பு ஜனாதிபதிப் பதவியை ஒரு வருடத்துக்குள் ஒழித்து விடுகிறோம் என்றதுதான். அது எந்தளவு கரிசனையோடு முன்னெடுக்கப்பட்டு ஒரு வருடத்துள் ஒழிக்கப்பட்டது என்பது இன்றைய தலைமுறையினருக்குப் பாடம்.

பிரபாகரனுடன் பேசுகிறேன், பிரச்சினையைத் தீர்க்கிறேன் என்றனர். பேசினார்கள், பிரச்சினைக்குப் புது வடிவம் கொடுத்து வளர்த்து விட்டார்கள். பிரபாகரன் பேசுவதற்கு இலாயக்கற்றவர், சண்டைப் பிரியர். அவராகவே எங்கள் நல்லெண்ணத்தைப் பிழைபடுத்திக் கொண்டார் என்றார்கள்.

சாதாரண குழந்தையாகப் பிறந்த பிரபாகரன், ஏன் யுத்தத்தை நாடினார்? எந்த அடிப்படையில் அரசுக்குச் சமனான ஒரு இராணுவத்தைக் கட்டியெழுப்பினார். ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களைத் தன் பால் ஈர்த்தார். இந்த வளர்ச்சிக்குத் தூண்டுதல் அளித்த, அரசின் எதிர்மறை நடவடிக்கைகள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் அரசு உட்பட, சிங்கள அரசியல்வாதிகள் எல்லோரும் வசதிக்காக மறந்து விட்டனர்.



பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், பிரபாகரனுக்குக் காலக்கெடு வைத்தார். பிரபாகரன் என்ற தனிமனிதனை உதாசீனப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு பேசிய பேச்சுக்கள், நடந்த முறைகள், பிரபாகரனைத் தலைவராகக் கொண்டவர்களை ஆவேசம் கொள்ளச் செய்யும் என்பதை மறந்து போனார்கள். யுத்தம உத்வேகம் பெற்றது, சப்புமல் குமாரயா "கினிசப்பு" குமாரவானார்.

தீர்வுப் பொதி எழுதினார்கள் : எழுதினார்கள், எழுதிக் கொண்டே இருந்தார்கள். தீர்வுப் பொதியை நிறைவேற்ற, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு வேண்டும் என்பதை நன்றாக உணர்ந்திருக்கும், அந்தப் பலம் தங்களிடம் இல்லை என்பதைத் தெரிந்திருந்தும், நிறைவேறாத தீர்வுப் பொதிக்கு நேரத்தைச் செலவிட்டார்கள், கூட்டம் போட்டார்கள், ஊர்வலம் நடத்தினார்கள், ஊர்திகளை ஓட விட்டார்கள்.

அடடா, தீர்வுப் பொதி தாமதமாகிறது. சம வாய்ப்புச் சட்டம் வருகிறது. தமிழர்களே தலை நிமிர ஆயத்தமாகுங்கள் என்றார்கள். கேவலம் பாடசாலைப் பிள்ளைகளின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சிக் கைவிட்டார்கள்.

தமிழ் மக்களின் அஹிம்சைப் போராட்டத்தைக் கண்டு அஞ்சாத அரசு, உலக நாடுகளில் கேவலப்பட்டுப்போய் நிற்கும் வேளையில் அஞ்சாத அரசு, தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தைக் கண்டு அஞ்சாத அரசு, நாட்டின் ஒரு பகுதிக்குக் கால்வைக்க முடியாத நிலையிலும், இராணுவத்தில் சேர்ந்த அப்பாவிச் சிங்கள இளைஞர்களது, உயிரழிவில் கவலை கொண்டு பின் வாங்க விரும்பாத அரசு, பாடசாலை மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு, வேடிக்கையாக அஞ்சியது என்பதில் தான் அரசின் ஜனநாயகப் பண்பு சீர்பெற்று நிற்கிறது.

இவற்றை மனதிற் கொண்டால், மூன்று மாத கால எல்லைக்குள் பிரச்சினை தீரும் முறையை விளங்கிக் கொள்வதில் எவ்வித கஷ்டமும் இருக்காது.

புதிய வரைவு, நான்கு கட்டங்களைக் கூடத் தாண்ட இருக்கிறது.

**முதலாவது கட்டம்:** அரசுடன் கூட்டான கட்சிகளின் ஆதரவைப் பெறுவது.

**இரண்டாவது கட்டம்:** தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெறுவது.

**மூன்றாவது கட்டம்:** ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெறுவது.

**நான்காவது கட்டம்:** விடுதலைப் புலிகளின் ஒப்புதல் பெறுவது.

அரசின் அறிவிப்பைப் பார்த்தால் இக் கட்டங்கள் என்பன ஒன்றரை அடி உயரமுள்ள தடைகள் போலவும், போகிற போக்கில் இலகுவாகக் கடந்து இலக்குக் கம்பத்தை எட்டிவிடலாம் போலல்லவா இருக்கிறது.

முதலாவது தடை, ஓரளவு இலகுவாகத் தாண்டிவிடக் கூடியதுதான். இரண்டாவது கட்டம் தாண்ட வேண்டுமானால், தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழக் கூடிய அளவாவது, அரசியலமைப்பில் வகை செய்யப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு செய்யப்பட்டிருக்குமா? என்பது சந்தேகம் தான்.

ஐ.தே.க. ஒப்புதல் தரக் கூடிய அரசியலமைப்பு, தமிழ் மக்களின் குறைந்த பட்ச அபிலாஷைகளையேனும் நிறைவேற்றக் கூடியதாக இருக்குமா? என்பது கேள்விக்குரியது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கையும், அரசின் விட்டுக் கொடுப்பும் சங்கமிக்கக் கூடிய புள்ளி வரை உயர்த்தப்படாத, நூறு சத வீதப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றாற் கூட, நடைமுறைக்கு வரப் போவதில்லை. வட - கிழக்கு மாகாண சபையின் சீர்குலைவே இதற்கு நல்ல சாட்சி.

எனவே இந்த "மூன்று மாத கால" அறிவிப்பு, வழமையான கண்துடைப்பாகக் கூடப் போய்விடலாம். பாராளுமன்றத் தேர்தலில் வாக்குத் தேடும் நோக்கமாகவே இருக்கலாம்.

உண்மையில், இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, இலங்கையில் அமைதியைக் கொண்டு வர, அரசு உளமாற விருப்பம் கொண்டிருந்தால், போர் மூலம் பிரபாகரனை அழித்து விட்டுத்தான், மறு வேலை பார்ப்பேன் என்று வீறாப்புப் பேசுவதையும், ஐ.தே.கவையும், அதன் தலைவரையும் சீண்டிவிடக் கூடிய பேச்சுக்களையும் நிறுத்த வேண்டும். தமிழ் மக்களை வதைப்பதை நிறுத்தி, நம்பிக்கையை வளர்க்க முயலவேண்டும்.

சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பும் அரசுக்கே மிக அதிகமாக இருக்கிறது என்பதை அரசு உணராத வரையில் எந்த அறிவிப்பும், பரபரப்பும், குத்தல் பேச்சுகளும், சமாதானத்தைக் கொண்டு வரப்போவதில்லை.

இதை அரசும், அரசோடு இணைந்து வாழுபவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

**திரிபுரன்**

# களுத்துறை: சிறைக்கம்பிகளுக்குப்பின்னால் மடியும் உண்மைகள்!




களுத்துறைச் சிறைச்சாலைத் தமிழ் அரசியல் கைதிகள் மீதான தாக்குதல் சம்பவம், முன்னைய சம்பவங்கள் போலவே அமுக்கப்பட்டுவிட்டது. கொல்லப்பட்ட இரு கைதிகளின் மரண விசாரணையுடன் அனைத்தும் முடிவடைந்துள்ளன. மேலே எவ்விதமான நடவடிக்கையும் அரசினால் எடுக்கப்படவில்லை. அதற்கான அழுத்தம் தமிழ்க கட்சிகளிடமிருந்தோ மற்றும் அமைப்புகளிடம் இருந்தோ கொடுக்கப்படவில்லை.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்த கைதிகளின் ஒரு பகுதியினர் வெவ்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வெலிக்கடை, பதுளை, கண்டி சிறைச்சாலை வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஏனையோர் சிகிச்சை எதுவுமின்றிக் களுத்துறைச் சிறைச் சாலையிலேயே அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய உடல் நிலை மோசமாக உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந் நிலையிலேயே இக் கைதிகளை பூஸா தடுப்பு முகாமிற்கும், ஏனைய சிறைச்சாலைகளுக்கும் மாற்றிக் கைதிகள் தொடர்பான பிரச்சினையைப் பூசிமெழுக, நீதியமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

இந்த அரசு பதவியேற்றபோது, தமிழ் அரசியல் கைதிகள் 400 பேரே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனால், தற்போது அவர்களின் தொகை 2400. தமிழ்க் கைதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்த அரசு, அவர்களை விடுதலை செய்வதற்கான எந்த்வித நடவடிக்கைகளிலும் அக்கறை காட்டவில்லை. இவ்விதமாகவே அவர்கள் காவலர்களால் தாக்கப்பட்டபோதும், அது பற்றிய நீதி விசாரணைக்கும், தீர்விற்கும் உரிய முயற்சிகளிலும் ஈடுபடவில்லை. அரசின் உயர் மட்டத்திலிருந்து சம்பவத்திற்கு விளக்கம் தரப்படவில்லை. கொல்லப்பட்டவர்களின் பாதுகாவலர்களுக்கோ, தாக்கப்பட்டவர்களுக்கோ அரச உயர் மட்டத்திலிருந்து அனுதாபம் கூடத் தெரிவிக்கப்படவில்லை. மாறாக, தமிழ் அரசியல் கைதிகளைத் தடுப்பு முகாம்களுக்கு மாற்றும் ஏற்பாடுகளையே, நீதியமைச்சு மேற்கொண்டிருந்தது. இந்நடவடிக்கை, நிலைமையை மேலும் மோசமாக்கவே வழிசெய்யும். தடுப்பு முகாம்களில் தமிழ் அரசியல் கைதிகள் மீது தம் எண்ணப்படி. அடக்குமுறைகளைப் பிரயோகிக்கலாம் என்பதே இதற்குரிய காரணமாகும்.

தமிழ் அரசியல் கட்சிகள் தமது சொற்சிலம்பலங்களை நிறைவு செய்து ஓய்வெடுத்தவண்ணம் உள்ளன. தமிழ் அரசியல் கைதிகள் கைது செய்யப்படுவதற்கும், விசாரணையின்றித் தடுத்து வைக்கப்படுவதற்கும் காரணமான அனைத்துச் சட்டங்களுக்கும் ஆதரவளித்துக் கொண்டிருக்கும் இக்கட்சிகள், அவற்றினால் ஏற்படும் விளைவுகளை எதிர்த்துக் குறைந்தபட்ச நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடுவதில்லை. இச்சம்பவத்திற்குப் பின்னரான கைதிகளின் நிலை பற்றியோ, அக்கறையின்றி மௌனம் சாதிக்கின்றன.

கைதிகளை இடமாற்றுவதும், சிறைச் சாலைகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்தவுமே இதற்குரிய தீர்வெனக் கூறிவருகின்றன. ஒரு பாராளுமன்ற உறுப்பினர், களுத்துறைச் சிறைச்சாலையைத் தனியே தமிழ் அரசியல் கைதிகளுக்காக மட்டும் ஒதுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். அரசியல் கைதிகள் தொடர்பில், தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாடு இதன் மூலம் தெளிவாக அறிவிக்கப்படுகின்றது. தொடர்ந்து அவர்களைச் சிறைக்குள் முடக்கி வைத்தலும், அவர்கள் மீதான தாக்குதலைத் தொடர்வதுமே அது.

இவ்வாறான அனைத்துச் சம்பவங்களின் பின்னரும், சிறைச்சாலை நிர்வாகம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. கைதிகள் மீதான தாக்குதலை மேற்கொண்ட சிறைக் காவலர்கள் கூடக் கடமையில் ஈடுபடுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் அரசியல் கைதிகள், தொடர்ந்தும் மரண அச்சுறுத்தலுக்கு மத்தியில் இருப்பதாகத் தெரிகிறது. இவர்களைப் பார்க்கச் செல்லும் பாதுகாவலர்கள் மீதும், உறவினர்கள் மீதும் அவ்வூர்வாசிகள் தாக்குதலில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்களையடுத்து, மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தில் கூடிய மனித உரிமை ஆர்வலர்களும், சட்டத்தரணிகளும் ஏழு அம்சங்கள் அடங்கிய மகஜரொன்றை நீதியமைச்சருக்குச் சமர்பித்துள்ளனர். இதனடிப்படையில் சுயாதீனக் குழு மூலம் நீதி விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும், அவர்கள் கேட்டுள்ளனர். ஆனால், இம்மகஜர் குறித்து நீதியமைச்சு தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றது.

மொத்தத்தில் இன்னும் ஒன்றிரண்டு வாரங்களுக்குள் அனைத்தும் வெற்றிகரமாக அமுக்கப் பட்டுவிடும். இப்போதுள்ள சொற்ப சலசலப்பும் ஓய்ந்துவிடும். ஆனால், கைதிகள் நிலை மேலும் மேலும் மோசமடைவது மட்டும் உறுதி.

**— ரங்கன்**

நன்றி - நூலகத்திட்டம்



சிங்கள மக்கள் மீது சிம்மாசனம் போட்டிருக்கும் அதிகாரத்துவத்திற்கு சவாலாக

தர்மசிறி பண்டாரநாயக்கவின்

# "ரோஜன் பெண்கள்"

உலக அரங்க வரலாற்றில் கிரேக்க தேசம் முக்கிய இடத்தினைப் பெற்றிருப்பதைக் காண முடியும். கிறிஸ்துவிற்கு முற்பட்ட கால கிரேக்க அரங்க வெளிப்பாடுகள் பெரும்பாலும் போர்க்கால அரங்க வெளிப்பாடுகளாகவே அமைந்திருந்தன. கிரேக்க அரங்க



இயக்கத்தின் முக்கிய பேசு பொருளாக போர் விளங்கி இருக்கிறது. போரின் விளைவுகள், போருக்கு எதிரான குரல்கள், அதிகாரத்துவத்திற்கு எதிரான குரல்கள் எழுப்பப்பட்டிருப்பதைக் கிரேக்க நாடக இலக்கியங்களில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

இப்பண்பு காரணமாக கிரேக்க நாடக இலக்கியங்கள் உலகம் முழுவதும் பரவலாக ஆற்றுகை செய்யப்பட்டு வருவதையும் அவதானிக்க முடியும். தொல்சீர் இலக்கியங்களாகப் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்பட்டு வரும் கிரேக்க நாடக இலக்கியங்கள் நேரடி அரசியல் வெளிப்பாடுகளுக்கு வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட சூழ்நிலையில் அந்த சூழ்நிலைகளின் அரசியலைப் பேசுபவையாக வடிவம் எடுக்கின்றன. வட அயர்லாந்தின், ஆபிரிக்க நாடுகளின் அரங்க வரலாறுகளில் இதனை சிறக்கக் காணலாம்.

இந்த வகையிலேயே கிரேக்க நாடக இலக்கியமான ரோஜன் பெண்கள் (Trogen Women) சிங்கள அரங்கில் ஆற்றுகைக்கு வந்திருக்கிறது. கிரேக்க அரங்கின் அவலச்சுவை நாடக மூலவர்களுள் ஒருவரான இயூறிபிடிசின் நாடக எழுத்துரு ஆங்கில மொழியாக்கத்தில் இருந்து சிங்களத்திற்கு ஆரிய ரணவீரவால் மொழி பெயர்க்கப்பட்டு அரங்கிற்கு உரிய வகையில் ஆனந்த வக்கும்புரவாலும், தர்மசிறி பண்டாரநாயக்கவாலும் எழுத்துருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. படைப்பாற்றல் மிக்க நெறியாளரும், நியாயமான அரசியல் நிலைப்பாடுடையவருமான தர்மசிறி பண்டாரநாயக்க இந்நாடகத்தை நெறியாள்கை செய்திருக்கிறார். ஆற்றுகைக்கென "ரோஜன் பெண்கள்" நாடகத் தெரிவு மூலம் தர்மசிறி பண்டாரநாயக்கவின் நியாயமான அரசியல் நிலைப்பாடு மீண்டும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

"இந்த நாட்டைக் குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்து சமாதானத்தை நிலைநிறுத்தும் முயற்சியாகவே நான் "ரோஜன் பெண்கள்" நாடகத்தை தெரிவு செய்துள்ளேன். இந்நாடகம் படைக்கப்பட்டு 25 நூற்றாண்டுகளின் பின்பும் மிகவும் சக்தி வாய்ந்த போர் எதிர்ப்பு நாடகமாக உலக நாடக அரங்கில் திகழ்ந்து வருகின்றது."

"இந்த நாடகத்தை மேடை ஏற்றுவதும் அதன் தனித்துவமான செய்தியை நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு செல்லுதலும் போரை முடிவிற்கு கொண்டு வந்து சமாதானத்திற்கான அடித்தளங்களை இடுவதும் கலைஞர் என்ற வகையில் மிக முக்கியத்துவம் உடைய கடமை என்று கருதுகிறேன்" என்ற தர்மசிறி பண்டாரநாயக்கவின் கூற்றுகள் அவரது நோக்கத்தை புலப்படுத்துவதாக இருக்கின்றது. "ரோஜன் பெண்கள்" நாடக ஆற்றுகை தரும் அனுபவம் அதனை உறுதிப்படுத்துகின்றது.

தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினை பயங்கரவாதம் தான் என்றும் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காகவே அவர்கள் மீது இராணுவ ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது என்று பல தளங்களில் பெரும் கதையாடல்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்ற சூழலில் பயங்கரவாதத்தை நிராகரித்து சிங்களவர்களை திருமணம் முடித்துக் கொள்வதன் மூலம் தமிழர்களது பிரச்சினைகளை தீர்த்துவிடுவது போன்ற காலனித்துவ எண்ண்க்கருக்கள் விதைக்கப்படுகின்ற சூழலில் நியாயத்தின் குரல், கூட்டுக்குரலாக "ரோஜன் பெண்கள்" நாடகத்தின் மூலம் அரங்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.'

வைத்தியர் தான் வைத்திருக்கின்ற மருந்துகளுக்கு ஏற்ப நோய்களை அடையாளம் காண்பவராக இருக்கப் போகின்றாரா? நோயை அடையாளம் கண்டு மருந்து கொடுப்பவராக இருக்கப் போகின்றாரா? என்பதை இந்நாடகத்திற்கு தெற்கில் எழும் எதிர்வினைகள் அடையாளம் காட்டுவதாக இருக்கும். மேலும் ஈழத் தமிழருடைய பிரச்சினை பற்றிய அறியாமையாலும் பொய்யான தகவல்களாலும் கடிவாளம் இடப்பட்டிருக்கும் சிங்கள மக்கள் மீது சிம்மாசனம் போட்டிருக்கும் அதிகாரத்துவத்திற்கு சவாலாகவே "ரோஜன் பெண்கள்" அரங்கச் செயற்பாடு அமைந்திருக்கின்றது.

ரோஜன் பெண்கள் நாடகத்தின் செயல்கள் ரோய்(Troy) இன் வீழ்ச்சியினை அடுத்து ரோய்க்கு வெளியே களம் கொண்டிருக்கின்றன. ரோய் தேசத்தின் ஆண்கள் அனைவருமே கொல்லப்பட்டு விட்டார்கள். பெண்கள் இவர்கள் தான் ஆடிப்பாடி ஆற்றுனர் குழாமாக (Chorus) நாடகத்தில் இயங்குபவர்கள், அடிமைப் படுத்தப்பட்டு பெரிய கூடாரங்களில் புதிய எஜமானர்களுக்குப் பங்கிடப்படுவதற்காக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.



நாடக முற்பாயிரத்தில் (prologue) கிரேக்கர்கள் ரோயை அழிப்பதற்கு அனுசரணையாக இருந்த அதீனப் பெண் தெய்வம் கிரேக்கர்களின் கட்டுமீறிப் போன அட்டூழியங்களால் அவர்கள் மீது தான் கொண்ட பரிவு அற்றுப்போனதை போசிடோன் கடவுளிடம் முறையிடுகிறது. கிரேக்கர்கள் தாயகம் திரும்பும் வழியில் அவர்களது கடற்படை கலங்களை அழிப்பதாக போசிடோன் தெய்வம் அவளுக்கு வாக்கு கொடுக்கிறது.

படுகொலை செய்யப்பட்ட கணவர் பிரியத்தினதும், பிள்ளைகளான ஹெக்டரதும், பொலிசீனாவினதும் விதியை எண்ணி ரோயின் அரசியாக இருந்தவளான ஹெக்குபா புலம்புகிறாள். ஆடிப்பாடி ஆற்றுனர்குழாம் (Chorus) புலம்பலில் இணைகின்றது. நாடகத்தில் ஹெக்குபா பாத்திரம் ஏற்று நடிக்கும் அனோஜா வீரசிங்கவின் பாத்திர வெளிப்பாடு அற்புதமாக அமைந்திருக்கின்றது. விதைவைகள் 'ஆக்கப்பட்ட "ரோஜன் பெண்களை" பிரதிநிதித்துவப்படுத்தும் ஆடிப்பாடி ஆற்றுனர் குழாம், நாடகத்தின் உயிர் நிலையாக இயங்குகின்றது.



கிரேக்க தூதுவனான ரோல்ற்திபியஸ் உயிர்தப்பிப் பிழைத்திருப்பவர்களுக்கு விதிக்கப்பட்டிருப்பவற்றை வெளிப்படுத்துகின்றான். அதன்படி சித்த சுவாதீனமற்ற தீர்க்க தரிசியும் ஹெக்குபாவின் மகளுமான கசன்றா அகமெம்னோனின் வைப்பாட்டியாக்கப்படப் போகின்றாள். ஹெக்டரின் விதவை மனைவியான அன்றோமச்சே அச்சிலீசின் மகனான பைரசின் வைப்பாட்டியாக்கப்படப் போகிறாள். வெறுக்கப்பட்ட ஒடிசியஸின் மாளிகையில் முன்னைய அரசி ஹெக்குபா அடிமையாக்கப்படப் போகிறாள்.

ஹெக்டரின் விதவை மனைவியான அன்றோமச்சே சிறுவனான மகன் அஸ்றியனக்சுடன் வருகிறாள். ரோய் அழிக்கப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கைகளை முன்கூட்டியே தடுத்து விடுவதற்காக சிறுவனை நகரின் மதிச்சுவரில் இருந்து உருட்டி விட வேண்டும் என்று கூறி அவனைக் கொல்வதற்கு தூதுவன் ரோல்ற்தீபியஸ் இழுத்துச் செல்லுகின்றான். ஆடிப்பாடி ஆற்றுனர் குழாம் ரோய் மீது ஒரு புலம்பலைப் பாடுகிறது.

தன் மனைவியான ஹெலனைக் கொல்வதற்கு நீண்ட காலமாக அவாவிக் கிடந்து, அந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததற்குப் பூரித்தவனாக மெனிலோஸ் வருகிறான். பரீசுடன் விரும்பியே ரோய்க்கு ஓடிப்போனாய் என்று மெனலோஸ் முன்னிலையில் ஹெலனைத் திட்டுகிறாள் ஹெக்குபா. தனது குற்றமற்ற தன்மையை மன்றாட்டமாக ஹெலன் வெளிப்படுத்துகிறாள். பெண் தெய்வமான அவ்ரோடைற் மீது ஹெலன் பழியை போடுகிறாள். ஹெக்குபா இதனை கடுமையாக எதிர்க்கின்றாள். ஹெலனின் அழகு மெனலோஸ் அவளைக் கொல்வதை ஆர்கோஸ் திரும்பும் வரையில் பின்போடச் செய்கிறது. அவர்கள் சென்ற பின்னர் ரோல்ற்தீபியஸ் சிதைந்து போன சிறுவன் அஸ்ரீயனக்ஸின் சடலத்துடன் வருகிறான். அன்றோமச்சே ஏற்கெனவே கிரேக்கம் புறப்பட்டு விட்டதையும் அறிவிக்கின்றான். சிறுவனுக்காக அழுது புலம்பிய ஹெக்குபா அவனது சவ அடக்கத்திற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கையில் ரோயில் எதுவுமே எஞ்சியிருக்கவில்லை என்பதை உணர்ந்து கொள்கிறாள். ரோய் கடவுளால் கைவிடப்பட்ட நகரமாக மாறியிருந்தது. ரோய் எரிந்து சாம்பராயிருக்க, அவர்களுக்காக காத்திருந்த கப்பலை நோக்கி ஏனைய பெண்களுக்கு தலைமை தாங்கி ஹெக்குபா அடிமை வாழ்வை நோக்கி நடக்கிறாள்.

"ரோஜன் பெண்கள்" நாடகம் சூழலுடன் தன்னை இணைத்துக் கொண்டு சிங்கள அரங்கில் வித்தியாசமாக பரிணமித்திருக்கின்றது. சந்தேகப் பார்வைகளாலும், பதிவுகளாலும் துளைக்கப்படும் சோதனைகளாலும் சுற்றி வளைப்புகளாலும் திணறடிக்கப்படும் தலைநகர்ச் சூழலில் "ரோஜன் பெண்கள்" நாடகம் தருகின்ற அனுபவமும் சிந்தனையும் வித்தியாசமானது.

– சீ. ஜெயசங்கர்

நன்றி - நூலகத்திட்டம்



# என்னைப் 'பாஸ்' ஏஜண்டாக இருக்குமாறு மிரட்டினார்!

## – ஒரு பொலிஸ்காரரின் வாக்கு மூலம்

த. சிறிகாந்தா.உப பொலிஸ் உத்தியோகத்தர் ஆர் 13045

பழிவாங்கும் நோக்குடனும், தமிழர் என்ற காரணத்தாலும் 05. 12. 1997 அன்று நான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும், அவசர காலச் சட்டத்தின் கீழும் நுவரெலியா சீ. எஸ். யூ. பொறுப்பதிகாரி பொன்சேகா அவர்களாலும், கண்டி எஸ். ஐ. யூ. பிரிவாலும், எனது கடமை நேரத்தில் கைது செய்யப்பட்டேன். (அப்பொழுது நுவரெலியா பொலிசில் வேலை செய்து கொண்டிருந்தேன்.)

எனக்கு, முன்னர் இவர்களால் நுவரெலியாவில் வைத்து "சுரேஷ்" எனும் விடுதலைப் புலிச் சந்தேகநபர் என்ற ஒருவர் 28. 04. 1997இல் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் நுவரெலியா பொலிசில் தன்னை மூன்று ஆண்டுகளுக்கு மேல் பதிவு செய்து கொண்டு, நுவரெலியா தினச் சந்தையில் கருவாட்டு வியாபாரம் செய்து கொண்டிருந்தார். இவரிடம் நுவரெலியாவில் வேலை செய்யும் சிங்களப் பொலிசார் 03 வருடகாலம் கடனுக்குக் கருவாடு வாங்கிப் பணமும் திருப்பிக் கொடாமல் இருந்தனர் என்றும் பின்னர் அறிய முடிந்தது. அவரை யார் என்று எனக்குத் தெரியாது. சிங்களப் பொலிசாருக்கும், எனக்கும் அவர்களின் அடாவடித் தனத்துக்கும், எடு பிடிகளுக்கும், கைலஞ்சப் போக்குக்கும், நீதியற்ற செய்கைகளுக்கும் நான் எதிராக இருந்தபடியால் உட்பகைமை தொடர்ந்தும் இருந்து வந்தது. (இது வேலையில் சேர்ந்த அன்றிலிருந்தே ஆரம்பமாகியது.) நான் வேலையில் சேர்ந்தது 02. 05. 1988 இல் ஆகும், கண்டியில் பயிற்சி பெற்றேன். சீ. எஸ். யூ. - ஓ. ஐ. சீ. பொன்சேகா என்னை அணுகி "திரு. சுரேஷ்" என்பவரது வளர்ப்புப் பெற்றோரிடம் ரூபா 50,000 வாங்கித் தருமாறு கோரினார். உடனடியாகவே நான் முடியாது என்று மறுத்தேன், என் மீது கோபமுற்றார்.

முன்னர், வவுனியாவில் வதிவிடப் பாஸ் வழங்கலுக்கு என்று (1996. 12ம் மாதத்தில்) நுவரெலியாவில் எஸ். பீ. ஆக இருந்து வவுனியாவுக்கு மாற்றலாகி வந்தவர் தான் மீகொட என்ற பொலிஸ் சுப்பிரின்டன். நான் எனது மருமகள் ஒருவரையும், அவரது வயோதிப மாமியாரையும், "கனடா நாட்டுக்கு அனுப்பக் கொழும்புக்கு அவர்களை அழைத்து வருவதற்காக என்னிடம் அவர்களைத் தரும்படி கேட்கச் சென்றேன்.



அவர்கள் வவுனியா பூந்தோட்டம் தடை முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர், அவர்களை அங்கு சந்தித்தேன். எஸ். பீ. 14 நாட்கள் சுணக்கினார். கதைப்பார், சிரிப்பார், தனது குவாட்டர்ஸ்க்கு வருமாறு கூறினார். சென்றேன்...

"வன்னியில் இருந்து கொழும்புக்கு அனுப்பப் பணத்துக்குப் புலிகளுக்குப் பாஸ் கொடுக்க முடியும். விற்றுத் தர உதவுவீரா ? என்று கேட்டார். நான் உடனடியாகவே புலிகளை எனக்குத் தெரியாது என்றும், இப்படியான பாஸ் வியாபாரத்தில் ஈடுபட நான் தயாரில்லை என்றும், முகத்திலேயே கூறிவிட்டுச் சென்றுவிட்டேன். நான் ஏற்கெனவே கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கான எனது இரு உறவினர்களதும், பெயர், அடையாள அட்டை இலக்கம், விலாசம், வயது போன்ற விபரங்களுடனும், கொழும்பில் உறவினர்களை நிறுத்த வேண்டிய லொட்ஜ் விலாச விபரம் அடங்கியதுமான கடிதத்தையும் எஸ். பீயிடம் இருந்து மீளத் தருமாறு கோரியபோது. அவர் என்னிடம் நீண்ட நச்சரிப்புடன், தனது அலுவலகத்தில் 14 நாட்கள் கழித்துத் தந்தார். என்னைத் தான் பார்த்துக் கொள்வதாகவும் மிரட்டலுடன் கூறி, என்னை அலுவலகத்திற்கு வராதபடி பொலிஸ் அலுவலக் காவலுக்கு நின்ற உத்தியோகத்தர்களிடம் கூறியும் விட்டிருந்தார். காவல் உத்தியோகத்தர்கள் தான் இவ்விபரத்தை என்னிடம் கூறினார்கள்.

மிகுந்த ஏமாற்றத்துடன் நான் நுவரெலியா பொலிசில் 15 நாள் கடமைக்குச் சமூகம் கொடுத்தேன். எனது எச். கியூ. ஐக்கு விபரத்தைக் கூறினேன். எச். கியூ. ஐயோ தமிழர்களுடன் மிகுந்த அனுதாபம் கொண்டவர். என்னுடனும் மிகுந்த நட்புக் கொண்டிருந்தார். எஸ். பீ. அவர்களின் கேள்வியும், நடைமுறை பற்றியும் அவர் ஏற்கெனவே தெரிந்தவரும் கூட, எஸ். பீயை அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது.

எஸ். பீ. மீகொட, நுவரெலியாவில் இருந்து தான் வவுனியாவுக்கு இடமாற்றலானார்.

நான் மீளவும் 10 நாட்கள் நுவரெலியாவில் வேலை செய்துவிட்டுச் சுகவீன லீவில் வவுனியா வந்து, எஸ். எஸ். பீ. டிவிஸன் ஆக, வேலை செய்து கொண்டிருந்த காமினி த சில்வாவிடம் உறவினர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல அனுமதி கோரினேன். அவர் அனுமதி கொடுக்கும்படி பூந்தோட்ட தடைமுகாம் ஓ. ஐ. சீக்கும், "சணச" ஓ. ஐ. சீக்கும் எழுத்து மூல உத்தரவு பிறப்பித்தார். அவர்களும் விசாரணை முடித்து, வீடியோ பிடித்துக் கொழும்புக்குக் அழைத்துச் செல்லப் "பாஸ்" தந்தனர். நான் பம்பலப்பிட்டிப் பொலிசில் பதிவு செய்துவிட்டு, நுவரெலியாவுக்கு வேலைக்குச் சென்று விட்டேன். அவர்களும் பின்னர் இரு வார காலத்துள் கனடா சென்று விட்டனர்.

எஸ். பீ. மீகொட தான் முதன் முதலில் வவுனியா தடை முகாமில் மக்களை, 22. 11. 1996 இலிருந்து பாதுகாப்பைக் காரணம் காட்டித் தமது பணம் சம்பாதிக்கும் நோக்குடன் வன்னியில் இருந்து வந்தவர்களைத் தடை செய்தவர். பின்னர் தனக்கு இடைத் தரகர்கள் மூலம் பாஸ் வியாபாரம் செய்து, தனது சட்டைப்பையினுள் நன்றாகப் பணம் சம்பாதித்துக் கொண்டார். "அரசுக்கு அன்று பிழையான ஆலோசனையும், பாஸ் பற்றி வழங்கியவரும் இவரே". (புலிகளும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நாட்டின் பல பாகத்துக்கும் சென்றிருந்தனர் போலும், பணத்தைக் கொடுத்தே காரியத்தை முடிப்பதில் புலிகள் வல்லவர்கள் தானே.)

இவரது நடவடிக்கைகள், பாஸ் வியாபாரம் பற்றி யாரோ தலைமைப் பீடப் பொலிசுக்குத் தகவல் வழங்கியே வவுனியாவிலிருந்து நுவரெலியாவுக்கு-(ஹட்டனுக்கு) மாற்றப்பட்டார்.

இன்னுமொரு விடயத்தையும் இங்கு குறிப்பிடுகிறேன்... 1997 பங்குனி மாதம், நான் நுவரெலியா பிரதமர் விடுதிக்குக் காவல் கடமை செய்யப் பணிக்கப்பட்டேன். அங்கு சென்ற போது முன் வாசல் கதவுகள் இரண்டும், அகலத் திறந்திருந்தன. நுவரெலியா சீ. எஸ். யூ. - ஓ. ஐ. சீ. பொன்சேகாவும், மற்றுமொரு ஆர். எஸ். ஐ. செந்தில்வேலும் இரு விலை மாதர்களை அங்கு கொணர்ந்து, அவர்களுடன் பட்டப் பகலில் சல்லாபம் நடத்திக் கொண்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டேன். கடமைப் பதிவுப் புத்தகத்தை(ஆர். ஐ. பீ. புத்தகத்தை) அறையில் நுழைந்து எடுத்துக் கடமையில் யார் இருக்கிறார்கள் என்று பார்த்தேன். ஏற்கெனவே கடமைக்குப் போடப்பட்டவர்கள், மூன்று நாட்களாகக் கடமை செய்ததற்கான பதிவு கிடையவே கிடையாது. இந்த நேரத்தில் விலை மாதரிடமிருந்த ஓ. ஐ. சீ. பொன்சேகா (ஆர். எஸ். ஐ), தனது பிஸ்டலைக் காட்டி என்னை மிரட்டி, நடந்த சம்பவங்களைப் புத்தகத்தில் பதியக் கூடாது என மிரட்டினார். கழுத்துக்கு நேரே துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டார்.

நான் இவர்களது துர்நடத்தையைப் பதியாது, மூன்று நாட்களாகக் கடமையில் இல்லாதது பற்றி எழுதினேன். (இப்போது இந்த ஆர். ஐ. பீ. திருடப்பட்டுள்ளதோ தெரியவில்லை.) இது நான் பாதுகாப்புக்கு எந்த விதத்திலும் குந்தகம் இல்லாது இருந்துள்ளேன் என்பதற்குத் தகுந்த ஆதாரமாகும். பின்னர் திருமதி சிறிமாவோ, சித்திரை மாதத்தில் நுவரெலியா பிரதமர் வாசஸ்தலத்துக்கு வந்து, பல நாட்கள் தங்கியிருந்தார். துப்பாக்கியுடன் அவரையும் பகலும் இரவும் காவல் புரிந்தேன். அவரும் பின்னர் கொழும்பு திரும்பியிருந்தார். துர்நடத்தை பற்றிப் பயத்தால் நான் யாரிடமும் கூறவில்லை.

50,000 ரூபா சுரேஷின் பெற்றோரிடமிருந்து வாங்கித் தராத கோபமும், நுவரெலியா பிரதமர் இல்லத்தில் நடந்த முறைகேட்டையும், துர்நடத்தையையும் நான் கண்டபடியால் பொன்சேகாவுக்கு என்மீது நேரடிக் கோபம், பழிவாங்கத் தருணம் பார்த்திருந்தார்.

மற்றைய கோபம், எஸ். பீ. மீகொடைக்குத் தனது பாஸ் வியாபாரத்துக்கும், பணம் சம்பாதிப்புக்கும் நான் உதவவில்லை என்றபடியாலும் (இவர்கள் இருவரும் 17 ஆண்டு கால ஐ. தே. கட்சியின் நேரடித் தொண்டர்கள்) என் மீது பெருங்கோபம்.

என்னைப் பழிவாங்கவே, சுரேஷிடமிருந்து ஜனாதிபதியையும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரையும் கொலை செய்ய நான் சதி செய்ததாகவும், நுவரெலியா ஜனாதிபதி இல்ல வரை படத்தைப் புலிகளுக்கு அனுப்பியதாகவும் கூறும்படியும் சொல்லிக் கொடுத்து, வேண்டுமென்று 12. 05. 1997 அன்று பகலில் வெள்ளைத் தாளில் வாக்கு மூலம் பெற்றுக் கொண்டு, திட்டமிட்டு என்னைக் கடமையில் வைத்துக் கைது செய்தனர். (நான் ஒரு உப பொலிஸ் உத்தியோகத்தர் ஆர் - 13045 இலக்கமுடையவன். கடமையின் போது வட கிழக்கில் இரு முறை வெடிகாயம் பட்டவன்) பொலிஸ் ஆஸ்பத்திரி உட்பட ஏனைய அரசினர் ஆஸ்பத்திரியில் இரு முறைக்கு மேல்(மாதக் கணக்கில்) சிகிச்சை பெற்றவன்.


இவற்றிற்கான நஷ்டஈடு, கைது செய்யப்பட்ட தினம் வரையில் இருந்து, இன்று வரையோ வழங்கப்படவில்லை. நஷ்ட ஈடு 1996ல் சிபார்சு செய்யப்பட்டும் இருந்தது. இதனைப் பொலிசில் வல்லமையுள்ள பகுதி திருடியிருக்க வேண்டும்.

கைதின் பின்னர், என்னைத் தாக்கிப் பல உடற் காயங்களை விளைவித்தனர். நான் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை உயர் நீதிமன்றில் வழக்கு இலக்கம் 555 / 97 மனு மூலம் தாக்கல் செய்து, (சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி மூலம்) வழக்கும் ஒரு வருடமாக நடந்தது. கண்டி எஸ். ஐ. யூவும், நுவரெலியா ஓ. ஐ. சீயும் சேர்ந்து 09 காயங்கள் விளைவித்ததைக் கண்டி ஜே. எம். ஓ. வரிசைப்படுத்தி, உயர் நீதிமன்றுக்கு மருத்துவ அறிக்கை செய்திருந்தார். "சுரேஷ்" என்ற கைதியும், புலனாய்வுத் துறையினர் என்னைப் பற்றி இப்படி எதிராக, வாக்கு மூலம் தரும்படி தன்னை வற்புறுத்தியே வெள்ளைத் தாளில் வாக்கு மூலம் எடுத்ததாகச் சத்தியக் கடதாசி ஒன்றை மனுவுக்குச் சமர்ப்பித்திருந்தார்.

கேவலம், பார்த்தீர்களா ? (முன்னர் கைதியான சுரேஷுக்கு மது, மாது என்பதைக் கொடுத்து, மயக்கி என்னைப் பழிவாங்கப் புலனாய்வுத் துறையினரான கண்டி, எஸ். ஐ. யூ வினரும், நுவரெலியா ஓ. ஐ. சீயும் சுரேஷைப் பயன்படுத்தினார்கள். அது புஸ்வாணமாகி விட்டது. (ஐ. தே. க. ஆதரவான புலனாய்வுத் துறை சார்ந்தவர்கள், நுவரெலியாவுக்கு மேதகு ஜனாதிபதியை வராமல் தடுக்கவே திட்டமிட்டு, ஐ. தே. க. அரசியல்வாதிகளும் சேர்ந்து ஆடிய ஒரு நாடகமே எனதும், வேறு எட்டுக்கும் மேற்பட்ட அப்பாவிகளினதும் கைதாகும். லங்காதீப, திவயின பத்திரிகைகள் அனாவசியமான முறையில் என்னையும், ஏனையவர்களையும் விமர்சித்தது. நாம் எல்லோரும் உயர் நீதிமன்றால் இப்போது விடுதலை செய்யப்பட்டு விட்டோம். நான் 24. 08. 1998 விடுதலை செய்யப்பட்டேன்.

களுத்துறை, போகம்பரை, பதுளை என்று சிறையில் ஏறத்தாழ 13 மாதங்கள் பல துயரங்களைப் பட்டேன். மூன்று முறை விடுதலை வேண்டி உண்ணா விரதம் இருந்தேன்.

12. 12. 1997ல் நடந்த மூன்று கைதிகள் படுகொலையன்று, களுத்துறையில் நானும் காடையர்களால் தாக்கப்பட்டேன். புலனாய்வுத் துறை ஓ. ஐ. சீ. பொன்சேகா என்னைப் படுகொலை செயயக் காடையர்கள் சிலரை ஒழுங்கு படுத்தியிருந்தார். தகவல் முன் கூட்டியே கசிந்து விட்டதால் வந்தவர்களைத் தாக்கிக் காடையர்களைப் பின்வாங்கச் செய்தேன்.



15. 02. 1998ல் களுத்துறைக் கைதிகள் மூவர் படுகொலை விசாரணை செய்யும்; ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு நேரில் அச்சம்பவத்தைக் கண்டதன் பேரில் சாட்சியம் அளித்தேன். இதில் களுத்துறைச் சிறைச்சாலைச் சுப்பிரிண்டன் தான் (லீலாசேன) படுகொலை செய்யக் காடையர்களை ஏவி விட்டுக், "கை கை தட்டியும், கை கட்டியும்... 12. 12. 1997 அன்று கொலை நடந்த சம்பவங்களையும் பார்த்துக் கொண்டு நின்றதாக மிக ஆணித்தரமாகக் கூறினேன். (தினக்குரல் 17. 02. 1998 - 04ம் பக்கத்தில் சாட்சியச் செய்தி உண்டு. ஏனைய பத்திரிகைகள் சமூகம் கொடுக்கவில்லை.)

எனது இடது காலில் வெடிக் காயத் தழும்பு தற்போதும் உள்ளது. எனது இடது கை மூட்டு முறிந்த நிலையில் தான் உள்ளது. இது கடமை நேரத்தில் விபத்தில் நடந்தது. கை நேராக இல்லை. மருத்துவ சபை (ஆநனைஉயட டீழயசன) 12. 05. 1996 உடற் பரிசோதனை செய்து, நஷ்ட ஈட்டுக்குச் சிபாரிசு செய்தது. கை மூட்டை நிமிர்த்த, வெளிநாடு தான் செல்ல வேண்டும், 05 இலட்ச ரூபா செலவாகும். கைதின் போதும், தடுப்பின் போதும் மேலதிகமாக, ஒன்பதுக்கும் மேற்பட்ட உடற் காயங்கள் 12. 05. 1997க்கும் 04. 07. 1997க்கும் இடையான நாட்களில் எஸ். ஐ. யூ., சீ. எஸ். யூ. ஆகியோரால் ஏற்படுத்தப்பட்டன. எனது மூக்கு, மூன்று முறை உடைக்கப்பட்டது. இரத்தம் பல முறை ஓடியது. நான் தன்மானம் இழக்கவில்லை. புலி என்று முத்திரை பதிக்கப்பட்டேன். எஸ். பீ. மீகொட தான் மேற்படி கைதின் பின்னர், எனக்கு வினை விதைக்கத் தூண்டியுள்ளதாகநான் அறிந்தேன். ஒருவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழோ அல்லது அவசர கால விதியின் கீழோ கைது செய்யப்பட்டால் அந்தப் பிரிவின் ஏ. எஸ். பீ. அல்லது எஸ். பீ. வந்து உரியவரைப் பார்வையிடல் வேண்டும். ஆனால், எனது கைதின் பின் அது கடைப் பிடிக்கப் படவில்லை. இதன் மூலம் பழி வாங்கல் தான் இது என்பது நிரூபணமாகிறது.

என்னை எவர் கொலை செய்தாலும், நான் மிரட்டல்களுக்கோ, காடைத் தனங்களுக்கோ அஞ்சப் போவதில்லை.

விடுதலையின் பின் 01. 11. 1998ல் திருமணம் செய்து கொண்டேன். 01. 09. 1999 அன்று எனக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்து இறந்து விட்டது. அது தான் கவலையாகவுள்ளது.

நான் மேதகு ஜனாதிபதிக்கு 17. 06. 1999ல் அவசரப் பதிவுத் தபால் ஒன்றின் மூலம் நடந்த சம்பவங்களையும், கண்டி எஸ். ஐ. யூவுக்கும் - நுவரெலியா ஓ. ஐ. சீக்கும் எதிராக முறையீடு செய்தேன்.(பதிவுத் தபால் இல 1431)

பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்குவுக்கும் கடிதம் அனுப்பியிருந்தேன்.

மேற்படி இருவருக்கும் அனுப்பிய கடிதத்தில், எனது மீள் சேவையைக் கோரியதோடு, ஓ. ஐ. சீ. பொன்சேகாவால் நுவரெலியா பிரதம மந்திரி வாசஸ்தலத்தில் 1997 பங்குனியில் (அவரால்) நடத்தப்பட்ட விபச்சாரச் சம்பவத்தையும், பாலியல் நடத்தையையும் சுட்டிக் காட்டியிருந்தேன்.

மேற்படி சம்பவமும், நுவரெலியா எஸ். பீ. புலிகளுக்குப் பாஸ் வியாபாரம் செய்ய என்னை வற்புறுத்தியதும், நான் மறுத்தது பற்றிச் சுட்டிக் காட்டியும் இருந்தவை பற்றியும் எனது முறையீட்டுக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

ஜனாதிபதி செயலகத்திடமிருந்தும், பொலிஸ் மா அதிபரிடமிருந்தும் முறையே எனக்கு, எனது முறையீட்டுக் கடிதம் கிடைத்தது பற்றிய பதில் கடிதங்கள் கிடைக்கப் பெற்றன. (பதில் கடிதப் பிரதிகளைத் தங்களுக்கு அனுப்புகிறேன்)

ஆனால், ஜனாதிபதி செயலகம், பொலிஸ் மா அதிபருக்கு விசாரணை செய்யும்படி உத்தரவு பிறப்பித்துள்ளது. அதேபோல், ஐ. ஜீ. பீயும், கண்டி டீ. ஐ. ஜீஐ விசாரணை செய்யும்படி கடித மூலம் கட்டளை பிறப்பித்தார்.

ஈற்றில், எல்லாம் மறைக்கப்படுகின்றன, எனக்கு நீதி கிடைக்கவில்லை. எனது மேற்படி விடயங்களை எம். பீக்களான ஜோசப் பரராஜசிங்கம், த. சித்தார்த்தன், செ. அடைக்கலநாதன், நிஹால் கலப்பத்தி ஆகியோருக்கும், முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பியும் இருந்தேன், பலனில்லை.

பொன்சேகா, மீகொட ஆகியோர் இப்போது பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள். ஒருவர் ஓ. ஐ. சீ - சீ. எஸ். யூ. நுவரெலியா, மற்றவர் எஸ். எஸ். பீ. (ஹட்டன்) ஆகத் தற்போது உள்ளார்.

கண்டி எஸ். ஐ. யூவில் வைத்து, என்னைத் தாக்கி, வதை செய்து கொண்டிருந்த போது, என் கண் முன்னால், இரு பெண் பிள்ளைகளைக் கொண்டு வந்து, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள். எஸ். ஐ. யூவுக்குப் பொறுப்பான ஓ. ஐ. சீ. போலீஸ் அன்று இதனையும் ஜனாதிபதிக்குச் சுட்டிக் காட்டியிருந்தேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ் கல்வி வீழ்ச்சி:

# மாணவர்களின் கல்வியில் யுத்த சூழ்நிலை ஏற்படுத்தும் தாக்கம்?

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருபது சத வீதமான மாணவர்கள், பாடசாலை செல்ல வேண்டிய வயதில் பாடசாலை செல்லாமல் உள்ளனர் என, அரச சார்பற்ற நிறுவனங்கள் சில மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இதற்கான காரணங்கள் என்ன என யாழ்ப்பாணத்திலுள்ள கல்விமான்கள் சிலருடன் கலந்துரையாடியபோது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இவை.

***பேராசிரியர் ஆறுமுகம்:***

***யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கல்வியியற் துறைத் தலைவர்***

இந்த இருபது வீதம் என்பது யாழ். மாவட்டம் முழுவதையும் அடக்குகிறது. இதில் பின் தங்கிய கிராமங்களும் உள்ளன. பின் தங்கிய கிராமங்களில், பிள்ளைகள் போய்க் கல்வி கற்கக் கூடியளவு பாடசாலைகள் உள்ளனவா என்பது கேள்விக் குறி. அத்துடன் வாழ்க்கை, பொருளாதாரப் பிரச்சினைகள், அபிலாஷைகள் இதுவும் பிள்ளைகள் பாடசாலை செல்வதைப் பாதிக்கும் அல்லது நெறிப்படுத்தும் காரணமாயிருக்கும்.

கல்விக்கென்று இலக்குகள் இல்லை. பெற்றோர் தான் இலக்குள்ளவர்களாயுள்ளனர். நகர்ப்புறப் பெற்றோர் தமது பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்ற அவாவுடன் காணப்படுகின்றனர். இதனால் அவர்கள் தமது பிள்ளைகளைக் கட்டாயமாகப் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பின் தங்கிய பிள்ளைகளுக்குப் பெரிதாகச் சிந்தனைகள் எதுவும் கிடையாது. சாதாரணமாக ஒரு ஆசிரியரின் சிந்தனைக்கும், ஒரு கூலியாளின் சிந்தனைக்கும் இடையில் வித்தியாசமுண்டு. ஏழை மக்கள் தொழிலைப் பற்றித் தான் சிந்திப்பார்கள். இதனால் பின் தங்கிய பகுதிகளில் பாடசாலை செல்பவர்கள் எண்ணிக்கை குறைவு.

பெற்றோரின் உந்துதல் காரணமாகக் கிராமப் புறங்களில் பிள்ளைகள் பாடசாலை செல்லாமல் விடுகின்றனர். அவர்கள் கல்வியைப் பற்றிச் சிந்திப்பதில்லை. வாழ்க்கையைப் பற்றித் தான் சிந்திக்கிறார்கள். தனது மகனையும், தன்னுடன் கூட்டிச் சென்றால் அன்றைய தினம் நூறு ரூபாய் கிடைக்கும் என்றே அவர்கள் யோசிக்கிறார்கள்.

இலவசக் கல்வி என்று சொல்கிறோம். யதார்த்தத்தில் இலவசக் கல்வி என்பது இல்லை. மாணவர்களிடம் கல்விக்குக் கட்டணம் அறவிடுவதில்லை. இலவசமாகப் பாட நூல்கள், சீருடைகள் என்பவற்றை வழங்குகின்றோம். ஆனால், எல்லா வகுப்புகளிலும், எல்லா மாணவர்களுக்கும், எல்லாப் பாடங்களுக்கும் பாட நூல்கள் இல்லை. கல்வியில் கவர்ச்சி என்ன விதத்தில் வழங்கப்படுகிறது. பிள்ளைகள், பாடசாலை செல்வதற்குரிய சட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பாடசாலைக்குப் போகாத பிள்ளைகளுக்கு, அரசு என்ன செய்துள்ளது. இவர்கள் மத்தியில் பிரச்சாரம் தேவை.

ஐந்து வயது பூர்த்தியான பிள்ளைகள் பாடசாலை செல்லலாம் எனச் சட்டம் உள்ளது. ஆனால், ஐந்து வயது பூர்த்தியான பிள்ளைகள் கட்டாயம் பாடசாலை செல்ல வேண்டுமென்று சட்டம் இல்லை. பிள்ளைகள் பாடசாலை செல்லாததற்கு யார் பொறுப்பு ? பெற்றோர் தமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். கட்டாயக் கல்வி என்று சட்டமியற்றினால் மட்டும் போதாது, அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பிள்ளைகள் பாடசாலை செல்வதில், பெற்றோர், ஆசிரியர், அதிபர் என்போர் அக்கறை செலுத்த வேண்டும். பாடசாலையில் இடாப்புப் பதிந்து, எத்தனை நாட்கள் வரவு என்று தேர்ச்சி அறிக்கையில் போட்டால் மட்டும் போதாது. பெற்றோர், ஆசிரியர், அதிபர் என்போருக்கிடையே விளக்கமான புரிந்துணர்வுடனான, நெருக்கமான உறவு வேண்டும். ஆனால், இன்றைய ஆசிரிய சமுதாயத்தில் ஆசிரியர்கள், ஆசிரியத் தொழிலைத் தொழில் வாய்ப்புள்ள ஒரு தொழிலாக எடுப்பதும் ஒரு காரணம். தொழில் ஒன்றை எடுப்பது வேறு, தொழில் வாய்ப்பு வேறு. யாழ்ப்பாணப் பாரம்பரியம் கல்விக்கெனக் கல்விக் கூடாக வளர்ந்த ச்மூகம். சமூக மட்டத்தில் கரிசனை போதாது. பெற்றோர், ஆசிரியர் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்களுக்கூடாக ப் பிரச்சார ரீதியான செயற்பாடு வளர்க்கப்பட வேண்டும். பிள்ளைகள் பாடசாலை செல்லாமல் விடுவதற்குப் போர்க் காலச் சூழலும் ஒரு காரணம்.

***சோ. பத்மநாதன் :***

***பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர்***

பிள்ளைகள் பாடசாலைக்குப் போகாமல் விடுவதற்கு, யாழ்ப்பாணம் நேரடியான போர்ச் சூழல் உள்ள இடமாகக் காணப்படுவதும் ஒரு காரணம். இங்கு ஒரு அசாதாரண சூழல் நிலவுகிறது. அத்துடன் நிரந்தர இடப்பெயர்வும் ஒரு காரணம். உதாரணமாக, வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து, அன்றாடம் காய்ச்சி வாழ்க்கை நடாத்துபவர்கள் விறகு வெட்டியோ, சந்தை வியாபாரம் செய்தோ வாழ்க்கைப் பிரச்சினையுடன் போராடிக் கொண்டிருக்கும்போது, தமது பிள்ளைகள் ஏதாவது உழைத்துக் கொண்டு வருவார்களா என்று தான் எதிர்பார்க்கிறார்கள். பிள்ளைகள் பாடசாலை செல்லாமல் விடுவதற்கு, வறுமையும் ஒரு காரணம். குடும்பத் தலைவர் மரணமடைந்தால் அல்லது அங்கவீனமடைந்தால் இவர்களின் பிள்ளைகள் கூலி வேலைக்குச்



செல்கிறார்கள்.

பெற்றோரின் மண விலக்குக் காரணமாகத் தாய் மறுமணம் செய்து கொண்டால், குழந்தையின் கல்வி பாதிக்கப்படுகிறது. அத்துடன் பாடசாலைகளின் இடப்பெயர்வும், மாணவர் வரவு குறைவதற்கு ஒரு காரணம்.

***இதற்குரிய தீர்வு என்னவென நீங்கள் கருதுகிறீர்கள்?***

மோதல், தாக்குதல் தொடரும் வரை தீர்வு இல்லை. வலிவடக்கு மக்கள் பத்து வருடங்களாக இடப்பெயர்வு வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இளவயதினருக்கு, மாணவப் பருவம் முக்கியமான பருவம். கடந்த பதினேழு வருடங்களாக, இவர்கள் போருடன் வாழ்ந்து வருகின்றனர். மாணவர்களுக்குப் புற நடவடிக்கைகள் இல்லை. விளையாட்டுப் போன்றவற்றில் ஈடுபட நேரமில்லை. ஆறு மணிக்குள் ஊரடங்கி விடுகிறது. மாணவருக்கு ஆரோக்கியமான சூழல் இல்லை. சதா அச்சம், பீதி, பதற்றம், நிச்சயமின்மை, அதிர்ச்சி, சந்தேகம். இவற்றுக்கு மத்தியில் பிள்ளைகளால் முழு மனதுடன் படிப்பில் ஈடுபட முடியாது. குடும்பத்தில் பாதிப்பு ஏற்பட்டால் அது பிள்ளையையும் பாதிக்கும். ஆரோக்கியமான சூழல் இருக்கும்போது மிகுதி விடயம் தானாக வரும். ஊரடங்கு மூலம் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுவதால், ஆசிரியர்களுக்கும் அழுத்தம் ஏற்படுகிறது. பலவித அழுத்தங்கள் மூலம் பெற்றோர் பாதிக்கப்படுகின்றனர். இது பிள்ளைகளையும் பாதிக்கிறது.

***கலாநிதி சபா ஜெயராசா :***

***யாழ். பல்கலைக்கழகக் கல்வியியற் துறை விரிவுரையாளர்***

வறுமை, 'அறியாமை, பெற்றோர் ஊக்கமின்மை என்பன பிரதான காரணம் எனச் சொல்லப்பட்டாலும், எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை சிறப்பான காரணங்களும் உண்டு. அக்காரணங்கள் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டது முதல் இருந்து வருகின்றன. 1960ல் பாடசாலைகள் அரசால் பொறுப்பேற்கப்பட்டபோது, எமது கல்வி முறைக்குப் பலத்த அடி விழுந்தது. எமது பிரதேசத்தில் இயங்கி வந்த கொழும்புத் துறை, நல்லூர், திருநெல்வேலி, ஆசிரிய கலாசாலைகள் அரசாங்கத்தால் மூடப்பட்டன. இதன் காரணமாகப் பயிற்சி குலைந்தது. பயிற்றப்படாத ஆசிரியர்களைக் கொண்டு ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்குக் கல்வி புகட்டும் நடவடிக்கைகள் தொடங்கின. இதனால், பாடசாலையில் கற்பித்தல் வினைத் திறன் பெறப்படவில்லை. உளவியல் மயப்பட்ட கற்பித்தல் ஏற்படவில்லை. இதனால் வறிய மாணவர்களுக்குக் கல்வி நிலை போதுமானதாக அமையவில்லை. மறுபுறம், கல்வி முறைப் போட்டிகள், வறிய மாணவர்களுக்குப் பாதகமா யமைந்தன. போட்டிகளில் நின்று பிடிக்க முடியாமையால், மாணவர்கள் கல்விச் சுற்று வட்டத்திலிருந்து வீசப்பட்டனர். அடுத்து, பாடசாலைகள் வறிய மாணவர்களைக் கவர்ந்து, ஈர்க்கும் திறனை இழந்து விட்டன.

பாடசாலைகள், மாணவர்களைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு மறைமுகமாகவும், நேரடியாகவும் பல காரணங்களைக் கூறிக் கட்டணம் அறவிடும் முறை வளர்ச்சியடையத் தொடங்கியது. இதனால் இலவசக் கல்வி பொருண்மையற்றதாகியது. இதுவும் எமது பிரதேசத்தில், மாணவர்களைப் பள்ளியில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளில் இடையூறாயமைந்தது.

எமது பிரதேசக் கல்வியில் பின்னடைவு ஏற்படுவதற்கு இன்னொரு காரணம், முன் பள்ளிகள் ஒழுங்குற அமைக்கப்படாமை. முன் பள்ளிகள் தான் எமது கல்வியின் அடித்தளம் என்பது, இன்னமும் உணரப்படவில்லை. முன் பள்ளி மாணவருக்கு இலவசப் பாட நூல்கள், சீருடைகள் என்பன வழங்கப்படவில்லை. முன் பள்ளி ஆசிரியர்களை அரச சேவையில் சேர்க்கவும், அரசு இன்று வரை தயக்கம் காட்டி வருகிறது. வசதி படைத்த தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கும் இதேவேளை, ஏழைச் சிறுவர்கள் பயிலும் முன் பள்ளி ஆசிரியர்களுக்கு உதவி, நன்கொடை கிடைக்கவில்லை. எமது பிரதேசக் கல்விப் பின்னடைவுக்கு இதுவும் ஒரு அடிப்படைக் காரணியாக அமைகிறது.

புதிய பாடசாலைக் கட்டமைப்பு முறை, மேலும் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. பல பாடசாலைகள் மூடப்படவுள்ளன. புதிய ஒழுங்கமைப்பின் கீழ், பல பாடசாலைகள் தமது தனித்துவத்தை இழக்கவுள்ளன.

***இதற்குரிய மாற்று வழி என்னவென நீங்கள் கருதுகிறீர்கள்?***

உளவியல் பயிற்சி, ஆசிரிய பயிற்சியற்ற ஆசிரிய நியமனங்கள் நிறுத்தப்பட வேண்டும். போதிய பயிற்சியின்றி, ஆசிரியத் தொழிலில் யாரையும் ஈடுபடுத்தக் கூடாது. பாடசாலைகளில் வசதிக் கட்டணம், பிற கட்டணங்கள் அறவிடப்படுவது நிறுத்தப்பட வேண்டும். கல்வி, யதார்த்த நிலையில் இலகுவாக்கப்பட வேண்டும். உணவின்றிப் பாடசாலைக்கு வரும் மாணவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு அடிப்படை உணவு கொடுப்பதற்கு யாதாயினும் உபாயம் கையாளப்பட வேண்டும்.

***தமிழ் மாணவர்களிடையே எழுத்தறிவு வீதம் குறைந்துள்ளதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இதற்கு என்ன காரணம்?***

இடப்பெயர்வால் பாடசாலைகள் மூடப்பட்டமை. பாட நூல்கள், துணை நூல்கள் உரிய நேரத்தில் வந்து சேருவதில்லை. தமிழ் மக்களிடையே இன்று கல்வியை விட, வெளிநாட்டு மோகம், அந்நிய மோகம், பொருள் சார் மோகம் மேலோங்கி வருகின்றமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

***பஞ்சலிங்கம் :***

***முன்னாள் அதிபர்***

பிள்ளைகள், பாடசாலை செல்லாமல் விடுவ்தற்கு வறுமையும் ஒரு காரணம். அத்துடன் பெற்றோர் அக்கறையின்மைதான் முக்கிய காரணம். பாதிக்கப்பட்ட பிரதேசப் பிள்ளைகள், விரக்தியடைந்து காணப்படுகின்றனர். பெற்றோர் கல்வியறிவின்மை ஒரு காரணம். இதை விடச் சூழலும் ஒரு காரணம். இராணுவமயப்பட்ட சூழலில் பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதை விரும்பவில்லை. கல்விக்கு உவப்பான சூழல் இல்லை.

***இதற்குரிய மாற்று வழி என்ன?***

வதிவிடப் பாடசாலைகள் மூலம், வறிய பிள்ளைகளை வைத்துக் கல்வி புகட்ட வேண்டும். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், வேலணை மத்திய மகா வித்தியாலயம், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் போன்றன முன்பு இப்படித்தான் இயங்கின. வறிய பிள்ளைகள் அனைவருக்கும், புலமைப் பரிசில்கள் வழங்கப்படவேண்டும். இப்படியான திட்டம், ஆரம்பிக்கப்பட்டால் உதவி செய்வதற்கு ஆட்கள் உள்ளனர். அரச சார்பற்ற நிறுவனங்கள், ஆய்வுகளுக்குச் செலவு செய்யும் பணம், ஒரு மாதத்திற்குப் போதுமானது பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுப்பதற்கு. கவர்ச்சியான, வசதியான சூழல் அமைய வேண்டும். பாடசாலைச் சூழல் சரியாக அமைய வேண்டும். இங்கு பிள்ளைகள், பாடசாலைகளில் மலசல கூட வசதியின்றித் தவிக்கிறார்கள். கொழும்பில் பாடசாலைகளில், நீச்சல் தடாகம் அமைப்பது பற்றி யோசிக்கிறார்கள். வசதியற்ற மாணவர்களுக்கு, வசதி வாய்ப்புகள் உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும்.

***இராஜகோபால் :***

***யாழ். வலயக் கோட்டக் கல்வி அதிகாரி***

எமது நாட்டில் முறைசாரா முன் பள்ளிக் கல்வி முறை, 20 சத வீதமான மாணவர்கள் பாடசாலை செல்வதில்லை என்பதை ஆவணப்படுத்துகின்றது. ஏழை, வறிய பெற்றோரே பிள்ளைகளைப் பாடசாலை செல்ல விடாமல் மறிக்கின்றனர். உதாரணமாகச் செங்குந்தா இந்துக் கல்லூரி, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம், கந்தர் மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை போன்ற பாடசாலைகளில், நல்லூர்த் திருவிழாக் காலங்களில் ஐம்பது வீதமான மாணவர்கள் பாடசாலைக்கு வருவதில்லை. இவர்கள் கடலை, இனிப்புப் போன்ற வியாபாரங்களில் ஈடுபடுகின்றனர். அத்துடன் இன்றைய பரீட்சை முறைக் கற்பித்தல், அதிக செலவீனங்களைக் கொண்டுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்களில், இரண்டு வீதமானோர் மட்டுமே பல்கலைக்கழகம் செல்கின்றனர். இவர்களுக்காகத் தான், கல்வி மந்திரி தொடக்கம் அனைவரும் பாடுபடுகின்றனர். கவர்ச்சியான துணை விதிகள் இல்லை. பாடசாலைக்கு ஒரு மாணவன், இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக வராமல் விட்டால், அவனது பெயர் இராணுவ முகாமுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற விதிமுறை உள்ளது. இது பெற்றோரிடையே பயப் பிராந்தியை உண்டாக்கும்.

என்னிடம் ஒருமுறை ஒரு தாயார் சொன்னார், பிள்ளை பள்ளிக்கூடத்தால் வரும்வரையும், தான் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறேன் என்று.

***இதற்குரிய தீர்வு என்ன?***

அமைதி நிலவ வேண்டும். இராணுவத்தினர், மாணவர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது நிறுத்தப்பட வேண்டும். முறைசாராக் கல்வி மூலம் அவர்களுக்குக் கல்வி புகட்டப்பட வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# நாடு பின்னோக்கிப் பயணிக்கிறது!

வருணா கருணாதிலக்க
செயலாளர் சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம்

**தொடர்பூடகங்களுக்கெதிராகப் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தலை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

இந்த நிலைமை தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்ட நிலைமை என்று தான் கூறவேண்டும். அரசாங்கம் தனது எதேச்சாதிகாரத்தை மேற்கொள்வதற்குப் பெரும் தடையாகத் தொடர்பூடகங்கள் தான் உள்ளன. ஏனெனில், தேர்தலுக்குப் பின்னர் எதிர்க் கட்சி வீழ்ச்சியடைந்துள்ளது. அவர்களிடம் அரசாங்கத்தின் தவறான போக்குகளை தடுக்கும், கண்டிக்கும் வலு இல்லை. அதனால், அரசுக்கு எந்த-விதமான நெருக்கடிகளும் ஏற்படப் போவதில்லை. அரசுக்கு நெருக்கடி தரப் போவதும், தடையாக இருப்பதும்; சுதந்திரமாகச் செயற்படும் தொடர்பூடகங்கள் தாம். இதனால் தான் தொடர்பூடகங்களுக்கு எதிராகவும், குறிப்பாகச் சுதந்திர தொடர்பூடக முக்கியஸ்தர்களுக்கு எதிராகவும் மோசமான நடவடிக்கைகளில் அரசு இறங்கியுள்ளது.

**தனியார் தொடர்பூடகங்களுக்கும், தொடர் பூடகவியலாளர்களுக்கும் எதிராக அச்சுறுத்தல்களை மேற்கொள்ள அரசாங்கம், அரச தொடர்பூட கங்களைப் பயன்படுத்துகின்றதல்லவா?**

உலகத்தில் லேக் ஹவுஸ் போன்று அரசாங்கம், அரச சார்புப் பத்திரிகை நடாத்தும் நாடுகள் விரல் விட்டு எண்ணினாலும் பத்தை விட அதிகம் இல்லை. 90 சத வீதமான நாடுகளில் அரசாங்கத்திற்கெனப் பத்திரிகைகள் எதுவும் இல்லை. கட்சிகளுக்குச் சார்பான பத்திரிகைகள் இருந்த போதிலும், அரசாங்கத்திற்குச் சார்பான பத்திரிகைகள் இல்லை எனலாம். ஆனால், இலங்கையில் தான் இப்படியான நிலைமை காணப்படுகின்றது. இது அரசின் நிலைப்பாடுகளை, மக்களுக்குத் தெரியப்படுத்த இருக்கும் ஒரு சந்தர்ப்பம் என நியாயம் கூறப்படுகின்றது. இந்தியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற நாடுகளில் அரசாங்கங்கள் தமது நிலைப்பாடு-களைச் சுதந்திர தொடர்பூடகங்கள் மூலமே தெரியப்படுத்துகின்றன. இந்தியாவில் அரசாங்-கத்திற்கெனப் பத்திரிகைகள் இல்லை. ஆனால், இலங்கையில் - சிறிய சனத்தொகை உள்ள ஒரு நாட்டின் அரசாங்கத்திற்கு, எமது நாட்டு மக்களுடன் தொடர்பைப் பேண வழியில்லை-யெனக் கூற முடியுமா? இதற்குக் காரணம், ஆட்சிக்கு வரும் கட்சி, தனது கட்சிப் பத்திரிகைகளை நிறுத்தி விட்டுத் தொலைக் காட்சி, வானொலி, லேக் ஹவுஸ் போன்ற அரச ஊடகங்களைத் தமது கட்சி ஊடகங்களாகப் பயன்-படுத்திக் கொள்கின்றன என்பது தான். இதனை ஜனநாய நாடுகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை.

1994ல் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது, அரச கட்டுப்பாட்டில் இருக்கும் தொடர்-பூடகங்களைச் சுதந்திரமாக்குவதாகக் குறிப்பிட்டிருந்தது. ஆனால், இதுவரை அதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இனியும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையும் ஒரு துளி கூட எமக்கு இல்லை. இந்த நாட்டில், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் தொடர்பூடகங்கள் இருக்கும் வரை, இந்தப் பிரச்சினை இருந்து கொண்டே தான் இருக்கும் எனலாம். ஏனெனில், அரசாங்கம் அரச தொடர்பூடகங்களை எதிர்க் கட்சிகளையும், தமக்கு விரோதமானவர்களையும் வன்மையாகச் சாடுவதற்குப் பயன்படுத்திக் கொள்கின்றன.

**உலகத்திலேயே அதிக தொடர்பூடக சுதந்திரம் உள்ள நாடு இலங்கை என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். அதேபோல் வீதியில் இறங்கி அடிவாங்கி, துன்ப துயரப்பட்டு இன்று வரை அவரும், அவரது அரசாங்கமும் தொடர்பூடகச் சுதந்திரத்தைப் பாதுகாத்து வருவதாகவும் அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளாரே... ?**

எனக்கு ஒரு பழமொழி தான் நினைவுக்கு வருகின்றது. கிணற்றில் உள்ள தவளைக்கு அக் கிணறு தான் உலகமாம். அதுபோல் இந்த அரசுக்கும், கிணற்றுத் தவளை நிலை தான் ஏற்பட்டுள்ளது. இந்த உலகத்தின் நிலை பற்றிய சிறந்த விளக்கம் அற்றவர்கள் இதனை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், மற்றைய நாடுகளில் என்ன நடைபெறுகின்றன போன்ற சர்வதேச நிலைமை பற்றிய விளக்கம் உள்ளவர்கள் இந்தக் கருத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். 1994ல் வழங்கியதாகக் கூறும் தொடர்பூடகச் சுதந்திரத்தை, நடைமுறைப்படுத்தத் தேவையான கட்டமைப்பு மாற்றங்களைக் கூட அவர் செயற்படுத்தவில்லை. இவற்றையெல்லாம் செய்யாமல் தான், ஜனாதிபதி தொடர்பூடகச் சுதந்திரம் அதிகம் உள்ள நாடு இலங்கை எனக் குறிப்பிடுகின்றார்.

**நீங்கள் கூறுவதன்படி பார்த்தால், எந்த விதத்திலும் குறிப்பாக தொடர்பூடகக் கொள்கை தொடர்பாகவும் இந்த அரசாங்கம் ஐ. தே. க. அரசாங்கத்திற்குச் சளைத்ததல்ல என்று கூறலாமா?**

ஆம். எந்தவித வேறுபாடுகளும் இல்லை. இதற்கு ஒரு காரணமும் உண்டு. எமது கட்சி முறையில் எதேச்சாதிகாரத் தன்மையே காணப்-படுகின்றது, குறிப்பிட்ட கட்சித் தலைவரினால் எதனையும் செய்ய முடியும். ஸ்ரீ. ல. சு. கவை எடுத்துக் கொண்டால், 1977 தேர்தல் தொடக்கம் 1994 தென்னிலங்கைத் தேர்தல் வரை, சகல தேர்தல்களிலும் தோல்வியுற்ற போதிலும், பிரதமர் பண்டாரநாயக்க அவர்களைத் தலைமைப் பதவியிலிருந்து அன்று அகற்ற முடியவில்லை. 1994 தேர்தலின் பின்னர் ஐ. தே. க. சகல தேர்தல்களிலும் தோல்வியுற்ற போதிலும், ரணில் விக்கிரமசிங்ஹ அவர்களைத் தலைமைப் பதவியிலிருந்து அகற்ற இயலவில்லை. இதற்குக் காரணம் எமது கட்சி அமைப்பில் ஜனநாயகத் தன்மை இல்லாததே. இவ்வாறான நிலைமையில், இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் தத்தமது கட்சிகளுக்காகத் தான் செயற்படுகின்றனர். இது நமது நாட்டின் அரசியல் யாப்புக்கு முரணானது. இதனால் தான் மோதல்கள் ஏற்படுகின்றன.



வருணா கருணாதிலக்க

**ஆனால், சுதந்திரத் தொடர்பூடக இயக்கமும், இயக்கத்தைச் சேர்ந்த சிலரும் பொ. ஐ. மு. ஆட்சிக்கு வரப் பெரும் பங்களிப்புச் செய்திருந்தனர் அல்லவா?**

சுதந்திரத் தொடர்பூடக இயக்கம் 1994இலோ, அதற்கு முன்னரோ, பின்னரோ அல்லது எச்சந்தர்ப்பத்திலுமோ எந்த அரசாங்கத்திற்கும் நேரடியாக ஆதரவு அளிக்கவில்லை. எமது கூட்டங்களில் எந்தவொரு அரசியல்வாதியும் உரையாற்றியதில்லை. அத்துடன் எமது அமைப்பைச் சேர்ந்த எவரும், எந்தவொரு அரசியல் கட்சிக் கூட்டத்திலோ சுதந்திர தொடர்பூடக இயக்கம் சார்பாக உரையாற்றியதில்லை. சுதந்திரத் தொடர்பூடக இயக்கத்தைச் சேர்ந்த விக்ரர், சுனந்த, நான் ஆகியோர் தனிப்பட்ட ரீதியில் கட்சிகளுக்கு 1994ம் ஆண்டுத் தேர்தல்களில் ஆதரவு தெரிவித்திருந்தோம். இவையெல்லாம் தனிப்பட்ட ரீதியில் எனலாம். எனக்குத் தனிப்பட்ட ரீதியில் ஒரு கட்சிக்கு ஆதரவு தெரிவிக்கவும், வாக்குச் செலுத்தவும் உரிமை உண்டு. ஆனால், சுதந்திரத் தொடர்பூடக இயக்கம் என்ற வகையில் எந்த ஒரு கட்சிக்கும் ஆதரவு தெரிவிக்கவுமில்லை, ஒரு கட்சி சார்பாகச் செயற்படவுமில்லை. இவ்வாறு கூறப்படுவதற்குக் காரணம் சுதந்திரத் தொடர்பூடக இயக்கத்தில் இருந்த பலர் 1994 தேர்தலில் பொ. ஐ. முவுக்குச் சார்பாகச் செயற்பட்டதே. எனினும், இது தனிப்பட்ட ரீதியிலான ஆதரவு மட்டுமே எனலாம்.

**நீங்கள் தனிப்பட்ட ரீதியிலான ஆதரவு என்று கூறுகின்ற போதிலும், சுதந்திரத் தொடர்பூடக இயக்கத்தைச் சேர்ந்த சிலர் இன்றும் கூடப் பொ.ஐ.மு. அரசாங்கத்துடன் இணைந்துள்ளார்கள். 1994ல் தாம் வழங்கிய ஆதரவு நியாயமானதே என அவர்கள் இன்றும் கூட நியாயம் கூறிக் கொள்கின்றார்கள். இது பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன?**

எமது அமைப்பில் தொடர்பூடகத் துறையைச் சேர்ந்த எவரும் உறுப்பி-னர்களாக இணைந்து கொள்ளலாம். சுதந்திரத் தொடர்பூடக இயக்கத்தைச் சேர்ந்த பலர் தீர்வுப் பொதிக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். ஆனால், சுதந்திரத் தொடர்பூடக இயக்கம் ஆதரவு தெரிவித்ததில்லை. எமது அமைப்பில் இருக்கும் நபர்கள் தனிப்பட்ட ரீதியில் அரசியல் பற்றியோ, தீர்வுப் பொதி பற்றியோ பல்வேறுபட்ட கருத்துக்-களைக் கொண்டிருப்பவர்களாக உள்ளனர். ஆனால், அமைப்பு என்ற வகையில் ஒருமித்த கருத்துக் கொண்டவர்களாகவும், எமது நோக்கங்-களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுடனும் செயற்படுகின்றோம் என்றே கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

**தொடர்பூடகங்களுக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் அச்சுறுத்தல்களுக்குப் பின்னணி எதுவும் உள்ளது எனக் கருதுகின்றீர்களா?**

அரசாங்கத்திற்குக் காலத்துக்குக் காலம் பைத்தியம் பிடித்து விடுகின்றது. 1982ல் ஜே. ஆர். அரசாங்கம் "நக்ஸலைற் சதி" என்று கூறி, இன்றைய ஜனாதிபதியின் கணவரையும், இன்னும் சிலரையும் கைது செய்து பத்திரிகையாளர்களைப் பயமுறுத்திக், கருத்துக் கணிப்பை நடாத்தியது. இந்தக் கொலைச் சதிக் கதை, குண்டு வெடிப்பில் ஜனாதிபதியைக் கொன்றுவிட்டு, இராணுவ ஆட்சியை ஏற்படுத்த முயன்றனர் என்று கூறப்படுகின்றது. இந்த நாட்டில் பத்திரிகையாளர்கள் வெவ்வேறுபட்ட நிலைப்பாடுகளை எடுக்கின்றனர். ஒரு சிலர் சமாதானம் வேண்டுமென்கின்றனர். இன்னும் சிலர் யுத்தம் வேண்டுமென்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு பத்திரிகைகளும் ஒவ்வொரு கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால், கடந்த 20 ஆண்டுகளில் எந்தவொரு தொடர்பூடகவியலாளரும் இராணுவ ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்ததாக நான் அறியவில்லை. ஜனநாயகத்திற்கு முரணாகக் கதைத்த தொடர்பூடகவியலாளரோ, பத்திரிகைகளோ இல்லை எனலாம். இவ்வாறான நிலையில் சதி செய்தார்கள் என்று கூறப்படுவது மிகவும் கேலிக்குரியது.

அடுத்ததாக, நம் நாட்டில் தலைவர் ஒருவரை முதன்முறையாகக் கொலைசெய்ய எடுத்த முயற்சியும் இதுவல்ல. ஆனால், படுகொலையிலிருந்து தப்பித்தது இதுதான் முதன் முறை. இதற்கு முன்னர், காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி, பிரேமதாச ஆகியோர் கொல்லப்பட்டனர். ஆயினும், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் இது புலிகளினாலும், இராணுவத்தைச் சேர்ந்த சிலரினாலும், தொடர்பூடகவியலாளர்கள் சிலரினாலும், சிவில் அதிகாரிகள் சிலரினாலும் எதிர்க் கட்சியினர் சிலரினாலும், மேற்கொள்ளப்பட்ட சதியென்று ஒரு போதும் கூறியிருக்கவில்லை. நீங்கள் கேள்விப்-பட்டிருக்கிறீர்களா ? ஐயாயிரம் பேர் சேர்ந்து சதி செய்வது பற்றி. சதி என்று கூறினால், அது ஒரு சிலரினால் தீட்டப்பட்டதாகவிருக்கும். அரசாங்கம் கூறுவதன்படி, நாட்டில் இருக்கும் அனைவரும் சதி பற்றி அறிந்திருக்க, அரசாங்கம் மட்டும் சதி பற்றித் தெரியாமல் இருந்துள்ளது. உளவுச் சேவைக்கெனப் பல கோடி ரூபாய்களை அரசு செலவழிக்கின்றது. ஆனால், அவர்களுக்கும் இந்தச் சதி பற்றித் தெரியாதிருந்துள்ளது. மக்கள் ஆதரவு இல்லையென்று தெரியவரும் பொழுது தான் அரசாங்கம் இவ்வாறு சதிக் குற்றச்சாட்டுக்ளை முன்வைக்கின்றதெனலாம். 1982ல் பாராளுமன்றத் தேர்தலைச் சந்திக்க விரும்பாததினால் ஜே. ஆர். நக்ஸலைற் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

**ஜனாதிபதி இவ்வாறு திடீரென்று ஊடகவியலாளர்களை பெயர் சொல்லி நேரடியாகத் தாக்கிப் பேச வேண்டிய தேவை என்ன என்று நினைக்கிறீர்கள்?**

இது திடீரென்று எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று நான் கருதவில்லை. சுதந்திரத் தொடர்பூடகங்களுக்கும், அரசாங்கத்திற்கும் நேரடியான மோதல் ஏற்பட்டது, வட - மேல் மாகாண சபைத் தேர்தலின் பின்னராகும். வட - மேல் மாகாண சபைத் தேர்தலில் பாரியளவில் இடம்பெற்ற மோசடிகளைப் பற்றி அதிகம் பேசியது, தேர்தல் கண்காணிப்பாளர்களும், தொடர்பூடகவியலாளர்களும் தான். அரசாங்கம் இவர்கள் இரு சாரார் மீதும் அதிருப்தியை வெளியிட்டிருந்தது. அன்றிலிருந்து தான் இம் மோதல் ஆரம்பித்தது எனலாம். சுதந்திரத் தொடர்பூடகங்களைத் தடுக்காமல், அரசாங்கம் தான் விரும்பிய மாதிரிச் செயற்பட முடியாது. அரசாங்கத்தின் முக்கியமானவர்கள் செய்யும் மோசடிகள் பத்திரிகைகளில் வெளிவர வர, அரசாங்கத்திற்குப் பாதிப்பு ஏற்படும். இதனால் தொடர்பூடகங்களை மௌனமாக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு உள்ளது. இந்த நாட்டில் யாப்பின் மூலம் அதிக அதிகாரம் ஆளும் கட்சிக்குக் கிடைப்பதால், எப்பொழுதும் எதிர்க் கட்சி பலவீனமாகவே உள்ளது. இந்த நிலைமையில் தான் தொடர்பூடகங்கள், எதிர்க் கட்சியின் வேலைகளைச் செய்ய வேண்டியேற்படுகின்றது. கடந்த 20 வருடங்-களில் எதிர்க்கட்சிகள் பலமாக இருந்திருந்-தால் தொடர்பூட-கங்களுக்கு இவ்வா-றான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது எனலாம்.

**சுதந்திரத் தொடர்பூடக இயக்கம், ஜனாதிபதியின் சதிக் குற்றச்சாட்டுப் பற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இது பற்றி ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில், ஜனாதிபதியின் உரையை சுதந்திரத் தொடர்பூடக இயக்கம் திரிபுபடுத்தி உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது பற்றி?**

ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில், ஜனாதிபதி தொடர்பூடக வியலாளர்களைக் கொல்லாமல் செய்ய வேண்டியவற்றைச் செய்வேன் எனக் கூறியதாக நாம் குறிப்பிட்டிருந்தோம் எனத்

இந்த நிலைமை தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்ட நிலைமை என்று தான் கூறவேண்டும். அரசாங்கம் தனது எதேச்சாதிகாரத்தை மேற்கொள்வதற்குப் பெரும் தடையாகத் தொடர்-பூடகங்கள் தான் உள்ளன. ஏனெனில், தேர்தலுக்குப் பின்னர் எதிர்க் கட்சி வீழ்ச்சியடைந்துள்ளது. அவர்களிடம் அரசாங்கத்தின் தவறான போக்குகளை தடுக்கும், கண்டிக்கும் வலு இல்லை. அதனால், அரசுக்கு எந்தவிதமான நெருக்கடிகளும் ஏற்படப் போவ-தில்லை. அரசுக்கு நெருக்கடி தரப் போவதும், தடையாக இருப்பதும், சுதந்திரமாகச் செயற்படும் தொடர்பூடகங்கள் தாம். இதனால் தான் தொடர்பூடகங்களுக்கு எதிராகவும், குறிப்பாகச் சுதந்திர தொடர்பூடக முக்கியஸ்தர்களுக்கு எதிராகவும் மோசமான நடவடிக்கைகளில் அரசு இறங்கியுள்ளது.

⊃08

நன்றி - நூலகத்திட்டம்



## ஜனாதிபதித் தேர்தலில்
# தொடர்பு சாதனங்களின்
## பாரபட்சம்!

இலங்கையின் ஆறாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் ஜனாதிபதி தேர்தலின் போது பிரச்சார நடவடிக்கைகளுக்கென அரச தொடர்பூடகங்கள் பயன்படுத்தப்பட்ட முறை பற்றி அரச சார்பற்ற நிறுவனமான இன்போம் நிறுவனம் ஆய்வு ஒன்றை செய்துள்ளது. பிரபல சட்டத்தரணியான ஜே.சி.வெலியமுண அவர்களின் தலைமையில் பன்னிருவர் அடங்கிய குழுவொன்றினால் தகவல்கள் பெறப்பட்டு இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆட்டிகல் 19 அமைப்பு தேர்தல் காலத்தின் போது அரசு தொடர்பூடகங்களை எவ்வாறு கையாள வேண்டும் என குறிப்பிட்டுள்ளது தெரிந்ததே. குறிப்பாக தேர்தல் தொடர்பான செய்தி அறிக்கையிடலில் பக்கச் சார்பற்ற தன்மை பேணப்படல் வேண்டும். அதேபோல் எந்தவொரு கட்சியினாலும் தனிப்பட்ட வெறுப்பு விருப்புகளுக்காக தொடர்பூடகங்கள் பயன்படுத்தப்படக் கூடாது என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

1999 ஜனாதிபதித் தேர்தலில் அரசின் இலத்திரனியல் ஊடகங்களின் நடவடிக்கைகள் பற்றி தமது கருத்துக்களை தெரிவித்து, நோக்கங்களை தெளிவுபடுத்தும் இவ் இன்போம் நிறுவனம் இந்த ஆய்வின் குறிக்கோள், ஆட்சியிலிருக்கும் எந்தவொரு அரசாங்கமும் தேர்தல் காலத்தில் தமது பிரச்சார சாதனமாக அரச ஊடகங்களை பயன்படுத்திக் கொள்ளும் முறை பற்றி சிவில் சமூகத்திற்கு ஒரு விளக்க மளிப்பை ஏற்படுத்துதல் என தெரிவித்துள்ளது. அத்துடன் அரச ஊடகங்களை அரசியல் பிரச்சார சாதனமாக தேர்தல் காலங்களில் பயன்படுத்துதலை தவிர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி மக்களை விழிப்புணர்வூட்டுதல் அதன் நோக்கம் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த ஆய்வில் 1999 டிசம்பர் 01ம் திகதி தொடக்கம் டிசம்பர் 20 வரை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி சேவை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், லக்ஹண்ட வானொலி சேவைகளில் ஒலி/ஒளிபரப்பு செய்யப்பட்ட சிங்கள, தமிழ், ஆங்கில நாளாந்த செய்திகள் மற்றும் தேர்தலை நோக்காகக் கொண்ட நிகழ்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

செய்திக்கான மதிப்பு கருத்திலெடுக்கப்படாது தேர்தல் சம்பந்தமான செய்திகளை பிரசுரிக்க அரச ஊடகங்கள் அக்கறை செலுத்தியுள்ளன என்றும், அனைத்து ஊடக நிறுவனங்களும் பொ.ஐ.மு வேட்பாளர் சந்திரிகா அவர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கியுள்ளதுடன், பிற வேட்பாளர்களுக்கு இடமளித்தலில் வேற்றுமை காட்டப்பட்டுள்ளது என்றும், தேர்தல் பிரச்சார செய்திகளில் பொ.ஐ.மு வேட்பாளருக்கு அதிக சார்பாக செய்திகள் அமைந்துள்ளன என்றும், பிரதான எதிர் தரப்பு வேட்பாளருக்கு எதிராக செய்திகள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை, மற்றும் திரிபுபடுத்தல்கள், அசமத்துவம் பயன்டுத்தப்பட் டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் நாடு முழுவதும் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகள் தொடர்பாக அக்கறையீனம் காட்டப் பட்டுள்ளதுடன், ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் சம்பந்தப்பட்ட வன்முறைகள் மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுத்து அறிக்கையிடப்பட்டிருக்கின்றன.

1999-12-18 அன்று இடம்பெற்ற குண்டுவெடிப்பின் பின்- தேர்தல் பிரசாரங்கள் தடை செய்யப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி பல தடவைகள் தொலைக்காட்சியில் உரையாற்றியது ஆய்வில் கவனத்திலெடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் இந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைச்சர்கள் கலந்துகொண்ட விசேட கலந்துரையாடல்களும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

அறிக்கையின் இறுதியில் சில விதந்துரைப்புகளை செய்திருக்கும் குழு சில யோசனைகளையும் முன்வைத்துள்ளது. செய்திகளை வெளியிடுவதில் கடைபிடிக்கப்பட வேண்டிய கொள்கைகளை, கடமையில் ஈடுபடும் அனைவரும் பொறுப்புடன் நினைவிலிருத்த வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆய்வின் போது பெறப்பட்ட முடிவுகள் மேலே காட்டப்பட்டவாறு அட்டவணைகளாக தொகுக்கப்பட்டுள்ளன.

**தேர்தலில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒதுக்கப்பட்ட கால அளவு**

| | சந்திரிகா | ரணில் | நந்தன | வாசு | ராஜீவ் | ஆரியவங்க | வீரக்கொடி | ரஸ்ஃல் | கமல் | டெனிசன் | ஹட்சன் | ரஞ்ஜித் | சந்திரிகா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ.ரூ.கூ (சிங்களம்) | 209-17 | 31-42 | 33-45 | 11-16 | 00 | 00 | 00 | 3-20 | 00 | 2-15 | 00 | 00 | 00 |
| இ.ரூ.கூ (ஆங்கிலம்) | 135-01 | 27-05 | 26-33 | 08 53 | 00 | 00 | 01-11 | 02-45 | 00 | 01-19 | 00 | 00 | 00 |
| ஐ.ரி.என் (சிங்களம்) | 167-17 | 42-14 | 19-00 | 02-20 | 00 | 00 | 00-55 | 00 | 00 | 00 10 | 00 | 01- | 00 |
| ஐ.ரி.என் (தமிழ்) | 67-00 | 26- | 15-15 | 01-30 | 00 00 | 00 | 01- | 00 00 | 00 | 01- | 00 00 | 00 | 00 |
| ஐ.ரி.என் (ஆங்கிலம்) | 88-04 | 31-03 | 14-06 | 03-01 | 00 | 00 | 00-31 | 00 | 00 | 01-10 | 00 | 00-21 | 00 |
| இ.ஒ.கூ (சிங்களம்) | 132-33 | 25-26 | 08-26 | 01-58 | 00 | 00-52 | 00-30 | 00-57 | 00 | 01-10 | 00 44 | 01-44 | 00 |
| இ.ஒ.கூ (தமிழ்) | 131-00 | 32-30 | 07-00 | 03-30 | 00 | 00 | 01-00 | 00 | 00 | 00 | 00 | 00-30 | 00 |
| இ.ஒ.கூ (ஆங்கிலம்) | 285-06 | 20 | 07-38 | 02-46 | 00 | 00 | 00- | 00 35 | 00 | 00 | 00 | 01- | 00 34 |
| லக்ஹண்ட | 165-19 | 38-52 | 07-12 | 00 | 01-35 | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 00-38 |

(இங்கு நேரம் அளவு நிமிடங்களில் வினாடிகளில் தரப்பட்டுள்ளன)

**பொ.ஐ.மு, பொ.ஐ.மு அல்லதோருக்கென ஒதுக்கப்பட்ட செய்தி எண்ணிக்கை மற்றும் நேரம் பற்றிய ஒப்பீடு**

| சேவை | பொ.ஐ.மு செய்தி அளவு | ஒதுக்கப்பட்ட நேரம் | பொஐமு செய்தி அளவு | பொ.ஐ.முஅல்லாதவர் ஒதுக்கப்பட்ட நேரம் |
|---|---|---|---|---|
| இ.ரூ.கூ, சிங் | 71 | 207 நிமி-17வி. | 43 | 84நிமி-08வி |
| இ.ரூ.கூ, ஆங் | 126 | 186நிமி-04வி. | 41 | 70நிமி-24வி |
| ஐ.ரி.என், சிங் | 97 | 167நிமி-17வி. | 39 | 73நிமி-09வி |
| ஐ.ரி.என், தமிழ் | 46 | 71நிமிடங்கள் | 26 | 51நிமி-04வி |
| ஐ.ரி.என், ஆங் | 59 | 88நிமி-04வி. | 35 | 50நிமி-12வி |
| இ.ஒ.கூ,சிங் | 88 | 132நிமி-33வி. | 51 | 16நிமி. |
| இ.ஒ.கூ, தமிழ் | 104 | 139நிமி-33வி. | 40 | 55நிமி. |
| இ.ஒ.கூ, ஆங் | 164 | 285நிமி-06வி. | 98 | 33நிமி-46வி |
| லக்ஹண்ட | 90 | 128நிமி-19வி. | 66 | 57நிமி- 5வி |

**ஒவ்வொரு வேட்பாளர்களினாலும் பதிலளிக்கவென தனது எதிர்தரப்பு வேட்பாளருக்கு ஒதுக்கிய கால அளவு**

| | சந்திரிகா | ரணில் | நந்தன |
|---|---|---|---|
| இ.ரூ.கூ (சிங்களம்) | 07-20 | 112-05 | 00 |
| இ.ரூ.கூ (ஆங்கிலம்)57 | 00-02 | 98- | 00 |
| ஐ.ரி.என் (சிங்களம்) | 18-22 | 126-01 | 02-20 |
| ஐ.ரி.என் (தமிழ்) | 02-30 | 16-03 | 00 |
| ஐ.ரி.என் (ஆங்கிலம்)34 | 01-36 | 18-02 | 02- |
| இ.ஒ.கூ (சிங்களம்) | 00 | 51-45 | 00 |
| இ.ஒ.கூ (தமிழ்) | 01-00 | 43-00 | 02-02 |
| இ.ஒ.கூ (ஆங்கிலம்)23 | 10-20 | 66-10 | 00- |
| லக்ஹண்ட | 19-13 | 36-53 | 03-06 |

# நாடு பின்னோக்கி....

தெரிவிக்கப்பட்டிருந்தது. நாங்களும், அதனை ஏற்றுக் கொள்கின்றோம். ஜனாதிபதி நான் ஐ. தே. கவினரைப் போல் தொடர்பூடகவியலாளர்களைக் கொல்ல மாட்டேன் என்று நான்கு, ஐந்து தடவைகள் மீள மீளக் குறிப்பிட்டிருந்தார். எனது தர்க்கம் என்னவெனில், கொலை செய்யும் எண்ணம் இல்லாதவர்கள் ஒருபோதும் கொலை செய்யப் போகிறேன் எனக் கூறமாட்டார்கள் என்பது தான். கொல்லமாட்டேன் எனின், கொல்ல மாட்டேன் எனக் கூறவேண்டும். கொல்ல மாட்டேன் எனத் தொடர்ச்சியாகக் கூறும்போது, மக்கள் பீதியடைவர் என்பது உறுதி. ஜனாதிபதி செயலகத்தில் உள்ளவர்களுக்கு ஆங்கிலம் புரியாவிட்டால், சிங்களத்தில் வாசித்து அறிந்து கொள்ள வேண்டும். நாம், கொலை செய்யாமல் மற்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் என்று ஜனாதிபதி கூறியிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தோம். மாறாக, ஜனாதிபதி கொலை செய்யப் போகிறார் என்று ஒரு போதும் தெரிவித்திருக்கவில்லை.

**ஜனாதிபதியின் பேச்சுக் குறித்து மறுப் பறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளீர்கள். உங்களது அடுத்த நடவடிக்கை என்ன?**

சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப நாம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்கின்றோம். நாம் வெளிநாட்டு அமைப்புக்களான ஆட்டிகிள் 19 போன்ற பல சர்வதேச அமைப்புகளுடன் இணைந்துள்ளோம். இவை தொடர்பூடகச் சுதந்திரத்தைப் பேணுமாறு அரசுக்கு அழுத்தம் வழங்கி வருகின்றன. இவ்வாறு சர்வதேச மட்டத்தில் ஏற்பட்ட அழுத்தம் காரணமாகவே, சதிக் குற்றச்சாட்டின் பேரில் தொடர்பூடகவியலாளர்களைக் கைது செய்ய இயலாமல் போனது எனலாம். ஜனாதிபதி செயலகம், சுடச்சுட அறிக்கையை வெளியிடக் காரணமாகியதும் இந்த நிலைமை தான்.

**குமார் மீதான படுகொலையும் தொடர்ந்து எம்.ரி.வி.. ராவய போன்ற தொடர்பூடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்களும். இலங்கை மீண்டும் பிரேமதாச யுகத்தை நோக்கிப் பயணிக்கின்றமையைக் கோடி காட்டுகின்றதா? இதனை எதிர்காலத்தில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் ஒடுக்கு முறைக்கு உள்ளாவதற்கான ஒரு அடையாளமாகக் கொள்ளலாமா?**

இது பின்னோக்கிப் பயணிக்கும் ஒரு பயணம் என்றே நான் கருதுகின்றேன். இந்தப் பயணம் எங்கு போய் முடிவடையும் என்று தீர்மானிக்க முடியாது. பிரேமதாச யுகத்துக்கா அல்லது அதற்கு அப்பாலும் செல்லுமா என்றும் கூறமுடியாது. பெரும்பாலும் எமது நாட்டில் ஆட்சிக்கு வரும் கட்சிகள், நாட்டு முன்னேற்றத்திற்காக ஒருபோதும் செயற்படுவதில்லை. பிற நாடுகள் அரசியல், பொருளாதார, சமூக மட்டங்களில் முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல, எமது நாடு பின்னோக்கிப் பயணிக்கின்றது. நாம், முன்னைய அரசாங்கம் செய்த தவறுகளைத் தான் கற்றுக் கொள்கின்றோம். அவர்கள் நக்ஸலைற் என்றனர். இவர்கள் சதி என்கின்றனர். பிரேமதாச தொடர்பூடகவியலாளர்களைப் பயமுறுத்தினார். அவ்விதம் நாமும் பயமுறுத்துவோம் என்றே எண்ணுகின்றனர். எனவே, நாடு மிகவும் மோசமான, பயங்கரமான கட்டத்தை நோக்கிப் பயணிக்கின்றது என்பது தெட்டத் தெளிவாகின்றது.

**குமார் அவர்கள் கொழும்பிலிருந்து கொண்டு புலிகளை ஆதரித்து வெளிப்படையாகப் பேசியவர். இது அவரது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் எனலாம். இதன்படி அவர் மீதான படுகொலை யைக் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மீதான ஒரு அச்சுறுத்தலாகக் கொள்ளலாமா?**

ஆம், அவ்வாறே கருதிக் கொள்ளலாம். குமார் அவர்கள் கொழும்பில் இருந்து கொண்டு துணிந்து, பயந்தவர்களுக்காகக் குரல் கொடுத்தவர். புலிகளுக்கு ஆதரவாகக் கதைப்பது சட்ட விரோதமானது என இலங்கைச் சட்டத்தில் இல்லை. அவர் புலிகளை விடத் தனி அரசொன்றை உருவாக்குவதற்கான உரிமைக்கு ஆதரவாகவே தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். நம் நாட்டில் இவ்விடயம் பற்றிக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்குத் தடையில்லை. குமாரின் ப்டுகொலையினால் மிகவும் மோசமான விடயங்கள் நடைபெறப் போகின்றன் என உணரலாம். ஒருவர் தான் கொண்டிருக்கும் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடவிருக்கும் உரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. குமாரின் கருத்துக்கள் தொடர்பாக எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், அவருக்கு, அவரது கருத்துக்களை வெளியிடும் உரிமை உண்டு. அவரது கருத்துக்களினால் மக்கள் ஆத்திரமுற்றனர், அவரை விமர்சித்தனர். ஆனால், அவருக்குள்ள கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தைப் பற்றி எவரும் கதைக்கவில்லை. இவ்வாறு கதைத்தால் உங்களுக்கும் இப்படித்தான் நடக்கும் என்ற கருத்து, இங்கு இந்தப் படுகொலையினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. தனியரசு பற்றிக் கதைப்பது இந்நாட்டில் பயங்கரமாக மாறியுள்ளது. இப்படிக் கதைப்பவர்களுக்கு இது தான் நிலைமை. இது ஒரு பாரிய பிரச்சினை என்றே நான் கருதுகின்றேன். எந்தவொரு இனத்திற்கும், தமக்கான அரசு ஒன்றை அமைத்துக் கொள்ள உரிமை இருக்க வேண்டும். இதனை ஆயுதம் மூலம் பெறுவதனை நான் வன்மையாக எதிர்க்கிறேன். இது எனது தனிப்பட்ட கருத்து.

தீர்வுப் பொதிக்கு எதிரானவர்கள் பேசக் கூடாது. பேச்சுரிமை இல்லை, மீறிக் கதைத்தால் கொல்வோம் என்றால், இந்த நாட்டின் நிலைமை என்ன? அரசாங்கத்திற்கு விரோதமானவர்கள் கொல்லப்படுவார்கள் என்றால் என்ன செய்வது? பார்க்கப் போனால் இவ்வாறான நிலைமையை நோக்கித் தான் நாடு செல்கின்றது எனலாம்.

அடுத்ததாக, கடந்த பல வருடங்களில் பலர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களை எப்படி, எவர் கொன்றார்கள் என ஒருவருக்கும் தெரியாது. ஆனால், இது தான் முதல் தடவை, ஒரு குழு கொலைக்குப் பொறுப்பேற்றிருப்பது. ஏன் ஒரு குழு இப்படிப் பொறுப்பேற்றிருக்கின்றது என்பது முக்கியமான கேள்வி. ஒருவரைப் பயமுறுத்த இந்தக் குழுவின் பெயரைக் குறிப்பிட்டுப் பயமுறுத்துவது போதுமானது. இங்கு பயமுறுத்தலும், அச்சுறுத்தலும் தான் முக்கியமானது. குமார் போன்று கதைக்கும் ஒருவரைக் கொல்லத் தேவையில்லை. ஒரு கடிதமே போதும் அவரை மௌனியாக மாற்ற. இது தான் இந்தக் குழுவின் தேவை. இந்த நிலைமை இத்துடன் முடிந்து விடாது இன்னும் தொடரும் என்பதே இதன் அறிகுறி.

**தொடர்பூடகக் கொள்கையை மீளமைப்பது தொடர்பாக ஆர்.கே. டபிள்யூ. குணசேகர தலைமையில் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு அறிக்கை ஒன்றும் தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கையை நடைமுறைபடுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?**

நான் நினைக்கின்றேன். இது நாம் செய்த மாபெரும் தவறு என்று, இது பித்தலாட்டம். அறிக்கை தயாரித்து விட்டுக் கதிரையில் அமர்ந்து கதைக்கிறார்கள், அவ்வளவே. இந்த அரசின் கீழ், கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பூடகங்கள் தொடர்பாக ஏற்படும் என நாம் இனியும் ஒரு போதும் நம்பப் போவதில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# "தொண்டை முள்" ஆகி விட்ட ஊடகங்கள்

**சனாதிபதியின்**

**சனவரி 3ம் திகதிய**

**தொலைக்காட்சிப் பெரும்பேருரை பற்றிய**

**ஒரு சிறு குறிப்பு:**

இலங்கையின் நடப்பு அரசியலில் இந்த உரை மிக மிக முக்கியமான தொன்றாகக் கருதப்படுவதில் ஆச்சரியமில்லை. அந்த நிகழ்ச்சி எடுத்துக் கொண்ட நேரமும், அதன் தொகுநிலை அர்த்தங்களும் முக்கியமானவை.

ஒரு தொடர்பியல் நிகழ்ச்சி எனும் வகையில், அது உண்மையில் ஒரு "நிகழ்வே" (சாதாரண நிகழ்ச்சி அல்ல.) மூன்று மணித்தியாலங்கள் பதினைந்து நிமிட நேரம், இருவருக்கு முன்னால் (அதில் ஒருவர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பொறுப்பாளர்) நடத்தப்பெற்ற அந்த உரை ஒளிபரப்பின் பொழுது தொகுத்து அளிக்கப்படாது (எடிற்றிங் செய்யப்படாது) உள்ளவாறே அளிக்கப்பட்டது போலத் தெரிகிறது.

ஒளிபரப்பின் பொழுது கமராக்களுக்கு அப்பால் நின்ற ஒரு அமைச்சரை 'விளித்துக் கூறியதும் ("எஸ்.பி. சரியா") அப்படியே வந்து விட்டது. ஒளிபரப்பு ஊழியர்களுக்குக் கை வைக்கப் பயமாக இருந்திருக்கும்.

ஒரு நிலையில் இது உலக சாதனைகளில் ஒன்றாகக் கூட இருக்கலாம். மூன்று மணித்தியாலங்கள் தொடர்ந்து ஒளி/-ஒலிபரப்புச் செய்து கொண்டிருந்த அரசத் தலைவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள்.

அந்தப் பேருரையிலே சொல்லப்பட்டவற்றைப் பிரதானமாக மூன்று தலைப்புக்களின் கூறிவிடலாம்.

1. தமிழர்களின் வாக்குகளில் பெரும்பகுதி தனக்கே என்ற நிலை.
2. தனியார் ஊடகங்கள் மீது தாக்குதல்.
3. அதன் முதலாளிகளையும் தொடர்புள்ள வேறுசில பெரும் முதலாளிகளையும், தாறுமாறாகப் பேசியமை. (இது ஒரு நாகரீகமான குறைவு நவிற்சி. உண்மையில் அதனை கேட்டுக் கொண்டிருப்பது சிரமாகவே இருந்தது.)


தன்னைப் பற்றி தான் சொல்லும் வழக்கமில்லை. அதனை அன்று செய்யப் போவதாகக் கூறித் தொடங்கியவர், சுற்றிச்சுற்றி வந்து கட்டற்ற (Free) ஊடகங்களையும், அதோடு சம்பந்தப்பட்டவர்களையுமே திருப்பித் தாக்கினார்.

ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ ஒளி/ஒலிபரப்புகளின் வரும் செந்நெறிமுறையை கைவிடப் பெற்று ஒரு வாய்ச்சண்டைத் தொனியிலேயே அது அமைந்தது.

ராவய, (விக்டர் ஐவன்,) சண்டே லீடர் (லசந்த விக்கிரமதுங்க,) யுக்திய (சுனந்த தேசப்பிரிய) ஆகிய பெயர்கள் அடிக்கடி வந்தன. இதன் பின் ஒவ்வொருவரும் எவ்வாறு கீழ்த்தரமாக நடந்துள்ளார்கள் / எழுதியுள்ளார்கள் என்பது தான் குற்றச்சாட்டு.

உண்மையில் பிரச்சினை என்னவென்பது முக்கியம். இந்தப்

பத்திரிகைகள் (சம்பந்தப்பட்ட வானொலிகள்) அரச ஊடகங்கள் சொன்னவற்றுக்கு மாறுபட்ட விடயங்களைக் கூறுகின்றனர்.



இவற்றைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இவை பற்றிய சனாதிபதி பக்க நியாயங்கள் இவை. இது வெளியே தெரியவில்லை என்பது தான் இந்த உரையின் எடுகோள்.

இந்த நிலைப்பாடு ஏன் அரசியல் முக்கியத்துவம் உடையதாகிறது?

இன்று ஊடகங்கள் எதிர்க்கட்சி நோக்கினையும், எடுத்துக் கூறுவனவாகி விட்டன.

இது முன்னர் நிலவாத ஒரு நிலை- ஒன்று, முன்னர் அரச ஊடகங்களைத் தவிர்ந்த வன்மையான ஊடகங்கள் குறைவு. மற்றையது அப்படி எதிர்த்தாலும் அரசின் சக்தி மேலோங்கியே நின்றது. எதிர்க்கட்சிகளிடம் அதிகளவு வார இதழ்களே இருந்தன.

இப்பொழுது அப்படியில்லை.

அரச ஊடகங்கள் கேலிக்கும், கிண்டலுக்கும் உள்ளாகின்றன. (டெய்லி நியூசை, டெய்லி நொயிஸ் (தினச்சத்தம்) என்று தான் கிண்டல் பண்ணுகிறார்கள்.) இப்பொழுது ஒளி/ஒலிபரப்புகள் உடனுக்குடன் செய்திகளை வெளியிடுகின்றன. அவை செய்திகளை கண்ணோட்டங்களை மிகத் துல்லியமாக தெளிவாக கவர்ச்சிகரமாக எடுத்துக் கூறுகின்றன.

அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எப்பொழுதும் எதிர்ப்பு என்பது பிடிக்காத ஒன்று.. தனியார் ஒளி/ஒலி அச்சுப்பரப்பலின் இன்றைய போக்கு இதனால் கண்டனத்துக்குள்ளாகின்றது.

இதில் ஒரு முக்கிய அரசறிவியல் உண்மை தொக்கு நிற்கிறது. அதாவது இத்தகைய (கட்டற்ற ஊடகங்கள்) திறந்த பொருளாதாரத்தின் தவிர்க்க முடியாத நிலையாகும். திறந்த பொருளாதாரத்திற்கு ஆதாரமான சந்தைப் படுத்தலுக்கு (marketing) இவை தேவை. மூடிய பொருளாதாரத்தின் (Closed economy) "ஒரு ஊடகம் ஒரு சந்தை" என்ற வாய்ப்பாடு இங்கு பொருந்தாது.

ஆனால், இந்தத் திறந்த பொருளாதாரத்துக்கான ஊடகம் பிரதானமாக "மகிழ்வளிப்பு ஊடகமே" (Entertitment media) இங்கு முந்திய "அரசின் குரல்" என்ற அதிகாரப்பூர்வமானதொனி போல "சரளமான சந்தைப் பேச்சு" வரும். இந்த நிலைப்பாட்டு வேறுபாட்டை இலங்கை வானொலி அறிவிப்புக்குள்ளும், சக்தி, சூரியன், எவ்எம் முக்குள்ளும், அறிவிப்புக்குள்ள வேறுபாட்டில் அறிந்து கொள்ளலாம். பின்னவற்றில் அறிவிப்பாளர் (announcer) வெறும் அறிவிப்பாளர் அல்ல. அவர் ஒரு டிஸ்க் ஜொக்கி (disc jockey) அதாவது பாடல் டிஸ்கின் மீது சவாரி செல்வார். அப்பொழுது தான் விற்பனை விளம்பரங்கள் வரும்.

> அரசுக்குப் புதிய தேர்தல் சுலோகங்கள் தேவைப்படுகின்றது. சிங்கள வாக்குகளைப் பேணுவது அவசியமாகிறது. சனாதிபதியின் உரை இவற்றிற்குத் தளம் அமைப்பதே. சனாததிபதியின் உரையின் தொனிக்குள் ஸ்ரீ.ல.சு.கட்சியின் நிரந்தர அரசியல் கோஷம் சுருண்டு படுத்துக் கிடக்கிறது. இது நாட்டின் இனத்துவப் பிரச்சினையைத் தீர்க்க முனைவதிலும் பார்க்க அதன் முனைப்பை மேலும் அதிகரிக்கவும் பயன்பட்டுப் போகலாம்.

முதலாளித்துவம் பெருமளவில் வளர்ந்துள்ள நாடுகளில் இந்த மகிழ்வளிப்பு ஒளி/ஒலிபரப்பு எல்லாச் சேவைகளிலும் உண்டு. ஆனால், பின் காலனித்துவ நாடுகளில் நிலை வேறு. இங்கு இன்னும் ஒரு தனி முதலாளித்துவம் ஏக போக மேலாட்சிக்கு வரவில்லை. அடிப்படையில் வன்மையாக வேறுபடும் அரசியல், பொருளாதாரக் கண்ணோட்டங்கள் உண்டு.

இந்தச் சூழலில் அரசியற்போட்டி, ஊடகப்போட்டியாக மாறுவது தவிர்க்கப்பட முடியாதது. இந்தியாவில் ஜெயா டிவிக்கும், (ஜெயலலிதா) சன் டிவிக்கும் (முரசொலிமாறன்) வித்தியாசம் உண்டு தானே. இலங்கையில் ஒலிபரப்பு வரலாற்றில் இது முன்னர் நடைபெறவில்லை. 1977க்குப் பின்னர் ஐ.தே.க. ஆட்சியின் போது லைசன்ஸ் பெற்றவர்கள் இப்பொழுது பொ.ஐ.முவை எதிர்க்கிறார்கள். பொ.ஐ.முவிடம் அரச ஒளி/ஒலிபரப்பைத் தவிர வேறு வன்மையான ஊடகங்கள் இல்லை.

இதிலுள்ள சுவாரசியம் என்னவென்றால், இந்த அரசாங்கம் 1994இல் வென்ற பொழுது அப்பொழுது தமக்கெதிராகத் தொழிற்பட்ட அரச ஊடகங்களிருந்தும், வேறுபட்ட ஒரு கட்டற்ற ஊடகம் (Free media) வேண்டுமென்றமை. இவர்களின் வெற்றியில் ராவய, யுக்திய பத்திரிகைகளுக்குப் பெரும் பங்குண்டு. இப்பொழுது கட்டற்ற ஊடகத்தை வேண்டாம் என்கின்றனர்.

"அதிகாரம், ஆளைக் கெடுக்கும். முற்றுமுழுதான அதிகாரம் முற்றும் முழுதாகக் கெடுத்து விடும்" என்பது அரசறிவியலில் பிரசித்தமான ஒரு கூற்று. இவையெல்லாம் அரசியல் - தொடர்பியலில் வருபவை. ஆனால், நமது சனாதிபதி நிகழ்த்திய இந்த நீண்டப் பேச்சுக்கு இன்று ஒரு அரசியல் தேவை உள்ளது.

அதுதான் வரவிருக்கும் தேர்தல். சனாதிபதித் தேர்தலில் எல்லா இடங்களிலும், ஐ.தே.-கவுக்கு 40 சதவீதத்திற்கு மேல் கிடைத்த நிலையில் 2/3 அதிகப்படி வெற்றி கிடைக்கப் போவதில்லை. ஜே.வி.பியின் முக்கியத்துவமும் அதிகரிக்கின்றது.

இந்த நிலையில் அரசுக்குப் புதிய தேர்தல் சுலோகங்கள் தேவைப்படுகின்றது. சிங்கள வாக்குகளைப் பேணுவது அவசியமாகிறது. சனாதிபதியின் உரை இவற்றிற்குத் தளம் அமைப்பதே. ஆனால், அந்த உரையின் தொனிக்குள் ஸ்ரீ.ல.சு.கட்சியின் நிரந்தர அரசியல் கோஷம் சுருண்டு படுத்துக் கிடக்கிறது. இது நாட்டின் இனத்துவப் பிரச்சினையைத் தீர்க்க முனைவதிலும் பார்க்க அதன் முனைப்பை மேலும் அதிகரிக்கவும் பயன்பட்டுப் போகலாம்.

வரலாற்றிலிருந்து நாம் படிக்கும் பாடம், வரலாற்றிலிருந்து நாம் எதையும் படித்துக் கொள்வதில்லை என்பது தான்.

- சி.விமலநாதன்




முன்னைநாள் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வசந்தராஜா, "புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணி" என அழைக்கப்படும் இயக்கத்தின் இலக்கிற்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. மேற்படி 'தேசிய முன்னணியே' குமார் பொன்னம்பலத்தின் கொலைக்கும் உரிமை கோரியது என்பது தெரிந்ததே.

மேற்படி இயக்கம் கடந்த வாரம், "வசந்தராஜாவுக்கும், அவரது குடும்பத்துக்கும்" என விலாசம் இட்டுப் "புலிகளுக்கு உதவும் எல்லாத் துரோகிகளுக்கும் மரணந்தான்" என்று பயமுறுத்தல் கடிதம் ஒன்றை, வசந்தராஜா வீட்டுக் கடிதப் பெட்டியில் போட்டுச் சென்றுள்ளது.

இக்கடிதம் வந்ததற்குப் பின்னர் வசந்தராஜா, தான் வசித்து வந்த கல்கிஸ்ஸ வீட்டை விட்டுத் தலைமறைவாகியுள்ளார். இது பற்றி அவரது மனைவி நெலும் முதலிகேயிடம் விசாரித்த போது, தனது கணவன் எங்கிருக்கிறார் என்று தனக்குத் தெரியாதென்றும், அவரது தொடர்பு கிடைக்கவில்லையென்றும் கூறிய அவர், "அவர் பாதுகாப்பான இடத்தில் இருக்கிறார், என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்றார்.

மேற்படி விவகாரத்தால் மிகவும் பயந்தநிலையில் இருக்கும் நெலும் முதலிகே, "இத்தனையும், ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்ற பின்னரே தலைதூக்கின. யாரோ சில எதிரிகளால் மேற்கொள்ளப்படும்" "தேசத்துக்கு எதிரானவர்களுக்கான" நடவடிக்கை என்பது இனிவரப்போகும் செயல்களுக்கு முன்னறிவித்தலாக இடம் பெற்றுள்ளது. குமார் பொன்னம்பலத்தின் மரணச் சடங்கிலன்று, முதலாவது தொலைப்பேசிப் பயமுறுத்தல் நமக்குக் கிடைத்தது. அதன் பின்னர் கறுத்தக் கண்ணாடிகளுடைய ஓட்டோ வாகனம், அப்பகுதியில் நேரங்காலமற்ற வேளைகளில் திரிவது தெரிந்தது. பின்னர் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டவுடன் அந்த வாகனம் நமது வீட்டுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாகத் திருமதி வசந்தராஜா மேலும் தெரிவிக்கையில், "எமக்குப் பயமுறுத்தல் விடுத்தவர்கள், மிகுந்த பலம் வாய்ந்த சக்தியின் பின்னணியில் இயங்குவதாகத் தெரியவருகிறது" என்றார்.

"இது சம்பந்தமாகப் பொலிசாருக்கு அறிவிப்பது, எதையும் செய்வதற்கு உதவும் என நான் நினைக்கவில்லை" என்றும் கூறினார்.

திருமதி நெலும் முதலிகே, வசந்தராஜாவை 1997ல் விவாகம் செய்து கொண்டார். இவர் சிரச தொலைக் காட்சியிலிருந்து விலகிய பின்னர், இங்கிலாந்திலுள்ள பல செய்தி முகவர் நிலையங்களில் வேலை பார்த்து வந்தார்.

தனது கணவனுக்கு, இந்த நிலை ஏற்படுவதற்குக் காரணம், அவர் ரூபவாஹினியை விட்டு விலகியதற்கான காரணம் பற்றி மக்கள் அறியவராததே என்றார்.

அவர் ரூபவாஹினியை விட்டு விலகியதற்குக் காரணம், அரசாங்கம் 1995 ஏப்ரலில் முன்னெடுத்த யுத்தத்திற்கு ஆதரவு வழங்க முடியாது என்று கூறியதனாலேயே. இதையே வசந்தராஜா, வீக்எண்ட் எக்பிரஸ்சுக்குக் கடந்த நவம்பரில் அளித்த பேட்டியில், தான் ஜனாதிபதிக்கு யுத்தத்திற்கு ஆதரவு தரமுடியாது என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறியதாகவும், இதையே ஊடகங்களின் அமைச்சராக இருந்த தர்மசிறி சேனநாயக்கவுக்கும் கடிதம் மூலம் தெரிவித்திருந்ததாகவும் கூறினார்.

நன்றி - நூலகத்திட்டம்



# பயங்கரவாதத் தடைச்சட்டமும் அதன் விளைவுகளும்

பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்ட காலம் முதல் அச்சட்டம் பல்வேறு சமூகக் குழுக்களாலும் தொடர்ச்சியாக எதிர்க்கப்பட்டு வந்த போதும், அந்த எதிர்ப்புக்கள் எவையும் இன்றுவரை அச்சட்டத்தை வாபஸ் பெறுமளவுக்கு அரசாங்கத்தை தூண்டுவதிலோ அல்லது அதன் இராட்சதத் தனமான கடுமைத் தனத்தை குறைக்கவோ பயன்படவில்லை என்பது ஒன்றும் இரகசியமான விடயம் அல்ல. இன்று பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் ஒரு எச்சரிக்கை தரும் கட்டத்தை எட்டியுள்ளது - குறிப்பாக இன்று வடக்கு கிழக்கில் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் விளைவுகளாக இந்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. இதன் காரணமாக இந்தச் சட்டத்தின் சர்ச்சைக்குரிய விடயங்களையும், அதன் அக்கறைகள் என்ன என்பதையும் ஆராய்வது முக்கியமானதாகும். அப்போது தான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஆபத்தான தன்மையை அறிந்து கொள்ள முடியும்.

புலிகளின் ஆதிக்கத்தில் இருந்த பெரும் பகுதிகளை படிப்படியாக விடுவித்த பின்னர் சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கை இராணுவம், இப்போது தமிழ் சிறுபான்மை கிராம மக்களுடன் முன்னெப்போதுமில்லாத விதத்தில் நேரடித் தொடர்புகளை கொண்டதாக மாறியுள்ளது. அவ்வாறே, அரசின் ஏகப் பிரதிநிதியாக இராணுவம் செயற்படுவதற்கான பல்வேறு வாய்ப்புகளும் ஏற்பட்டிருப்பதன் காரணமாக கணக்கிடப்பட முடியாத அளவுகளில் பெரும் பிரச்சினைகளும், சாதாரண மக்கள் மத்தியில் சந்தேகங்களும், வளர்ந்து விட்டுள்ளன. மறுபுறத்தில் யுத்தப் பிரதேசங்களை விட்டு வெளியேறி வாழ்கின்றவர்கள் கூட பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதுடன், பிரிவினைவாத சந்தேக நபர்களாக சந்தேகிக்கப்படவும் செய்கிறார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மோசமான நடைமுறையானது இந்த விவகாரத்தில் செயற்படும் போது அது மிகவும் ஆபத்தானதாகவும், சிக்கலானதாகவும் அமைவதுடன், ஏற்கெனவே இருக்கும் தீக்கு எண்ணெய் விடுவதாகவும் ஆகிவிடுகிறது. அடிப்படை மனித சுதந்திரம் மற்றும் உரிமைகளை கணக்கெடுத்து மிகவும் அவதானமாக திட்டமிட்டு செய்யப்பட வேண்டியதாக சட்ட அமைப்பானது இருப்பதற்குப் பதிலாக, எழுந்தமானமாக நடைமுறைப்படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம் கைது செய்தலிலும், பெருமளவான தமிழ் சிறுபான்மை இனத்தவரை - எந்தவித ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயங்களும், இல்லாமல் - தடுப்புக் காவலில் வைப்பதில் கொண்டுபோய் விட்டிருப்பதுடன், அந்த நிலை மிகவும் அதிகரித்துக் கொண்டும் செல்கிறது. கீழேயுள்ளது நீதிவான் நீதிமன்ற எல்லைகட்குள் நடந்த கைதுகளும், அவற்றின் விளைவுகளும் பற்றிய ஒரு சுருக்கத் தகவல்:

***கொழும்பு கோட்டை நீதிமன்ற எல்லை . மே. 1999***

***கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் மே 1999***

கைது செய்யப்பட்டோர்- 22
விடுவிக்கப்பட்டோர்- 21
தடுத்துவைக்கப்பட்டோர்- 01

***புதுக்கடை நீதவான் நீதிமன்றம் ஏப்ரல் 1999***

கைது செய்யப்பட்டோர் - 70
விடுவிக்கப்பட்டோர்- 22
குற்றம் சுமத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டோர்- 03
பிணையில் விடப்பட்டோர்- 02
தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டோர்- 03

***புதுக் கடை நீதிவான் நீதிமன்றம் மே 1999***

கைது செய்யப்பட்டோர் - 62
விடுவிக்கப்பட்டோர்- 44
தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டோர்- 16
குற்றம் சுமத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டோர்- 02

***மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் ஏப்ரல் 1999***

கைது செய்யப்பட்டோர் - 02
விடுவிக்கப்பட்டோர்- 02

***மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் மே 1999***

கைது செய்யப்பட்டோர் - 17
தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டோர்- 17

மேற்கூறிய தகவல்கள் கைது செய்யப்பட்டோரில் பெரும்பாலானோர் எந்தவித குற்றமும் சுமத்தப்படக் கூடிய காரணங்கள் இன்மையால் விடுவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கின்றன. இது இந்தச் சட்டம் எவ்வளவு மோசமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. மறுபுறத்தில், எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படாமலே தொடர்ந்து தடுப்புக் காவலில் நபர்களை வைத்திருக்கும் பயங்கரமான ஒரு போக்கும் சாத்தியமாகிறதை நாம் அவதானிக்கலாம். இவ்வாறான நடவடிக்கைகளை சட்டபூர்வமானதாக மாற்றுவதில் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் பெரிதும் பயன்படுகிறது.

இவ்வாறே கீழேயுள்ள பட்டியலும் கைதுகள், தடுத்து வைத்தல்கள் மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகள் தொடர்பான ஒரு சுருக்கக் குறிப்பாகும்.

அரசியலமைப்பின் சரத்து 11,13,(1),13(2) என்பவற்றின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனித உரிமை மீறல் வழக்குகள்.

சரத்து 11,13(1),13(2)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் - 9

13(1), 13(2)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் -2

மொத்த வழக்குகள் 11



வடக்குக் கிழக்கைச் சேர்ந்த சிறுபான்மையினத்தவர்களைப் பொறுத்து பயன்படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம், இதற்கு மேலாக, மலையகத்தைச் சேர்ந்த அப்பாவி மக்களை கைது செய்யவும், தடுப்புக் காவலில் போடவும், துன்புறுத்தவும் கூட பயன்படுத்தப்படுகிறது. இது கொஞ்சமும் கூட ஏற்புடைத்தான ஒரு செயற்பாடு அல்ல. கைது செய்யப்படுபவர்கள் பயங்கரமான சித்திரவதைகட்கும் வேறு பல கொடுமையான மனிதாபிமானமற்ற 'உபசாரங்கட்கும்' ஆளாகி வருகின்றனர். இத்தகைய நடத்தைகள் அப்பாவி மக்களின் மனதிலும் நடவடிக்கைகளிலும் பயங்கரவாதத்தை ஊட்டி வளர்த்து விடுகின்றன. மறுபக்கத்திலுள்ள அட்டவணை 1 இல் உள்ள தகவல் 1999 பெப்ரவரி முதல் மார்ச் மாதம் முடியும் வரையான காலத்தில் கங்கொடவிலை நீதிமன்ற எல்லைக்குள் நடந்த மலைநாட்டுத் தமிழ் மக்கள் தொடர்பான தகவல்களை தருகிறது.

***சிறைச்சாலைகளின் நிலைமைகள்:***

சிறைச்சாலைகளில் அளவுக்கு அதிகமாக கைதிகளை குவிப்பது இன்னொரு பரிதாபமான நிலைமையாகும். இது பயங்கரமான குற்றவாளிகளைப் போல சந்தேக நபர்களும் நடாத்தப்படும் நிலைமையை உருவாக்குகிறது. சிறைச்சாலைகளினதும், தடுப்பு முகாம்களினதும் நிலையோ மிகவும் மோசமானவையாக - மிகக் குறைந்தளவு சுகாதாரத்தைப் பேணுபவையாகக் கூட இருப்பதில்லை. எல்லாச் சந்தேக நபர்களும், பயங்கரவாதிகள் என்ற முடிவுடன் அணுகப்படும் ஒரு நிலையை எதிர்நோக்குகின்றார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டம் அப்பாவிகளை இத்தகைய மனிதாபிமானமற்ற நிலைமைகளுக்கு தள்ளி விடுகிற ஒரு தளமாகப் பயன்படுகிறது. அதற்கு காரணமாக இருப்பது, சந்தேக நபர்களை குற்றவாளிகளாக எழுந்தமானமாக அனுமானித்துக் கொள்ளும் அதிகாரத்தை இந்தச் சட்டம் கொண்டிருப்பது தான்.

மட்டக்களப்பு சிறையில் உள்ள அரசியல் கைதிகள் பற்றிய ஒரு சுருக்கமான தகவல் இது.

தடுப்புக் காவலிலுள்ள கைதிகள் -
ஆண் 44,
பெண் 03

குற்றம் சுமத்தப்பட்டோர்:
ஆண்- 03
பெண்-

அரசியல் குற்றவாளிகளின் வயதெல்லை

18 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் - இல்லை.

18க்கும் 35 வயதுக்குமுட்பட்டோர்:
ஆண்- 4
பெண் 01

35க்கு மேற்பட்டோர்
ஆண்- 02
பெண் 01

மட்டக்களப்பு சிறையின் பொதுவான நிலைமை

அ. தண்ணீர்ப் பற்றாக்குறை தொடர்ச்சியாக இருந்து வருகிறது. அங்கு ஒரு கிணறு தோண்டுவதும், ஒரு நீர் இறைக்கும் இயந்திரம் பொருத்தப்படுவதும் மிக அவசியம்.

ஆ. சிறைச்சாலை சமையற்சாலை மிகவும் மோசமாக சிதைந்திருக்கிறது. உடன் திருத்தப்பட வேண்டிய நிலையிலுள்ளது.

இ. அதிகாரிகளின் வதிவிடம் மிகவும் பழமையானது. திருத்தப்பட வேண்டியது.

ஈ. வெளியிலிருந்து பார்வையிட வருவோருக்கு ஒரு தரிப்பிடமோ அவர்களுக்கான மலசலகூட வசதியோ கிடையாது.

உ. சிறைச்சாலை வாசிகசாலையில் புத்தகங்கள், சஞ்சிகைகள் மிகவும் சொற்பமாகவே உள்ளன.

பாகுபாடற்ற விதத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்துதல்

இந்த பிரச்சினைக்குரிய விவகாரத்திலுள்ள இன்னுமொரு முக்கியமான பிரச்சினை தான் பாகுபாடற்ற விதத்திலும், பொறுப்பற்ற விதத்திலும் நிர்வாக மற்றும் படை அதிகாரிகள் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதாகும். வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்று பார்ப்பதில் அக்கறை அற்று இருக்கும் அரசின் போக்கு, அந்த அதிகாரங்கள் எதிர்பார்த்த நல்லெண்ணத்துடனான நோக்கத்தைச்

நன்றி - நூலகத்திட்டம்



செய்வதற்குப் பதிலாக அப்பாவிப் பொதுமக்களை அதிலும் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்துடன் எந்தச் சம்பந்தமும் அற்ற மக்களை - துன்புறுத்துவதில் போய் முடிய காரணமாகியுள்ளது. இந்தத் துன்புறுத்தல் இன்று எவ்வளவுக்கு மோசமாகிவிட்டுள்ளது என்றால், இச்சட்டத்தில் ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட பலர் மனோவியல் ரீதியான சமூக ரீதியான காயங்களுக்கு உள்ளாகியிருப்பது தான். இந்த நிலைமை, அவர்களின் அடிப்படை சுதந்திரத்தை மறுதலிப்பதற்கு மேலாக செய்யப்படும் ஒரு கொடுமையாகும். எனவே இந்த அக்கறையற்ற தன்மை, பாகுபாடற்றதும், பொறுப்பற்றதுமான விதத்தில் அதிகாரத்தை பயன்படுத்தல் போன்ற விடயங்களுக்கு எதிராக மிகவும் கவனமான கண்காணிப்பு செலுத்தப்படுதல் இன்றுள்ள மிகவும் அத்தியாவசியமான தேவையாகும். கீழுள்ளது இத்தகைய அக்கறையீனம், பொறுப்பற்ற தன்மை என்பவற்றினால் நடந்த அடிப்படை மனித சுதந்திரம் மீறப்பட்டது தொடர்பான சம்பவங்களின் ஒரு பட்டியலாகும்:

* தங்கராஜா பரமானந்தராஜா ஆரையம்பதியைச் சேர்ந்த ஒரு தமிழ் இளைஞர். இவர் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தால் அண்மையில் விடுதலை செய்யப்பட்டார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை அரச சட்டத்தரணி வாபஸ் வாங்கியதை அடுத்தே அவர் விடுவிக்கப்பட்டார். 1997 ஜனவரி 1ம் திகதி முதல் மார்ச் மாதம் 31ம் திகதி வரை புலிகளுக்கு உணவு, எரிபொருள் மற்றும் பிற பொருட்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சட்ட மா அதிபரால் அவர் மீது வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த நபர் சிறையில் இருந்த காலம் முழுவதும், பயங்கரமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டிருந்தார். பிராந்திய வைத்திய அதிகாரி இவரை பரிசோதித்து மேல் நீதிமன்றில், அரச சட்டத்தரணியின் வேண்டுகோளுக்கிணங்க சமர்ப்பித்த வைத்திய சான்றிதழ் மூலம் இது தெரிய வந்தது. இந்த சான்றிதழை கேட்ட பின் அரச சட்டத்தரணி வழக்கை வாபஸ் பெறுவதாக அறிவித்தார். இதன் பிறகும் கூட அந்தக் கைதி 2 வருட காலம் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

* சின்னத்தம்பி தங்கரத்தினம் ஒரு 30 வயதான இரண்டு குழந்தைகளின் தாய். இவரும் அண்மையில் மட்டக்களப்பு மேல் நீதிமன்றால் 2 வருட காலம் தடுப்புக் காவலில் இருந்த பின் விடுவிக்கப்பட்டார். இப்போது அவர் தடுப்புக் காவல் காலத்து சித்திரவதைகளின் காரணமாக தனது ஞாபக சக்தியை இழந்தவராகக் காணப்படுகிறார். 1995 ஜனவரி 1ம் திகதி முதல் 1995 டிசெம்பர் 12ம் திகதி வரை புலிகளுக்கு உணவும் மற்றும் அத்தியாவசிய பொருட்களும் வழங்கினார் என்ற அடிப்படையில் இவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

இவரது வழக்கு நீதிமன்றில் எடுக்கப்பட்ட போது இந்தப் பெண் பயங்கரமான சித்திரவதைகட்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். இது அவரது ஞாபக சக்தியை குலைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கை அப்பெண்ணின் உடலில் பல ஆறிய புண் தழும்புகள் இருப்பதைச் சுட்டிக் காட்டியதுடன், அவர் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தது. அவருக்கு தொடர்ந்து வைத்தியம் செய்யப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை தெரிவித்தது. சட்ட மா அதிபரின் திணைக்களத்திலிருந்து வந்த அறிவுறுத்தலின் பிரகாரம் மேல் நீதிமன்ற நீதிபதி அவரை விடுவித்தார்.

* ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் முறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கந்தையா விக்னேஸ்வரி என்ற இளம் பெண், இராணுவ கப்டன் ஒருவரால் நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் போது கொல்லப்பட்டார்.

இது நடந்தது, இந்த கப்டன் தங்களுக்கு வந்த புதிய ஆயுதங்களை பரிசோதித்துக் கொண்டு இருக்கும் போதாகும். இந்தத் தகவலின் அடிப்படையில், விசாரணை முடிவில் மேலதிக நீதிவான் இக் கப்டனை கைது செய்யுமாறு ஏறாவூர் பொலிசுக்கு உத்தரவிட்டார்.

கல்முனைக்கும் கொழும்புக்குமான பாதை ஏனைய பாதையிலிருந்து மூன்று வெவ்வேறு சோதனை நிலையங்களால் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பாதையில் வரும் பயணிகள் தமது பெயர்களையும், முகவரிகளையும் பாதுகாப்புப் படைக்கு தெரிவிக்குமாறு கோரப்படுகின்றனர். தமிழர் அல்லாத பிற சமூகங்களை சேர்ந்தவர்கள் இவ்வாறு பரிசோதிக்கப்படுவதில்லை.

இதன் இன்னொரு பரிமாணம் தான், வடக்கு கிழக்கிலுள்ள இராணுவத்திற்கும், மக்களுக்குமிடையிலான முறுகிய நிலை தொடர்ந்து நிலவுவதும் இதன் விளைவாக பல எல்லை மீறல்கள் இராணுவத்தினரால் செய்யப்படுவதும் ஆகும். அண்மைக் காலமாக இது மிக மிக மோசமாக மாறியுள்ளது. படையினர் பெருமளவுக்கு பொதுமக்கள் உள்ள இடங்களில் பரவலாக நிலை கொண்டிருக்கும் நோக்குடன் செயற்படுவதால், படையினர் புலிகளது தாக்குதலுக்கு உள்ளாகுவது தவிர்க்க முடியாததாகி வருகிறது. புலிகளையும் பொது மக்களையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத நிலையில் அரச படைகள் இருப்பதால் புலிகளையும் பொதுமக்களையும் ஒரே விதமாக அவர்கள் நடாத்துகிறார்கள். அவர்களது பதிலடி நடவடிக்கைகளின்போது பொதுமக்கள் பலியாகும் நிலைமைகள் உருவாகின்றன.



இந்த நிலைமை மேலும் மேலும் மோசமடைந்து வருகிறது. கீழுள்ளது இவ்வாறான அண்மையில் வடக்கு கிழக்கில் நடந்த அரச படையினரின் ஒரு பதிலடி நடவடிக்கையாகும்.

**அட்டவணை 1**

| மாதம் | சந்தேக நபர்களின் பெயர் | இருப்பிடம் |
|---|---|---|
| பெப்ரவரி- | சுப்பிரமணியம் ராசையா | நோர்வூட், நுவரெலியா. |
| பெப்ரவரி | -தங்கவேலு மகிழதேவி | நோர்வூட், நுவரெலியா |
| பெப்ரவரி | அண்ணாமலை கோகிலா | நோர்வூட், நுவரெலியா. |
| பெப்ரவரி- | பத்வாகரன் இருளர் | பொகவந்தலாவ. நுவரெலியா. |
| பெப்ரவரி | -ராமையா ராமலிங்கம் | ரங்கல, நுவரெலியா. |
| பெப்ரவரி | -கோவிந்தபிள்ளை விஜயலக்ஷ்மி | யாழ்ப்பாணம். |
| பெப்ரவரி | -கே. சிவகுமார் | உடப்புசல்லாவை, நுவரெலியா. |
| பெப்ரவரி | -பி. ஆறுமுகம் | வலப்பனை. |
| பெப்ரவரி | -பி. யு. குமார் | விண்டுல,நுவரெலியா. |
| பெப்ரவரி | -ஆர். தயாளன் | நிவிடிகல, இரத்தினபுரி. |
| பெப்ரவரி | -எம். திருவரன்செல்வி | வெலிமடை, பதுளை. |
| பெப்ரவரி | -டபிள்யூ.செல்லையா | றம்பொடகல,நுவரெலியா. |
| பெப்ரவரி | -என்.தயாளன் | நுகேகொடை, கொழும்பு. |
| பெப்ரவரி | -ஆறுமுகம் உதயகுமார் | கடவத்தை,கம்பஹா. |
| பெப்ரவரி | -கருப்பையா பாவரட்னம் | கொழும்பு 05. |
| பெப்ரவரி | -எச். தயாபாலன் | நாரஹேன்பிட்டி,கொழும்பு -05 |
| மார்ச் | -கே. செல்வராஜா | கெஸ்பாவ,கொழும்பு. |
| மார்ச் | -ராஜு பத்மாவதி | மொரட்டுவ, கொழும்பு. |
| மார்ச் | -சதாசிவம் யோகமலர் | வத்தளை, கம்பஹா. |
| மார்ச் | -மெஹிமான சிவராணி | ஹற்றன், நுவரெலியா. |

* 1999 ஜூலை 4ம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு மக்கள் கூட்டம், பயங்கரவாதிகளால் எரியூட்டப்பட்ட ஒரு பஸ் வண்டியில், அதை எரியூட்டியவர்கள் பற்றிய தகவலை தெரிவிக்கவில்லை என்பதற்காக, எரிந்து கொண்டிருந்த அந்த பஸ்வண்டியின் ஒரு புறத்தில் ஏறி மறுபுறத்தால் இறங்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

* 1999 ஜூலை 19ம் திகதியன்று மன்னார் கண்ணி கிராம இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் ஊர்வலம் சென்றுகொண்டிருந்தபோது புலிகளின் பிஸ்டல் குழு நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்களைத் தாக்கியும், அவர்களது உடமைகளுக்கு சேதம் விளைவித்தும் பாரிய அழிவுகளை இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் பிரிவினர் ஏற்படுத்தினர்.

ஜூலை மாதத்தின் இறுதி வாரத்தில் புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் இரண்டு இராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மன்னார் ஸ்டேடியத்துக்கு அருகில் உள்ள ஒரு கடையில் பொருட்களை வாங்க வந்தபோதே இச் சம்பவம் நடந்தது. இதற்குப் பதிலடியாக இலங்கை இராணுவம் அருகிலுள்ள கடைகளுக்கு நெருப்பு வைத்ததுடன் அங்கு அதை அணைக்க வந்த சிவிலியன்களையும் அடித்து விரட்டினார்கள். இவ்வாறு விரப்பட்டவர்களில் சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

1999 ஜூலை 12ம் திகதி முகமூடியணிந்த சில அடையாளம் காணப்படாத நபர்கள் மன்னார் பள்ளிமுனையில் உள்ள ஒரு வீட்டுக்குள் புலிகளை தேடுபவர்கள் போல வந்து 21 வயதுள்ள ஒரு பெண்ணை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியுள்ளார்கள். அப்பெண்ணுடன் கூட இருந்தவர்களை வேறு அறைக்குள் போட்டுப் பூட்டி விட்டே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. அதன் பின் அப்பெண் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு குத்திக் கொல்லப்பட்டுள்ளார். இது பற்றிய விசாரணை பின்னர் நடந்தபோது, இதில் சம்பந்தப்பட்ட இரு இராணுவத்தினரை அவ்வீட்டிலிருந்த ஏனையோர் அடையாளம் காட்டியுள்ளனர்.

* 1999 ஜூலை 1ம் திகதியன்று புலிகள் ஒரு கிளேமோர் கண்ணிவெடியை வெடிக்க வைத்துள்ளனர். அதனால் யாரும் கொல்லப்படாத போதும் சில இராணுவத்தினர் காயமடைந்தனர். இதற்குப் பதிலாக இராணுவத்தினர் ஈவிரக்கமில்லாமல் அந்தப் பகுதியில் நின்ற பொதுமக்களை தாக்கினார்கள்.

* ஜூலை 21ம் திகதி அம்பாறையிலுள்ள கிரான்துறையில் புலிகள் நடாத்திய தாக்குதல் ஒன்றின்போது ஒரு இராணுவத்தினர் காயமடைந்ததுடன் மேலும் சிலர் காயமடைந்தனர். பதிலடியாக இராணுவத்தினர் இரு விவசாயிகளை அதே வீதியில் சுட்டுக் கொன்றதுடன் அவர்கள் தமக்கும் புலிகளுக்குமான சண்டையில் அகப்பட்டு செத்ததாகவும் அறிவித்தனர்.

* 1999 ஜூலை 16ம் திகதி மட்டக்களப்பில் வெடித்த ஒரு சைக்கிள் குண்டுவெடிப்பின் போது பல சிவிலியன்கள் காயமடைந்தனர். இந்தக் குண்டை வைத்தவர்கள் யார் என்பதோ, அதை வைத்தவர்களது நோக்கம் என்ன என்பதோ தெரியாமல் இருந்தபோதும், பலர் இது புலிகளால் செய்யப்பட்டது என்றே கருதினர். அப்படி இருந்தும் அங்கிருந்த அப்பாவி பொதுமக்களை இராணுவத்தினர் அடித்து நெருக்கியதுடன் ஆறுபேரை கைது செய்து கொண்டும் சென்றனர்.

> பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்ட காலம் முதல் அச்சட்டம் பல்வேறு சமூகக் குழுக்களாலும் தொடர்ச்சியாக எதிர்க்கப்பட்டு வந்த போதும், அந்த எதிர்ப்புக்கள் எவையும் இன்றுவரை அச்சட்டத்தை வாபஸ் பெறுமளவுக்கு அரசாங்கத்தை தூண்டுவதிலோ அல்லது அதன் இராட்சதத் தனமான கடுமைத் தனத்தை குறைக்கவோ பயன்படவில்லை

நன்றி - நூலகத்திட்டம்



# தொறன்ரோ மனவெளி கலையாற்றுக் குழு

## நான்கு வருடங்களாக நல்ல நாடகங்கள்

ஈழத் தமிழர்கள் மிக அதிகளவில் வாழ்கிற நகரம் தொறன்ரோ. ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமானவர்கள் தொறன்ரோ மாநகரில் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தென்னிந்தியத் தமிழ் சினிமாவும், சினிமாப் பத்திரிகைகளுமே பெருமளவில் ஆதிக்கம் பெற்றிருக்கிற தொறன்ரோவின் தமிழ்ச் சூழலில் சீரிய நாடக இயக்கத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிற மனவெளி கலையாற்றுக் குழுவினர் இந்த மாதம் (ஜனவரி 2000) தமது நான்காவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவது மகிழ்வு தருகிற ஒரு சேதியாகும்.

அரங்காடல் என்ற தலைப்பில் இதுவரை ஆறு நிகழ்வுகளை மனவெளி கலையாற்றுக் குழுவினர் மேடையிட்டுள்ளனர். அவர்களுடைய ஏழாவது அரங்காடல் இந்த வருடம் மே மாதம் இடம் பெறவுள்ளது. இதுவரை பன்னிரண்டு நாடகங்களை இருபத்தைந்து தடவைகள் மனவெளி குழுவினர் மேடையிட்டுள்ளனர். "1994 அளவிலேயே நல்ல நாடகங்களைத் தொடர்ச்சியாக மேடையேற்றுவதன் மூலம் பார்வையாளர்களை வென்றெடுக்கலாம் என்ற கருத்துடன் நாங்கள் செயல்பட ஆரம்பித்தோம். மஹாகவியின் கோடையை மேடையேற்றுவதன் மூலம் எமது நாடக இயக்கத்தை அறிமுகம் செய்ய முயன்றோம். எனினும் நடிகைகள் கிடைக்காமையால் முயற்சியைக் கைவிடநேர்ந்தது" என்று மனவெளியின் ஆரம்ப காலங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் நெறியாளர் அ.புராந்தகன்.

தமிழ் நாடகத்துறையின் மிக முக்கியமான ஆளுமைகளான பாலேந்திரா, தாஸீஸியஸ் ஆகியோரின் கனடா வருகையும் தாஸீஸியஸ் நிகழ்த்திய நாடகப் பட்டறையும் சீரிய நாடக, ஆர்வலர்களை, தொறன்ரோவில் ஒன்று சேர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தன. இந்த ஒன்று சேர்க்கையும் நாடகப்பட்டறை அனுபவங்கள் தந்த உற்சாகமும் இணையவே, விட்டு விடுதலையாகி என்ற நாடகத்தை மனவெளியினர் காலம் இலக்கிய சஞ்சிகை ஆதரவில் இடம் பெற்ற இலக்கிய மாலையில் மேடையேற்றுகிறார்கள்.

புராந்தகனின் நெறியாள்கையில் இடம் பெற்ற விட்டு விடுதலையாகி பார்வையாளர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. அந்த வெற்றி ஜனவரி, 96 இல். மனவெளி கலையாற்றுக் குழு என்னும் நாடக அமைப்பு / இயக்கத்தைத் தோற்றுவிக்கிறது.

"நாங்கள் சிறுகுழுவினராக ஆரம்பித்தாலும் எங்களுடைய இலட்சியங்களும் நோக்கங்களும் விசாலமானதாகவே இருந்தன. எமது முயற்சிகளுக்கு தொறன்ரோவின் தேடகம் அமைப்பும் உந்துதலாக இருந்தது" என்கிறார் மனவெளியூடாகப் பரவலாக அறியப்பட்டிருக்கும் நடிகரும், நெறியாளருமான சபேசன்.

"வெகுசன மட்டங்களில் இடம் பெற்று வரும் மலினமான நகைச்சுவை நாடகங்கள் மற்றும் மேடை நிகழ்வுகளில் எமக்குப் பெரும் அதிருப்தி இருந்தது. அதே வேளை மாற்றுக் கலாசார நடவடிக்கைகளில் ஆர்வம் கொண்டவர்கள் செயலூக்கத்தில் ஒழுங்கையும் தொடர்ச்சியையும் பேண முடியாதவர்களாக இருந்தார்கள். ஒரு வகையில் எதிர் கலாசாரத்தை நாம் பிரதி பலிக்கிற அதேவேளை சாதாரண மக்களிடமும் பரவலாகச் சென்றடைய வேண்டும் என்று விரும்பினோம். இது உடனடியாகச் சாத்தியமில்லை. ஆறு /ஏழு வருடங்கள் மெல்ல மெல்ல நடந்து நாம் சாதிக்க வேண்டிய விஷயம் இது" என்று தொடர்ந்தார் சபேசன்.

கடந்த நான்கு வருடங்களில் மனவெளி கலையாற்றுக் குழுவினர் சாதித்திருப்பதைப் பார்க்கிற போது அவர்களுடைய கடின உழைப்பும் விடா முயற்சியும் பலித்துள்ளன என்பது தெரிய வருகிறது.

ஆரம்பத்தில் முன்னூறு பேர் மட்டுமே அமரக் கூடிய சிறு அரங்கங்களில் ஒரு நாள் மட்டுமே மனவெளியின் நாடகங்கள் இடம் பெற்றன. நுழைவுச் சீட்டுக்கள் நண்பர்கள், ஆர்வலர்களூடாகவே பெருமளவில் விற்பனை செய்யப்பட்டன. இப்போதோவெனில், மெல்ல மெல்லப் பெரிய அரங்கங்களுக்குப் போய் விட்டனர் மனவெளி கலையாற்றுக் குழுவினர். பத்திரிகை விளம்பரங்களூடாக மட்டுமே அரங்கம் நிறைந்த நாடகங்களை மேடையிட முடிகிறது. ஆறாவது அரங்காடல் தொடர்ந்து இரண்டு நாட்கள் இடம் பெற்றமை மனவெளியின் திட்டமிடப்பட்ட ஒரு கலைப் பயணத்தின் முக்கியமான மைல் கற்களாகும்.

மனவெளி இதுவரை மேடையிட்டுள்ள நாடகங்களின் விவரம் மட்டுமே அவர்களுடைய அக்கறையையும் நாடகம் மற்றும் அரங்கம் பற்றிய அவர்களது தேடலையும் பங்களிப்பையும் விளக்கப் போதுமானதாகும்.

அன்ரன் செக்கோவின் The Bear என்றும் நாடகம் மறையாக மறுபாதி என்ற பெயரிலும் சாமுவல் பெக்கற்றின் Waiting for Godot, கருக்கல் வழியும் காத்திருப்பும் என்ற பெயரிலும் ஞானம் லம்பேர்ட் நெறியாள்கையில் மேடையேறின. பி.விக்கினேஸ்வரனின் நெறியாள்கையில் நா.சுந்தரலிங்கத்தின் அபசுரம் மேடையேறிற்று. இருதுயரங்கள் நாடகத்தை சாந்தி நாதன் இயக்கியிருந்தார். குழந்தை ம.சண்முகலிங்கத்தின் அன்னை இட்ட தீ, ஞான ஆனந்தனின் நெறியாள்கையில் மேடையேறிற்று. அ. புராந்தகன் தனது விட்டு விடுதலையாகி நாடகத்தையும், சுஜாதாவின் சிறுகதையான சரளாவை நாடகமாகவும் நெறிப்படுத்தி இருந்தார். யாழ்ப்பாணம் -84 எனும் நாடகம் சபேசனுடைய எழுத்திலும், இயக்கத்திலும் மேடையேறிற்று. அ. இராமசாமியின் தண்டனை ராஜன்-செல்வன் ஆகியோரின் நெறியாள்கையிலும் காலம் சீவரத்தினத்தின் நெறியாள்கையிலும் மேடையிடப்பட்டன. பா.அ.ஜெயகரன் தன்னுடைய முக்கியமான இரண்டு நாடகங்களை மனவெளியூடாக மேடைக்குக் கொணர்ந்தார்.



'அன்னை இட்ட தீ' இல் சத்தியா தில்லைநாதன்



தண்டனை இல் ராஜன், ஐ.கந்தசாமி



'இன்னொரு வெளி' யில் திலீப்குமார், சுமதிரூபன், கே.எஸ். பாலச்சந்திரன்

அரங்கத்தினதும் நாடகத்தினதும் பல்வேறு சாத்தியப்பாடுகளைப் பயில்வதும் வெளிக்கொணர்வதுமே மனவெளி குழுவினரின் முதலாவது கட்ட இயக்கமாக அமைந்திருப்பதை அவர்களுடைய நாடகத் தெரிவுகள் உணர்த்துகின்றன. செக்கோவ், பெக்கெற் ஆகியோரின் நாடகங்களைத் தமிழில் மேடையிடுகிற போதும் சரி, ஈழத்துத் தமிழ் நாடகத்துறையின் Classics என்று சொல்லப்படத் தக்க நாடகங்களுள் ஒன்றான அபசுரத்தை மேடையிடுகிற போதும் சரி மனவெளியினரிடம் இந்த அம்சத்தைப் பார்க்க முடிகிறது.

மனவெளியின் அரங்க முயற்சிகளூடாகக் கிடைத்த இன்னொரு மிக முக்கியமான பெறுபேறு தமிழில் வீச்சான நாடகப் பிரதிகள் மேடைக்கு வர ஆரம்பித்தமையாகும். *சரளா* வின் பலதரப்பட்ட வெற்றிக்கு புராந்தகனின் சொற்கட்டும், இறுக்கமும் மிக்க பிரதியும் ஒரு காரணம். இரண்டு சகோதரிகளின் வாழ்வனுபத்தில் மையங்கொண்ட கதை, அனுபவங்களூடாக எவ்வாறு கட்டுப்பெட்டித்தனமான, பழமை பேணும் பெண்ணான ஒருத்தி மெல்ல மெல்ல பெண்ணிய உணர்வுள்ளவளாக மாறுகிறாள் என்பது சூடாகவும், சுவையாகவும் வெளிப்பட்டிருந்தது.

ஜெயகரனின் எல்லாப்பக்கமும் வாசல், இன்னொன்று-வெளி ஆகியன புலம் பெயர்ந்த சூழலில் மனிதர்களுடைய அவலங்கள், கழிவிரக்கம், உள்மனப் போராட்டங்கள், நவீன கலாசாரத்தையும் பண்பாட்டையும் எதிர்கொள்கிற போது ஆதிக்கத்தையும் பழமையையும் பேணும் யாழ்ப்பாணத் தமிழ் மனம் படுகிற சங்கடங்கள், அதன் விளைவான இரண்டக நிலை என்பவற்றை உயர்ந்த தரத்திலான அங்கதத்துடன் பேசுகிறது. நான்கு பாத்திரங்களே பங்கு கொள்ளும் நாடகங்கள் இவை. இந்த இரு நாடகங்களின் மூலம் தொறன்ரோத் தமிழ் அரங்குக்கு ஒரு நல்ல நாடக எழுத்தாளர் கிடைத்திருக்கிறார் என்பது உறுதிப்பட்டிருக்கிறது. சீவரத்தினம் நெறியாள்கை செய்த வார்த்தைகளே அற்ற காலம் நாடகம், ஊரில் உயர்த்தப்பட்ட சாதிக்காரராக இருந்தவர் வெளிநாடு வந்து சலவையகம் ஒன்றில் வேலைக்குச் செல்ல நேர்வதும் அங்கு தன்னுடைய பழைய கட்டாடியைச் சந்திப்பதும் பற்றிய நறுக்கான நிகழ்வு.

நாடகங்களோடு கூடவே கவிதா நிகழ்வுகளையும் மனவெளியினர் மேடையிட்டுள்ளனர். மஹாகவியின் கவிதைகளைக் கொண்டு புராந்தகன் தயாரித்து வழங்கிய குறும்பா நிகழ்வு, குறும்பாக்களைப் பற்றி மஹாகவி குறிப்பிட்டது போலவே சிரிப்புக்கும் சிந்தனைக்கும் கருத்துக்கும் கற்பனைக்கும் விருந்தாக அமைந்தது. பாலேந்திராவின் நாடகங்களை தொறன்ரோவில் மேடையிட்டமையும், அவற்றுக்குக் கிடைத்த வரவேற்பும் நல்ல நாடகங்களைத் தொடர்ச்சியாகவும் சீராகவும் வழங்குவதன் மூலம் நாடக இயக்கத்தைப் பேணலாம் என்ற மனவெளியின் கொள்கைக்குத் துணையாக அமைந்தன.

கடந்த நான்கு வருடங்களாக நாடகங்களை மேடையேற்றிவருகிற மனவெளிக் கலையாற்றுக் குழுவினரின் சாதனைகள் என்ன?

சாதனைகள் என்று பேசுவதை விட, நாடகத்துறையிலும் அரங்கம் சார்ந்தும் தொழில் நுட்பரீதியாகவும் என்ன வகையான ஆரோக்கியமான மாற்றங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று கதைப்பதே பொருத்தமாக இருக்கும் என்று தெரிவிக்கிறார் மனவெளியின் பெரும்பாலான நாடகங்களில் முக்கியமான பாத்திரங்களில் நடித்த செல்வன்.

நல்ல நாடகங்களுக்கு என எப்போதும் கணிசமான அளவு பார்வையாளர்கள் வருவார்கள் என்பதை கடந்த நான்கு வருடங்களில் நாங்கள் உறுதிப்படுத்தியிருக்கிறோம். சிறு சஞ்சிகைகள், புத்திசீவிகள் மற்றும் சிறு குழு வட்டங்களுக்குள்ளேயே சுழன்று கொண்டிருந்த நல்ல நாடகத் துறையை, தொறன்ரோவில் வெகுசன மட்டங்களுக்கு நகர்த்தியிருக்கிறோம். மனவெளியின் அரங்காடல் நிகழ்வுகளென்றாலே தரமாகவும் சிறப்பாகவும் இருக்கும் என்ற அபிப்பிராயம் இப்போது இங்கு உருவாகி விட்டது.

மேடையமைப்பு, ஒலி, ஒளி அமைப்புக்கள், மேடையின் பின்னான தொழில் நுட்பங்களை நாங்கள் தொறன்ரோவில் கிடைக்கிற தரத்தில் பயன்படுத்துகிறோம். இந்தத் துறைக்கெனவே சிவம், ஓவியர் கருணா ஆகியோர் எங்களுடன் இணைந்து பணியாற்றுகிறார்கள். தொறன்ரோவின் தமிழ் வாழ்வின் நெருக்கடிக்குள் இத்தகைய ஒரு கூட்டு முயற்சியும் அதன் தொடர்ச்சியும் ஒரு காலத்தில் நினைத்தும் பார்க்க முடியாததாகவே இருந்தது என்கிறார் அவர்.

மனவெளியின் முக்கியத்துவம் தொறன்ரோவின் தமிழ் வெகுசனக் கலாசாரப் பின்னணியிலேயே முற்றாக உணரப்பட முடியும். வருடா வருடம் ஏராளமான கலை நிகழ்ச்சிகள் தொறன்ரோவில் இடம் பெறுகின்றன. தென்னிந்தியத் தமிழ்ச் சினிமாத் துறையினர் பங்கு கொள்கிற நிகழ்வுகள் மிகவும் பிரபலமானவை. பல்லாயிரக் கணக்கான பணச் செலவில் இவை நடந்தேறுகின்றன. தமிழருடைய வாழ்வையும் கற்பனையையும் களிப்பையும் பெருமளவுக்குத் தீர்மானிப்பவையாகவும், எல்லைப் படுத்துவனவாகவும் தமிழ் சினிமாவும், தமிழ்த் திரை இசையுமே இன்றும் உள்ளன. தொறன்ரோவின் ஈழத் தமிழர்கள் விடயத்திலும் இது தான் உண்மை. போராட்டமும் அவலமும் வேறு பரிமாணங்களைத் தந்த போதிலும் களிப்பூட்டல், பொழுது போக்கு, கற்பனை ஆகிய அம்சங்களில் புலம் பெயர்ந்தோரைச் சிக்கெனப் பிடித்திருப்பதும், பிடித்திருப்பதும் தமிழ் சினிமா தான். இதனை விட, யாழ்ப்பாணத்துப் பாடசாலைகள், கிராமங்களுக்கான சங்கங்கள், அமைப்புக்கள் தொறன்ரோவில் நூற்றுக் கணக்கில் உள்ளன. வருடம் ஒரு முறை

⊃

நன்றி - நூலகத்திட்டம்



இச்சங்கங்கள் எடுக்கிற கலை விழாக்களும் கலாசார நிகழ்வுகளும் தொறன்ரோவில் தமிழர் வாழ்வின் முக்கியமான அம்சமாகப் போய்விட்டது. இந்த விழாக்களுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவார்கள். இந்த விழாக்கள் எல்லாவற்றையும் பொதுவான ஒரு வாய்பாட்டுக்குள் அடக்கி விடலாம்: பரத நாட்டியம், திரையிசை நடனம், சமூக நாடகம் And/or நகைச்சுவை நாடகம், சில அறுவைப் பேச்சுகள், பட்டி மன்றம் (Optional!)

வருடத்துக்கொரு முறை நண்பர், ஊரவர், உற்றவர், அயலர் எல்லோரும் குடும்பம், குழந்தைகள் சகிதம் இந்த விழாக்களுக்குக் கூடுவதால், ஆங்கிலமும் இடையிடை தமிழும் கலந்த குழந்தைகளின் கூச்சலிலும் அமர்க்களத்திலுமே ஒருவருடைய பொறுமை மரித்து விடும். என்றாலும் இக் கூச்சலை மீறி நிகழ்ச்சிகளை மக்கள் ரசிக்கிறார்கள் என்றால் நிகழ்ச்சிகள் எத்தகைய பெருங்குரலில் இயங்குகின்றன என்பதை ஊகிப்பது அவ்வளவு சிரமமானதல்ல. இத்தகைய ஒரு வெகுசனக் கலாசார நிகழ்வொன்றில் மனவெளியினரின் நாடகங்கள் மேடையேறுவது என்பதை நான்கு வருடங்களுக்கு முன்பு எவரும் கனவு கண்டிருக்கக் கூட முடியாது. ஆனால் சென்ற வருடம் பா.அ.ஜயகரனின் இரு நாடகங்களும், புராந்தகன் தயாரித்த சரளாவும், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் அன்னை இட்ட தீயும் மூன்று மூன்று முறைகள் வெற்றிகரமாக மேடையேறின. இது இரண்டு விடயங்களைத் தெளிவாகவே உணர்த்துகிறது. ஒன்று, தரமான, நல்ல, ஆழமான நாடக முயற்சிகள் வெகுசனக் கலாசாரத்துக்கு அப்பாற்பட்டவை என்பது பொருந்தாது: மற்றது, வெகுசனக் கலாசாரத் தளத்தில் நாமும் களம் இறங்காத வரை நல்ல நாடகங்களையும் ஆழமான இரசனையையும் பரவலாக்கவும் முடியாது. இந்த வகையில் அந்தோனியோ கிராம்சி என்கிற இத்தாலிய மார்க்சிய அறிஞர் வெகுசன கலாசாரத்தை எவ்வாறு நாம் எதிர்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவதுக்கு இணையாகவே மனவெளிகுழுவினரின் முயற்சிகள் அமைகின்றன. நிதி நெருக்கடிகள் இல்லாமல் வருடத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை நிகழ்வுகளை மேடையேற்ற முடிவது மனவெளி குழுவினருடைய முக்கியமான சாதனை தான். கூடவே, தொறன்ரோவின் தமிழ்ச் சூழலில் காணப்படுகிற அரசியல், கருத்துப் பிரிவுகளுக்கு அப்பால் எல்லா வகையான அரசியல் கருத்துடையவர்களும் மனவெளியினரின் நாடகங்களைப் பார்க்க வருவதும் அவை பற்றி எழுதுவதும், விவாதிப்பதும் நல்ல அம்சங்களாகும். இந்த அம்சங்களின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் ஒருஆரோக்கியமான கலை, பண்பாட்டுச் சூழலை வளர்க்க நிறையவே உதவ முடியும்.

மனவெளியூடாக உருவாகி வந்திருக்கிற நடிகர், நடிகையர் பட்டாளம் ஒன்று பிரமிப்புத் தருகிறது. நடிகையர் இன்மையால் ஆரம்பத்தில் தடைப்பட்ட மனவெளியின் முயற்சிகளுக்கு இப்போது எந்தத் தடையும் இல்லை என்று சொல்கிறார் மனவெளி நாடகங்களூடாக பிரபலமாயிருக்கும் நடிகரும், மனவெளி குழுவில் ஒருவருமான பாபு.

மனவெளி நடிகையர் வரிசையில் நந்தினி சபேசன், ஜஸ்லீன் லம்பேட், தனா பாபு, பார்வதி கந்தசாமி, உக்ஷா சாந்திநாதன், மாலா விவேகானந்தன், சுமதி ரூபன், கனகநிர்மலா தில்லைநாதன், சத்தியா தில்லை நாதன், இந்து ஜெகநாதன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். பி.ஜே. டிலிப் குமார், சபேசன், செல்வன், பாபு, சகாப்தன், அ.கந்தசாமி, திலீபன், சந்திர குமார், பாலன், செந்தில், ரகுநாதன், நிமால், சுகந்தன் போன்ற புதிய நடிகர்களுடன் கே.எஸ்.பாலச்சந்திரன் போன்ற பழம் பெரும் நடிகர்களும் மனவெளியில் பங்காற்றி வருகின்றனர். தமது நாடக முயற்சிகளுக்கு, நடிகர்கள், ஆர்வலர்கள், நடிகையர், தொழில் நுட்ப உதவியாளர்கள் என ஏறத்தாழ நூறு பேரைத் திரட்டக் கூடிய ஆற்றல் மிகுந்தவர்களாக மனவெளி கலையாற்றுக் குழுவினர் இன்று உள்ளனர்.

தொறன்ரோவில் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்டு வரவேற்பைப் பெற்றிருக்கிற மனவெளி கலையாற்றுக் குழுவினர் நெறியாள்கை, பிரதி போன்ற அம்சங்களில் பெண்களையும் முன்னணிக்குக் கொண்டுவர வேண்டும். பல விடயங்களில் பழமை பேணும் சமூக, கலாசாரக் கட்டமைப்புக்களைக் கேள்விக்குள்ளாக்கியும் உடைத்தும் வருகிற இக் குழுவினர் புதிய நாடகங்கள், புதிய தொழில் நுட்பங்களோடு கூத்து வடிவங்கள், வீதி நாடகங்கள், நாடகம் - நடனம் - இசை - வீடியோ அனைத்தும் இணைந்ததான முயற்சிகளிலும் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும். தொறன்ரோ நகரில் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்களை இயலுமானவரை பயன்படுத்த முன் வரவேண்டும். தமிழ் நாடகமும், அரங்கும், அரங்கியலும் தமிழ் பேசும் நிலங்களுக்கு அப்பாலும் உயிர்ப்போட்டத்துடன் செழிக்க முடியும் என்பதை மனவெளி குழுவினர் தொடர்ந்தும் நிரூபிக்க வேண்டும்.


**– சேரன்**

# ஊழிக்கோளம்: அடிப்படைகளை ஆட்டம்காண வைத்த சிறந்த படைப்பு!

புத்தாயிரப் புகுவிழாவினை "புலர்வு 2000" என்ற பெயருடன் யாழ் திருமறைக் கலாமன்றம் 01,02,03 டிசெம்பர் 1999 மன்ற அரங்கிலே கொண்டாடியது. மூன்று நாட்களாக எடுக்கப்பட்ட இந்த விழாவிலே முதலாம் நாள் நிகழ்வாக கிராமியக்கலையின் சிறப்பினை வெளிக்கொணரும் முகமாக பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் சிறப்பான கலை வடிவங்கள் மன்ற அரங்கில் மேடையேற்றப்பட்டன. காவடி, ஒயிலாட்டம், கரகம், அம்பா, கோலாட்டம், புரவி ஆட்டம் என்பன நிகழ்த்தப்பட்டு கிராமியக் கலையின் அற்புதமான அசைவினையும் இசையினையும் மக்கள் உணர வைத்தது.

"புலர்வு 2000" இரண்டாம் நாள் நிகழ்வாக பொது அறிவு "வினாடிவினா" இறுதிப்போட்டியும், "தாள சுருதி பிறழ்வுப்" பாடல்போட்டியும் சிறப்பு நிகழ்வாக திருமறைக்கலாமன்ற இளையோர் வழங்கிய" புத்தாயிரத்தின் பூபாளம்" என்ற இசை நிகழ்வும் இடம்பெற்றன.

இவ்விழாவின் இறுதிவிழைவாகிய மூன்றாம் நாள் சிறப்பு நிகழ்வாக "ஊழிக்கோளம்" என்ற நவீன நாடகம் சாம்பிரதீபன் அவர்களால் நெறியாக்கம் செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டது.



மொழியென்ற வரையறைக்குள் மனித சிந்தனை சிக்கித்தவிப்பதைத் தவிர்ப்பதற்காக இந்நாடக ஆசிரியர் சைகைகளுக்கு முன்னுரிமை அளித்தமை சிந்தனைக்கு விருந்தாய் அமைந்தது. இவ்வகையில் நடிகர்கள் தங்களுக்குரிய பகுதிகளை சிறப்பாகப் பார்வையாளர்களுக்கு எடுத்து காட்டினார்கள். மொழி சொல்ல முடியாத பல செய்திகளை அவர்களின் நடிப்பு வெளிப்படுத்தியிருந்தது. ஆசிரியர் சொல்ல முயன்ற செய்தி, கருத்து பல்வேறு கோணங்களில் பார்வையாளர்களினால் உள்வாங்கப்பட்டது. ஆடை அலங்காரம், மேடையில் வைக்கப்பட்டிருந்த குறியீடுகள் சிறப்பாக இருந்தன.

ஆசிரியர் கதையை நகர்த்திச் சென்றவிதம் மனிதனின் சில இயல்புகளை வெளிப்படுத்தி நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது. இன்று நேற்று மட்டுமல்ல, மாறாக ஊழி ஊழிகாலமாக மனித இருப்பு தன்னை ஆயுதங்களுடன் அடையாளப்படுத்தி இருப்பது, இருந்தது, வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டது. மேலும் மதங்களூடாக மனிதன் தனக்குள்ளும், தனது சமூகத்துடனும் சமரசம் செய்து கொண்டாலும் அது இறுதியில் தோற்றுப்போவதைக் காணக்கூடியதாகவும் இருந்தது. எமது சமூக அமைப்புக்கள் யுத்தத்தின் காரணத்தை நோக்காது அதன் விளைவுகளுக்குப் பரிகாரம் செய்வதுடன் தம்பணியை நிறுத்திக்கொள்வது சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு பல கருத்துக்களை முன்வைத்த இப்படைப்பு சில அடிப்படை நம்பிக்கைகளை ஆட்டம் காணவைக்கவும் செய்துள்ளது. தீமையில் நின்று நன்மையிலும் ஆதிக்கம் செலுத்தி அதை அழிக்கும் சக்தி தீமைக்கு உண்டு என்கிற போக்குக்காணப்பட்டது. மனிதன் நிறைவை நோக்கிய ஆர்வம் உள்ளவன் அதை நோக்கிச் செல்பவன் என்ற நம்பிக்கையை, யதார்த்தத்தை மறுப்பதாக அது அமைந்திருந்தது. மேலும் நடக்கும், நடக்காது, முடியும், முடியாது என்ற முரண்பாடுகளுக்கிடையே மனிதன் வாழ்ந்து கொண்டிருந்தாலும், நடக்கும் முடியும் என்ற நம்பிக்கையே அவனது வாழ்வை நகர்த்திச் செல்லும் இயங்கு சக்தியாக அமைகின்றது. அந்த நம்பிக்கையை, முடியும், இயலும் என்ற கருத்துக்களை, மறுப்பதாகவும் அது தோன்றியது. ஒரு இலக்கியப் படைப்பை முன்வைக்கும்போது அவ்விலக்கியப் படைப்பு சென்றடைய இருக்கும் மக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவர்கள். இந்த வகையில் இந்த இலக்கியப்படைப்பு சென்றடைந்த மக்கள் யுத்தத்தின் பிடியில் நீண்ட காலமாக சிக்கித்தவிக்கின்றவர்கள் அதன் கொடுமைகளை சுமப்பவர்கள் இந்த மக்களின் மனக்காயங்களுக்கு இவ் இலக்கியப்படைப்பு மருந்திடுவதற்குப் பதிலாக அதை இன்னும் ஆழமாக்கியுள்ளதோ என்ற அச்சம் எழுந்தது. சமய நம்பிக்கை உடையோரின் மனத்தைப் புண்படுத்துவதாகவும் சில கட்டங்கள் இதில் இடம் பெற்றிருந்தன.


மொத்தத்தில் 'ஊழிக்கோளம்' சிறந்த ஓர் இலக்கியப் படைப்பு. குறைந்த வளங்களைக் கொண்டு இவ்விளங் கலைஞர்கள் சிறந்த ஒரு படைப்பு ஆக்கியிருக்கின்றனர்.

**றஜித்தா இளம்பரிதி**

# பெண் ஊடகவியலாளர் ஒன்றுகூடல் ஒரு வரவேற்கத்தக்க தொடக்கம்!

வானொலி நிகழ்ச்சிகளில் பெண்களுக்கு பொறுமை வேண்டுமா, வேண்டாமா- திருமணம் வேண்டுமா, வேண்டாமா என்ற பிற்போக்கான தலைப்புக்களில் இடம்பெறும் கேலிக் கூத்துக்களை எம்மால் ஏன் தடுக்க இயலாதுள்ளது? இலத்திரனியல் ஊடகங்களில் குறிப்பாக வானொலிகளில் கலைத்துவமான பெயர் சூட்டப்பட்டு பெண்களுக்காக பெண்களால் நடாத்தப்படும் நிகழ்ச்சிகள் ஏன் இன்னும் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கின்றன? ஏன் தொலைக்காட்சிகளில் சிறப்பாக பெண்கள் பிரச்சினைகள் அலசி ஆராயப்படுவதில்லை? சிற்சில பத்திரிகைகளைத் தவிர பிற பத்திரிகைகளில் பெண்களுக்கான ஆக்கபூர்வமான விடயங்கள் வெளிவராதது ஏன்?

பெரும்பாலான பத்திரிகைகள், சஞ்சிகைகள் பெண்கள் விடயங்களை எழுதுங்கள் எனப் பெண்களுக்காக மட்டும் எனப் பெருந்தன்மையுடன் (?) ஒதுக்கி விடுவதேன்? நாம் இன்னும் ஆணாதிக்கம் பற்றியும், அடக்குமுறை பற்றியும் ஏன் ஒரே விதமாகக் கதைத்துக் கொண்டிருக்கின்றோம்? ஏன் நாம் ஒரு மாற்றத்திற்கான சூழலை இன்னும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை? போன்ற பற்பல கேள்விகளை தேடல் உள்ள பெண்கள் எழுப்பாமல் இல்லை. ஆயினும் என்ன கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்க பதில்கள் இன்னும் தேடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.



இந்தக் கேள்விகளுக்கான பதில்களைத் தேடுவதில், துரித வளர்ச்சியை எட்டிக் கொண்டிருக்கும் தொடர்பூடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்ற போதிலும் தொடர்பூடகங்களில் உள்ள பெண்களின் பங்களிப்பு, இதன் வெற்றி தோல்விக்கு முக்கியமான காரணி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை எனலாம். குறிப்பாக தொடர்பூடகங்களில் பணியாற்றும் ஒவ்வொருவருக்கும் விசேடமாக பெண்களுக்கு இதில் பாரிய பொறுப்பு உள்ளது எனலாம்.

கடந்த ஜனவரி 16ம் திகதி ஞாயிறன்று பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பின் ஆதரவில் பெண் எழுத்தாளர்கள் மற்றும் பெண் ஊடகவியலாளர்களுக்கான ஒன்று கூடல் ஒன்று இடம்பெற்றது. மேற்கூறப்பட்ட பொறுப்பை உணர்ந்துள்ள பெண்கள் தொடர்பூடகக் குழுவினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

தொடர்ச்சியாக பெண் எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தவும், ஆதரவு தரவும் பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பினால் சிங்கள, ஆங்கில பெண் எழுத்தாளர்களுக்காக ஒழுங்கு படுத்தியிருந்த ஒன்றுகூடல் வரிசையில் தமிழ் பெண் எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்குமான ஒன்றுகூடல் தினமாக அன்றைய தினம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மாதாந்தம் ஒன்று கூடி குறிப்பிட்ட ஒரு தலைப்பில் கலந்துரையாடுவது மற்றும் இவ்வமைப்பினால் வெளியிடப்படும் 'எய' சிங்கள சஞ்சிகையைப் போன்றும், 'ஒப்ஷன்ஸ்' என்ற ஆங்கில சஞ்சிகையைப் போன்றும் தமிழில் ஒரு பெண்கள் சஞ்சிகையை வெளிக்கொணர்வது என்பன இவ்வாறு பெண் எழுத்தாளர்களை, ஊடகவியலாளர்களை இணைப்பதன் நோக்கம் எனத் தெரிய வருகின்றது.

ஊடகவியலாளர்களுக்கென எத்தனையோ சங்கங்கள் உள்ளன. அமைப்புகள் உள்ளன. எனினும், தமிழ் பெண் ஊடகவியலாளர்களுக்கான, எழுத்தாளர்களுக்கான அமைப்புகள் இதுவரை இல்வாதிருப்பது துரதிருஷ்டமானது எனலாம். அதுவும் தமிழ்ச் சூழலில் ஊடகத் தொழிலை அதுவும் பெண்கள் ஊடகவியலாளர்களாக இருப்பதனை ஆச்சரியத்துடன் பார்க்கும் சூழலில், பெண் எழுத்தாளர்களின் ஊடகவியலாளர்களது பிரச்சினைகளை ஆராயவும், அவர்களது தேவைகளை உணர்ந்து கொள்ளவும் கூட்டமைப்பினர் முன்வந்தது விரும்பத்தக்கதே. ஒரு சக்தியாக இவர்களை ஒன்றுபடுத்தி தொடர்பூடகங்களில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த விளைதலும் ஒரு சிறப்பான முயற்சி எனலாம்.

எனினும், இந்த ஒன்று கூடல்கள் வெறும் சம்பாஷணைகளாக மட்டும் இருந்து விடாமல் ஆக்கபூர்வமானதாகவும் அமைதல் அவசியம் என்றே தோன்றுகின்றது. இவர்கள் திட்டமிட்டிருக்கும் தமிழ் பெண்கள் சஞ்சிகை குறுகிய வாசகர் வட்டத்தை கொண்டதாகவோ, குறிப்பிட்ட விடயங்களை மட்டும் தாங்கியதாகவோ இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். அன்றைய ஒன்றுகூடலில் இது பற்றி முன்வைக்கப்பட்ட கருத்துக்கள், விடயங்கள் வரவேற்கத்தக்கதே.


இருப்பினும், நாம் பெண்கள் போகப்பொருளாக பார்க்கப்படுவதையும், விளம்பரங்களில் கீழ்த்தரமாக சித்திரிக் கப்படுவதையும் பற்றி மட்டும் தான் எப்பொழுதும் கதைத்துக் கொண்டிருப்போமா என்பதனையும் சற்றுச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இனி நாம் யோசிக்க வேண்டியது செயற்பட வேண்டியது இவற்றுக்கெல்லாம் தீர்வு என்ன, இதில் பெண் எழுத்தாளர்களின், ஊடகவியலாளர்களின் பங்கு என்ன என்பது பற்றியே. அவ்வாறாயின் மக்களில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும் தொடர்பூடகங்களில் இடம்பெறும் பெண்களுக்கெதிரான அனைத்துவித கூத்துக்களையும், கேலிகளையும் தவிர்த்ததாகவும் இருக்கும். பத்தியின் ஆரம்பத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில்களை தேடியதாகவும் இருக்கும்.

இவற்றுக்கெலாம் முற்போக்காக சிந்திக்கும் பெண் ஊடகவியலாளர்களும், எழுத்தாளர்களும் தயார்! ஏனையவர்கள் தயாரா?

**–ரத்னா**

# நிலாவும் மாமி

எம்.ஐ.எம்.றஊப்



பூரண நிலவுக்கு முந்திய தினம்.

நிலா இன்னும் முத்தாத இரவு. கடகக் கோட்டுப் பக்கமாக சாய்ந்த வண்ணம் காய்ந்து கொண்டிருக்கும் நிலா. ஆராயம் வெள்ளிகளைக் காணவில்லை. துருவ நட்சத்திரம் தோன்றி வர இன்னும் இருந்தது பெரும் பொழுது. தலைப்பிறையின் அடியில் அடர்ந்து பிரகாசிக்கும் பெருவெள்ளி பதிந்து போய் கனநேரம். பச்சை, நீலம், ஊதா, மஞ்சள் என முறை வைத்து மாறி, மாறி ஒளி ஜாலம் புரியும் விண்மீன்கள் மிதக்காத ஆகாசம். மெல்ல மெல்ல நகர்ந்து வரும் சாந்த மாமா மட்டுமேயான வானம்.

அவளுக்கும் நிலவுக்குமிடையில் கந்துகள் பரவி பரந்த பரப்புக் கொண்டபடி கறிமுருங்கை. சித்திரைப் புழுக்கம் கழிந்து பனிக்கத் தொடங்கிய ஆடி மாதப் பின் பனிக் காலம். நிலாவெளிச்சத்தில் கசிந்து, கவிந்து கீழிறங்கிய பனிமுத்துக்கள் சுமந்து கொண்டு பளபளக்கும் இலைப்பொட்டுக்கள் தாங்கிய முருங்கை மரம். கோடைக்காற்றின் வருடலுக்கு ஆடிக் கொண்டு ஒய்யாரம் செய்த வண்ணம் அரும் பிஞ்சுப் புழுக்கள். சாந்த மாமாவின் ஒளியைத் தடுத்தபடி மாமியின் உடம்பைப் போர்த்திக் கொண்ட முருங்கைக் கந்துகளின் சிதறு பின்னல். பின்னல் நிழலில் நெழிந்து ஆடும் அரும்பிஞ்சுப் புழுக்கள் ஊரும் தேகம் கொண்டவளாக மாமி. மல்லாந்த பதிவில் சர்வாங்கம் புதைவு கொண்ட மாமியின் கண்களுக்குள் மிதக்கும் சாந்த மாமா. விழிகளின் கருமையுள் மையம் கொண்டு ஒளிமினுங்கும் பளபளப்புடன் நீந்திக் கொண்ட படி சாந்த மாமா. புழுக்கள் ஊர ஊர சில்லிட்டு அரிப்பு குதிர்ந்து நெடிது கொண்ட எண்ணங்களும், நினைவுகளும் பனித்தபடி முத்துக் குவிந்த பரவசம் நிறைந்தவளாக, இந்தப் பூலோகம் முழுவதுமே தன் நினைவுகளே வியாபித்து இருப்பதாய் மனம்பூத்து, தரையோடு தரையாகப் பதிந்தபடி இமைக்காது கண்களை அலக விரித்து குத்துப் பார்வை கொண்டவளாக மல்லாந்து கிடந்தாள் மாமி.

"சாந்த மாமா... எங்கே போறாய்?"

"மண்ணுக்குப் போறேன்."

"என்னத்துக்கு மண்?"

"ஊடுகட்ட"

"எனத்துக்கு ஊடு?"

"புள்ளப் பொற"

"என்னத்துக்குப் புள்ள?"

"எண்ணக் குடத்துக்க துள்ளி விளையாட"

பள்ளித் தோழர்களும், தோழிகளும் பூரண நிலவெறிக்கும் வானத்தை அண்ணார்ந்து பார்த்த வண்ணம் பாடிப் பரவசித்த வேளைகள் நினைவில் தேங்கி மேலெழும்பி அலைமோதின. இன்னதென அறியாத வயதில் பாடித் திரிந்தவைகள் வந்து ஆயிரம் அர்த்தங்களைச் சொல்லின. பால்யகால எண்ணங்கள் பொங்கிப் பொங்கி வந்து கரைமோத வினோதங் கொண்டாள் மாமி.

தலையை உயர்த்தி வடக்குப் பார்த்தபடி துள்ளக் காத்திருக்கும் ஆயத்த நிலையில் பஞ்சுப்பொதியென வெள்ளை முயற்குட்டி சாந்த மாமா கையில். மல்லாந்த நிலையில் கிடந்தபடி முயலைத் தூக்கி விளையாட வேண்டுமென்று உவகை கொண்டு, நினைத்த கணத்தில் உயர உயரப் பறப்பதாய் உணர்வு கொண்டு முயலைத் தூக்கி அள்ளி அணைத்து ஆலிங்கனம் செய்வதானாள். முட்டி முட்டித் தாழத் துடிக்கும் நீர்க்குடம் போல மனதானாள் மாமி.

நிலாப் பிள்ளை பெற்று இருக்கிறாள் மாமி சின்ன வயசில். பிசை சோத்துக்கு மறுப்புக் காட்டி, உம்மாவின் முலைக்காம்புகளை நினைத்து அழுகின்ற நாட்களில் நிலவான இரவுகளில் நிலாவில் பராக்குற்று அழுதுண்டிருக்கிறாள் மாமி. நிலாவைப் பிடித்து மாமியின் கையில் கொடுத்திருக்கிறாள் உம்மம்மா. பற்களில் படியும் வெற்றிலைக் காவிகளை புகையிலைக் காம்பால் அசடு கழட்ட பாட்டியின் வெற்றிலைக் கிண்ணத்தில் எப்போதும் இருந்தது ரசம் கழன்ற கண்ணாடித் துண்டு. உள்ளங்கையளவு அகன்ற கண்ணாடியில் நிலாப் பார்த்து சோறுண்டிருக்கிறாள் மாமி. இப்போது தெரிந்தது மாமிக்கு. பொத்திப் பிடித்து விளையாட முயற்பிள்ளை பெத்து வைத்திருக்கிறார் சாந்த மாமா. துள்ளி விளையாட பிள்ளை வேண்டி, பிள்ளை பெற வீடு கட்டி, வீடு கட்ட, மண்ணெடுத்த சாந்த மாமா, முயற்பிள்ளை வைத்துக் கொண்டு அவளுக்கு மேலே, அவளுக்கு முகம் பார்த்தபடி.

வீட்டில் அனேகம் பேர் இருந்தார்கள் மாமியைத் தூக்கி விளையாட. பால் வெதனம் முட்டி முலைகள் விண்விண்ணென்று தெறித்த போது, மாமியைத் தூக்கி உம்மா கட்டி அணைத்துக் கொள்வாள். பால் சுரப்பு வற்றி ச்..ச்..சுக் கொட்டும் போது மாமியை விடுத்து, வலி கழிந்த சுகத்தில் நிலாப் போல பிரகாசம் கொள்வாள் உம்மா.

வாப்பா... வாப்பா... என்று மழலை பேசும் மாமியை சைக்கிளில் தூக்கி வைத்துக் கொண்டு புன்னகைத்து நிற்பார் வாப்பா. அடுக்களையில் உம்மாவிடம் வீம்பு காட்டி, குறும்பு செய்யும் மாமிக்கு இடி உரலைக் கொடுத்து விளையாட பாக்குத் துண்டும் கொடுத்தாள் உம்மம்மா. சாந்த மாமாவின் முயற்குட்டி போல மூத்தவாப்பாவின் வெண்தாடி இருந்தது. நீண்ட வெண்தாடிக்குள் முகம் புதைத்து, கை நுளைத்து கூச்சம் கண்டிருக்கிறாள் மாமி. பாக்குக் கசறின் துவர் மணத்துடன் கமழும் வெண்தாடிக் கூச்சம் இன்று போல் இருந்தது மாமிக்கு.

மூத்தவாப்பாவின் தாடி போல ஸ்பரித்து சுகம் கொள்ள சாந்த மாமாவுக்கு ஒரு முயற்பாப்பா. சின்னவனை உரித்து வைத்த மாதிரி செயினம்புவுக்கு மூன்று கடுவன்கள். செம்பட்டை மயிர்ச் சுருளும் பூனைக் கண்களுமாக துருதுருத்த பார்வையில் கொட்டைப் புழுதி எழுப்பிக் கொண்டு திரிந்தார்கள். அணில் மாமி பிடிக்கவும், தும்பி துரத்தவும், வண்ணாத்தி பார்க்கவும் தினமும் கடுவன்கள் வந்துகொண்டு திரிந்தார்கள் மாமியின் முருங்கை மரத்தடிக்கு.

வீட்டில் எல்லோருக்கும் செல்லப் பாப்பாவாக மாமி இருந்தாள். சாந்த மாமாவுக்கும் ஒரு முயற்பாப்பா. செயினம்பு சின்னவனுக்கும் மூன்று கடுவன்கள். நினைத்த மாத்திரத்தில் ஓவென்று அழவேண்டும் போலானாள் மாமி.

மொட்டு அவிழ்ந்து, இதழ் விரியும் பூப்போல ஒளி சுடர்ந்து, விகசித்து, வான்முழுவதும் பரவி விரிந்தது நிலா. கோடைக் காற்று தணிந்து சலனமின்றிக் கிடந்தது உலகு. தடிப்புக் கூடி பணித்துக் கட்டியது ஈரம். காற்றில் பரவாத இறுக்கமான குளிர் நிலம் நோக்கித் தாழும் பனிக்கூதல். நிலைத்த பார்வையிலிருந்து மீளாமல் மல்லாந்த பதிவில் கிடந்த வண்ணம் மாமி. புருவமயிர்களில் பனிக்கசிவு பட்டு குளிர்ந்தன மாமியின் விரல்கள். படிந்த பனிமூட்டத்தை உசுப்பி விடுமாப்போல், ஒரு நீர்க்குடம் சரிந்தது பரவும் பாகோடு. சுழித்து நெழிந்தது படுகோடைக்காற்று. சில கணங்கள் மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்க சிலிர்ப்புக் கொண்டாள் மாமி. சிவந்திருந்த நிலாவெளி அவசரமாக வெளிறி மெல்ல மெல்ல பால் வெண்மையாயிற்று.

கிழக்குத் திசையில் அடிவானிலிருந்து தொடங்கும் சில்லித் தாறாக்களின் கூட்டுச்சத்தம் கேட்டது. கிழக்கை நோக்கி கவனத்தைச் செலுத்தினாள் மாமி. நிலாவைக் கடந்துவிட இன்னும் பல அடிகளேயான தூரத்தில் சாந்தமாமாவைச் சுற்றி அரைவட்டம் வரைந்தாற் போல் கத்திக் கிலுகிலுத்து வரும் சில்லித் தாறாக் கூட்டம். இறகசைந்த நெழிவிலும் சீரான ஒழுங்கோடு மாமியைக் கடந்து நிலாவுக்குப் பின் காட்டி மறைந்தது கொண்டிருந்தன தாறாக்கள். வேகமாய் சுழித்து வந்த மேகத்துள் நிலா மறைய இருட்டில் தனிமையானாள் மாமி.

விரிந்து போகும் பிரபஞ்சம் முழுவதுமே ஈரங்கொண்டதான பேரமைதி. சாந்தமாமா முயற்பிள்ளை எதனையுமே காணாத இருட்டில் கலந்த நிசப்தம். மனசையும், உடலையும் குளிர்வித்து உறையச் செய்துவிட்ட அசாமான்யம் விளைந்த ஏகாந்தம், சுவாசத்தின் உள்மூச்சிலிருந்து கேட்பதான சிறு அழுகுரல். தீனமான குரலில் சிறுபிள்ளை குழறும் ஒலிவாகு. ஒன்றை ஒன்று தொட்டுச் சிலிர்த்து புல்லரிப்பில் மேலெழும் சீவராசிகளுக்கேயான தாபத்தின் அடையாள ஒலி. அது தனது சர்வாங்கத்தின் உள்ளிருந்து மேலேழுவதாக மாமி உணர்வு கொண்டாள். அக்குரலுக்குரியவள் தானே போலவும், தானே சிறுபிள்ளை குரலெடுத்து குழறி அழுவதாகவும் ஆனாள். மனுசப்பிறவி எடுத்த நாற்பது வயதுச் சீவியத்தில் இன்று தான் இவ்வழுகுரலின் தாபம் தன்னைக் கலந்து கொள்வதானாள். வீறிட்டுக்கத்திடுதும் நிலைக்கு முன்னதானபடி முனகலைத் தொடர்ந்த சிணுங்கலை மீறிய சுருதி பிசகாத சீரான தொனி. தொலைவில் ஆரம்பித்து மிக அருகில் கேட்பதான இடநிலை.

திடீரென வானப்படுதாவில் மெல்லிய ஒளிக்கரை தோன்றத் தொடங்கியது. இடம்விட்டு இடம் நகரும் வெண்மேகங்களின் வேகம் கண்களுக்குத் தெரிந்தது. ஒளி மாங்கலில் மூண்டெழக் காத்திருக்கும் தீக்காட்டின் புகைமண்டலம். புகை மண்டலத்தின் அடியில் திரண்டுவரும் மஞ்சள் நிறப்படிவு. பனிமண்டியதாலான ஈரம். ஒளிக்கரை மெல்ல மெல்ல விரிந்து பரப்புக் கூடியது. திடீரென கருமேகம் விலக கைகொட்டிச் சிரித்தது சாந்தமாமா. மாமியைப் பார்த்துச் சிரித்தது முயற்பாப்பா.

மாமிக்குப் பக்கத்தில் பல எட்டுக்கள் தள்ளி முருங்கை மரத்தின் அடியில் பூனைகள். புணரக் காத்திருக்கும் மறிப்பூனைகள் பரிசம் அறியத்துடிக்கும் மீசைகள் குத்திட்டு நிற்க அந்தரத்தில் நின்றது கடுவன் காக்கிப்பச்சையும், வெள்ளையும் மாறி மாறிப் படிந்த திட்டுக்கள் படர்ந்திருந்த உடலோடு தாபங் கொண்டு சினைந்து நின்றது. அடிக்கொரு தடவை பெட்டையைப் பார்த்து நாக்கை நீட்டி உதட்டை நக்கிக் கொண்டது. கண வேகத்துள் பாய்ந்தது பெட்டையின் பிடரியை கவ்விக் கொண்டது. திமிற முடியாதபடி சிராய்ப்புகளை உண்டுபண்ண மாட்டாது. பவ்வியமான பற்களின் ஸ்பரிசம். பின்னங் கால்களை பின்னிழுத்து அடிபணியமறுக்கும் எத்தனங்களின் பின்னர் செய்வதறியாது மிரண்டு கிடந்தது பெட்டை. பனம் பாணித்தோலில் வெள்ளைத் தேமல் படர்ந்த மறையழகு மேலும் தீனமான ஒலி செய்து பொலிவுற்றுக் கிடந்தது பெட்டை. பற்களின் ஸ்பரிசம் பிடறிவழி ஊர்ந்தது. உடலெங்கும் சஞ்சரித்து வாலைச் சிலிர்த்துக் கொண்டது பெட்டை. பற்களின் கூர்மையை விலத்தி நகர்ந்து சிறுநீர் கழித்தது கடுவன். சொறி மணலில் சுர்ரென்று புகுந்து ஒலித்தது நீர்ஒலி.

நன்றி - நூலகத்திட்டம்



# நாவும் மாமி

மீண்டும் அழுகுரல் அடிமனசிலிருந்து மேலழும் பாங்கான சத்தம். விலகத்துடிக்கும் எத்தனங்கள் எதுவுமின்றி குழைந்து நின்றது பெட்டை. பெட்டையின் மறைத் திட்டுக்கள் மீது நாவினால் வருடியது கடுவன். பின் திடீரென்ற பாய்ச்சலில் பற்களின் ஸ்பரிசம். பொத்தல் விழுந்து விடாத ஊசிமுனை இறுக்கம். சுள்ளென்ற வலியை தந்து விடக் காத்திருக்கும் பற்களின் நெருக்கத்தில் ஒரு புழகாங்கிதம். ஒரு வலியை, சிறுவேதனையை உவப்பாக ஏற்றுக் கொள்வதான பரவச நிலை. வாலைச் சிலிர்த்து பின்னங் கால்களை இசைவு செய்து பாடு கொடுத்தது பெட்டை. முனங்கியழும் குரலில் குழரல். தானே சினையுறுவது போலவும், தானே கன்னி கழிவது போலவும் கிளர்வுற்குள் மாமி.

போன அடைமழைக்கு புகையிலைச் சுப்பங்களின் அடிவிளிம்பின் ஓரம், ஆறு குட்டிகளுடன் கிடந்தது கறுப்பிப்பெட்டை. கண்விடுக்க முன்னர் தாயின் முலைக்காம்புகளைத் தேடியவண்ணம் நழுவிநழுவி வழுக்கிக் கொண்டிருந்த குட்டிகளைக் கண்டு ஆசூசைப்பட்டாள் மாமி. அசிங்கத்தை தொட்டுவிட்ட உணர்வுதோன்ற அருவருப்பும் வெறுப்பும் கொண்டாள். கடுவன்களுக்குப் பயந்து இடம்மாற்றிமாற்றி குட்டிகளைக் கெளவித் திரியும் போது தும்புத்தடியை எடுத்து ஒட்டங் காட்டினாள். பெட்டை இல்லாத நேரம் பார்த்து கடுவன் குட்டிகளைச் சாகடித்த போது சும்மா பார்த்து நின்றாள் மாமி.

ஒருநாள் பின்னேரம் பெய்த புகார் மழைத் தூறலுக்குப் பின்னர், மண்டபத்துள் படுத்துக் கொண்டிருந்தாள் மாமி. பாணித்தோல் வெள்ளைத் தேமல் குட்டியும் கறுத்த மறைக்குட்டியும் புகையிலைச் சுப்பத்தின் மேலே துள்ளி விளையாடுவதைக் கண்ட மாத்திரத்தில் மாமி வியந்து நின்றாள். மென்பஞ்சு ரோமங்கள் மெத்தென்று வளர்ந்து பால்குடி மறக்காத குட்டிகள். வேட்டை பழகாது, மாமி சாவாடை வீசாத உடம்போடு அள்ளி அணைத்துக் கொள்கின்ற பொலிவான குட்டிகள். ஆறு குட்டிகளில் பல கண்டங்களைத் தாண்டி உயிர்மிஞ்சிய குட்டிகள். ரோமம் முளைக்காத பச்சைப் பிராயத்தில் அருவருப்பையும், அசூசையையும் ஊட்டி நின்ற குட்டிகளா இவைகள்? அசிங்கத்திலும் அற்புதம் விளைந்த விந்தை.

அடைமழை ஓய்ந்து கூதல் தொடங்கிய காலத்தில் மாமிக்குப் பக்கத்தில் நெருங்கிப்படுத்தன குட்டிகள். பால்குடி மறந்த பின்னரும் வேட்டையில் நாட்டமின்றி மாமியைச் சுற்றியே வட்டமிட்டன குட்டிகள். இசைவாக சோறு பிசைந்து தட்டத்தில் வைத்து மகிழ்ந்தாள் மாமி. உரசி வாலை நுளைத்து கீச்சங் காட்டித் திரிந்தன குட்டிகள். தலையணைக்குப் பக்கத்தில் மாமியின் மடிகைக்குள் கிடந்து இதமூட்டின குட்டிகள். சின்னவன் கறுத்த மறைக்குட்டியை வளர்ப்புக் கேட்ட போது பிரியமனமில்லாமல் கொடுத்தாள் மாமி. அணில் மாமா பிடிக்கவரும் செயினம்புவின் கடுவன்களிடம் கறுத்த மறைக்குட்டியின் சுகம் விசாரித்தாள் மாமி.

இன்று மாமிக்கு எட்டுதூரத்தில் செவிகிழிந்த காக்கிப்பச்சை கடுவனுக்கு முன்னால் படுத்துக்கிடந்தது பாணிப்பெட்டை. பசீரென்ற தண்ணொளி மங்கி, புகைமண்டிய மங்கல் வெளிச்சம் உருவானது. முருங்கையின் சிதறுபின்னல் மறையத் தொடங்கியது. கலங்கிய வெளிச்சத்தில் உருவங்களெல்லாம் கரைந்து போனநிலை ஆரூபம் ஆட்கொண்ட அமைதி. காலை இழுத்து மண்ணை வாரிவிடும் கடுவன். மண்ணில் மண்மோதி ஒலி கொள்ளும் சத்தம். மனசுக்குள்ளிருந்து அழத்தொங்கியது குரல், சின்னக் குரலெடுத்து குழறியது. மீண்டும் தானே சிறுபிள்ளை குரலெடுத்து அழுவதாகவும், அக்குரலுக்குரியவள் தானே போலவும் அழத்தொடங்கினாள் மாமி.


அசூசையில் விளைகின்ற அற்புதம் அருவருப்பில் தோன்றுகின்ற அலங்காரம். அசிங்கத்தில் இனைவுறும் அமானுஷ்யம். சகலதுமான உணர்வு வரப் பெற்றாள் மாமி. சிதறு பின்னல் போட்டபடி மாமிக்கு மேலே சிறு தொலைவில் படர்ந்து நின்றது கறிமுருங்கை. ஒன்று, பத்து, நூறு, பல நூறு புழுக்களென ஆடும் அரும்பிஞ்சுகள். ஒரு கோடி புழுக்கள் சூழ்ந்து போர்த்திக் கொள்ள ஊர மாட்டாதா எனவானாள் மாமி.

முருங்கை இலைச்சுருளில் மகரந்த மணிகளை நிகர்த்த முட்டைகள் பொரிக்கத் தொடங்கியதும், உண்டாகிவிடும் சிறு புழுக்கள். புழுக்களை நினைத்த கணம் அரிப்புற்று அருவருப்புக் கொண்டிருக்கிறாள் மாமி. துளிக்களை உண்டு வளரத் தொடங்கிவிடும் புழுக்கள் நீண்டு, மயிர்கள் சுணை கொண்டு பதிகந்துகளில் சேரத் தொடங்கி விடும் புழுக்கள். சுணை தீண்டி அரிப்புறும் மாமி முற்றத்துக்கு வராது கொள்வாள். நூலிழையில் தொங்கி கீழிறங்கும் மயிர்கொட்டிகளை சுள்ளி கொண்டு குத்தித் திரிவார்கள் சின்னவனின் கடுவன்கள். பிள்ளைகளில் இரக்கம் கொண்ட மாமி பயங்காட்டி போகாது தடுப்பாள். பிள்ளைகளைத் தேடி வரும் சின்னவனிடம் ஓலை கொழுத்தி பொசுக்கச் செய்வாள். தீயில் சுருளும் புகை மணத்தில் மாமிச வாடை கலந்து வாந்தி கொள்வாள் மாமி.

மீண்டும் அண்ணார்ந்த பார்வையில் வியப்பூட்டியது முருங்கை. அச்சம் தவிர்ந்த நிலையில் ஏகாந்த மனுசியாய் முருங்கை மரத்துக்குக் கீழே படுத்திருக்கும் தன் துணிவை எண்ணி மலைப்புற்றாள் மாமி. சுணையிலும் ஒரு அலாதி: அருவருப்பிலும் ஒரு ஆனந்தம் பிறந்ததெல்லாம் மனசுக்குள் வந்தது மாமிக்கு.

நிறைமதிய உச்சிவேளை கடுவன்களைத் தேடிக் கொண்டு உள்நுளைந்து வந்தான் சின்னவன். சுங்கான் கருவாட்டுக்கு பதமான காய் பறிக்கும் ஆயத்தத்தோடு மாமியின் கையில் கத்திக்காம்பு. பிள்ளைகளைக் காணாது திரும்ப ஆயத்தமான சின்னவனிடம் கத்திக்காம்பை நீட்டி மூணுகாய் ஆயச் சொன்னாள் மாமி. கடைசி தம்மை இழுத்து பீடித்துண்டை எறிந்து விட்டு கத்திக்கம்பை உயர்த்தி

ஒரு உலுப்பு உலுப்பி விட்டதும் கீழே கொட்டின காய்கள். காய்களை எடுத்து அடுக்கி, விரல்களால் வாகுபார்த்த மாமி பெருங்குரல் எடுத்துக் கத்தினாள். இழை இழுத்து கீழிறங்கிக் கொண்டிருந்தன மயிர்ப் புழுக்கள். காய்களை எறிந்து விட்டு அபயம் தேடினாள் மாமி. வியர்த்து விறுவிறுத்து பாவாடையை உயர்த்தி உதறினாள் மாமி. விசயம் புரிந்து விட்ட சின்னவன் துரிதம் கொண்டு இயங்கினான். கிணற்றடிக்கு ஓடிச்சென்று வாழை இலைக் குருத்து ஒடித்து வந்தான். மாமியை இருத்தி முழங்காலை நீட்டப் பண்ணினான்.



சில்லுக்கு மேலை பல அங்குலம் தள்ளி குத்திட்டு நின்றன சுணை மயிர்க் கால்கள். இலைக் குருத்தைக் கசக்கி மயிர்க் கால்களைத் தேய்த்தான். சுணை மயிர்கள் குருத்தில் ஒட்டிக் கொள்ள பல தடவை தேய்த்து விட்டான் சின்னவன்.

ரோமம் படராத ஒளி தீண்டாத வழவழப்புடன் மாமியின் இடதுகால். மூட்டுச்சில்லு புதைந்து கிடக்க நீட்டிய பாட்டில் தளதளக்கும் தசைத்திரள்கள். எலுமிச்சை வண்ணத்துள் மினுங்கும் வெண்புள்ளிகளேயான தோலின்வனப்பு. முழங்கால் சில்லுக்கு மேலே ஒரு ரூபாக் குற்றியின் அகலத்தில் சிவந்து குதிர்ந்த தடிப்பு. வீக்கம் கொண்ட தடிப்பின் ரோஸ் வண்ணத்தில் ரோமக்கண்கள் குழிகொண்டிபடி.

பீடிமணம் எச்சிலில் வீச துப்பணி தொட்டுத் தடவினான் சின்னவன். என்ன இதம். மனசு இழகி பவுத்திரம் உண்டான சுகம். பீடி இலை நெருப்பில் கரிந்து புகையிலையில் கலந்து வீசும் தீங்கமறல்மணம் நாசி நெருடலையும் மீறி பாதிரிப்பூவில் முகிழும் வாசம். பாதிரிமரத்தில் வாசம் கொள்ளும் நாகமானாள் மாமி. ஆயிரம் மயிர்க் கொட்டிகள் புரளி பேரரிப்பு உண்டாவதான ஸ்பரிசம் வந்தவள் போலானாள் மாமி.

தன்னிலை உணர்ந்து சுதாகரித்துக் கொண்ட போது துணுக்குற்று நின்றாள் மாமி. காய்களை எடுத்துக் கொடுத்தான் சின்னவன். முகங்கள் மட்டுமே பேசிக் கொள்வதான எண்ணங்கள் குமிழியிட பெருநாணங் கொண்டாள் மாமி.

புகையிலைக் காட்டில் ராஜாங்கம் பண்ணும் மலையசிங்கன் இத்தனை நாள் தீண்டிக் காட்டிராத சர்வாங்கம் புல்லரித்தது மாமிக்கு. உதட்டோரம் படர்ந்திருக்கும் மெலிந்த மீசையும், மொழிதெரிந்த குச்சிகளும், துருத்தும் விலாவெலும்பின் வரிசையுக்கை பெண்மை பெரும் பகுதி கலந்த சின்னவனின் அமானுஸ்யம் கவர நின்றாள் மாமி.

வாழ்வே ஒரு அலாதியான விடிகாலைக் கனவு போல எண்ணலானாள். கண்களுள் மிதக்கும் நிலாவை ஏந்திய வண்ணம் இமைத்தாள். மூடிய ஒரு நொடியில் பல யுகங்களைக் கடந்து வாழ்வின் சாரம் துலக்கம் கொள்வதானாள். முரட்டுக் கரங்களின் தழுவலை மீறிய மெலிந்த தேகவாகில் அலாதி கொள்ளலானாள். உச்சி கழிந்து படுவானில் சரியத் தொடங்கியது. சாந்தமாமா துள்ளக் காத்திருக்கும் முயற்குட்டியைக் காணவில்லை. படுவானில் தோற்றம் காட்டும் ஊவாக்குன்றுகள் போல் காட்சி தந்தது முயற்குட்டி. படுவானில் பதிந்த நிலையில் கறையாகத் தெரிந்த வெண் பஞ்சுக் குட்டியுடன் களங்கம் கொண்டிருந்தது சாந்தமாமா. ஒளிஅள்ளி இறைக்கும் நிலாமாமா முகத்தில் வடு. வசீகரமான முகத்தில் அம்மைத் தழும்புகள் ஆனது போன்ற தோற்றம்.


பதிநிலவு தொடங்க எழுவான் பக்கம் ஏழு கன்னிகள் கண்சிமிட்டத் தொடங்கினார்கள். மாமியைப் போர்த்திக் கொண்டிருந்த முருங்கை மரத்தின் சிதறுபின்னல் இடம் நகர்ந்து வெகுநேரமாகி விட்டது. நிலாப் பட்டுப் போக வெள்ளிகள் பூக்கத் தொடங்கின. இன்னும் சிறிது நேரத்தில் விடிவெள்ளி தோன்றி விடும். அதைத் தொடர்ந்து சுபஹுக்கு பாங்கு கேட்கும்.

இதற்கு மேலும் மரத்தடியில் கிடக்க விரும்பவில்லை மாமி. கனத்திருந்த மனசோடு போர்வையை எடுத்து தன்னை இறுகப் போர்த்திக் கொண்டாள். மாமியின் அசுப்புக் கேட்டு பாணிப்பெட்டை சோம்பல் முறித்து எழுந்து கொண்டது. விடியவும் வண்ணாத்திப்பூச்சி பிடிக்க வரும் செயினம்புவின் கடுவன்களை இப்பவே பார்க்க வேண்டும் போலவும், சின்னவனை நலம் விசாரிக்க வேண்டும் போலவும் மனசானாள் மாமி. சிறகடித்துப் பறக்கும் வண்ணாத்திப்பூச்சுகளோடு உயரப்பறக்க ஆசை கொண்டாள் மாமி.

நன்றி - நூலகத்திட்டம்



# புனிதர்களின் மறுபக்கம்!



"ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம் - கம்யூனிசம் எனும் பூதம். போப்பாண்டவரும் ஜார் அரசனும், ஜெர்மன் உளவாளிகளுமாய் பழைய ஐரோப்பாவின் சக்திகளனைத்தும் இந்தப் பூதத்தை ஓட்டுவதற்காகப் புனிதக்கூட்டு சேர்ந்திருக்கின்றன."

கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையின் முதல்வரியே மேற்கண்டவாறு தான் துவங்குகிறது:

மார்க்சும், எங்கெல்ஸம் அன்றைய போப் ஒன்பதாம் பயஸ் கடைப்பிடித்த வெறிகொண்ட சோசலிச எதிர்ப்பை அறிக்கையில் இவ்வாறு பதிவு செய்தனர். ஆனால், அதன் பின்னர் வந்த போப்-பாண்டவர்கள் அனைவருமே தமது நடத்தையின் மூலம் அறிக்கையின் முதல் வாக்கியத்தை தீர்க்கதரிசனமிக்க பிரகடனமாக்கிவிட்டனர்.

கடந்த மாதம் இந்தியாவிற்கு வந்த தற்போதைய போப் இரண்டாவது ஜான் பால், மறைந்த போப் 12ஆவது பயஸ் என்பவருக்கு புனிதர் பட்டம் வழங்கத் திட்டமிட்டிருந்தார். அது போலவே தெரசாவுக்கும் புனிதர் பட்டம் வழங்க வத்திக்கான் திட்டமிட்டுள்ளதை வாசகர்கள் அறிந்திருக்கக் கூடும்.

இயேசுவின் நேரடியான சீடர்கள் அனைவரும் புனிதர்களாக (Saints) கருதப்படுகின்றனர். புனிதர் என்று அழைக்கப்படுவோர் "இறைவனால் தெரிவு செய்யப்பட்டவர்கள்" என்ற தகுதியை உடையவர்கள். எல்லா போப்-பாண்டவர்களும் கூட புனிதர்களாக அறிவிக்கப்பட்டு விடுவதில்லை. ஒருவரைப் புனிதர் என அறிவிக்க அவரது "தியாகம், சேவை, துறவு மனப்பான்மை, அற்புதங்களை நிகழ்த்தியிருத்தல்" போன்ற பல "கடுமையான" அளவுகோல்களை வத்திகான் வைத்திருக்கிறது.

கத்தோலிக்கத் திருச்சபை வழங்கும் பட்டங்களிலேயே அதியுன்னதமான இந்தப்பட்டத்தை 'போப் 12வது பயஸ்ஸு'க்கு வழங்குவது என்று தற்போதைய போப் முடிவு செய்திருக்கும் நிலையில் ஐரோப்பாவில் வெளிவந்துள்ள ஒரு நூல் கத்தோலிக்க திருச்சபையின் முகத்தில் காறி உமிழ்ந்துள்ளது.

"ஹிட்லரின் போப் - 12ஆவது பயசின் அந்தரங்க வரலாறு" எனும் நூலை ஜான் கார்ன்வெல் என்பவர் எழுதியுள்ளார். இவர் நாத்திகரோ, கம்யூனிஸ்டோ அல்ல. விசுவாசமுள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்.

போப்பையோ, வத்திகா-னையோ அம்பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இவருக்கு ஆரம்பத்-தில் எள்ளளவும் இல்லை. போப் - 12ஆவது பயசின் வாழ்க்கை வரலாறு எழுதுவது தான் இவரது திட்டம். இதற்கான தரவுகளைத் திரட்டுவதற்-காக வத்திகானின் ஆவணக் காப்பகத்தைப் பார்வையிட இவர் அனுமதி கோரிய போது வத்திகான் நிர்வாகம் தயக்கமின்றி இவருக்கு அனுமதி வழங்கியது. இவரது முந்தைய நூல்கள் எதுவும் திருச்சபைக்கு எதிரானதாக இல்லை என்பதே இதற்குக் காரணம்.

ஹிட்லரின் இரத்தவெறி பிடித்த பாசிச ஆட்சிக்கும், அவன் நடத்திய யூதப்படுகொலை-களுக்கும் போப் - 12ஆவது பயஸ் நேரடியாகவும் மறைமுகமாகவும் உடந்தையாக இருந்தார் என்பது தான் இந்நூலாசிரியரின் குற்றச்சாட்டு. "வத்திகான் ஆவணங்களைப் படிக்கப் படிக்க நான் தார்மீக ரீதியாகவே நிலை குலைந்து போனேன். இவற்றை-யெல்லாம் வெளிக் கொண்டு வருவதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை" என்று தனது முன்னு-ரையில் குறிப்பிடுகிறார் கார்ன்வெல்.

> 'கிறிஸ்தவத்தின் மாபெரும் ஞானி (கிறிஸ்து), மக்களின் ஆன்மாக்களுக்கு விமோசனம் கோரித் தமது உடம்பைத் தியாகம் செய்தார். நவீனமான, கல்வியறிவு மிகுந்த ஞானியோ தமது சொந்த ஆன்மாவின் விமோசனத்திற்காக மக்களின் உடம்புகளைத் தியாகம் செய்கிறார்'.

ஐரோப்பா முழுவதும் இலட்சக்கணக்கான யூத மக்கள் நாஜிகளால் படுகொலை செய்யப்பட்ட போது அப்போதைய போப்பாண்டவரான 12ஆவது பயஸ் வாய் திறந்து ஒரே ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்பதை அனைவரும் அறிவர். ஆனால், ஏன் பேசவில்லை என்ற கேள்விக்கான விடை இந்நூலில் தரப்படுகிறது. 12ஆவது பயஸ் போப் ஆவதற்கு முன்னால் 1930களில் வத்திகான் அரசின் செயலாளராக இருந்தார். 1933இல் ஹிட்லர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி ஜெர்மன் அதிபராவதற்கு இவர் இரகசியமாக உதவினார் என்பதே முதன்மையான குற்றச்சாட்டு.

ஜெர்மன் மக்களில் பெரும்பான்மையினர் புரோட்டஸ்டென்ட் கிறிஸ்தவர்கள். மக்கள் தொகையின் 1/3 பங்கினரான கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மத்தியில் "கத்தோலிக்க மையக் கட்சி" எனும் கட்சி செல்வாக்குப் பெற்றிருந்தது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத ஹிட்லரின் நாஜிக்கட்சி ஆட்சிக்கு வருவதற்கு கிறிஸ்தவ மையக்கட்சி உதவியது. பிறகு ஹிட்லர் அதிபராவதற்கு ஏதுவாக கத்தோலிக்க மையக் கட்சி தன்னைத் தானே கலைத்துக் கொண்டதாகவும் அறிவித்தது. 1933இல் ஹிட்லருடன் இதற்கான ஒப்பந்தத்தை இறுதியாக்கினார் பயஸ்.

நாஜிக்கட்சியின் கட்டுப்பாடும் உறுதியான கம்யூனிச எதிர்ப்பும் அவரைப் பெரிதும் கவர்ந்துள்ளது. "நாஜிகள் மதப்பற்றுள்ளவர்களல்ல, எனினும், கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும் நல்லவர்கள் தான். மேலும் ஹிட்லர் ஆட்சியுடன் உறவு வைத்துக் கொள்வதே 'பாவம்' என்று கருத முடியாது" என்று குறிப்பெழுதியிருக்கிறார் 12ஆவது பயஸ்.

இப்படியொரு நாஜி ஆதரவு நிலையை போப்



எடுக்காமல் இருந்திருந்தால் மக்கள் தொகையின் 1/3 பங்குள்ள கத்தோலிக்கர்களை ஹிட்லருக்கு எதிராகத் திருப்பியிருக்க முடியும். பல இலட்சம் யூதர்கள் கொல்லப்படுவதையும் ஓரளவேனும் தடுத்திருக்க முடியும் என்கிறார் நூலாசிரியர்.

மாறாக, நடந்தென்ன? 1939இல் ஹிட்லரின் எஸ்.எஸ். என்ற கொலைப்படையில் 25சதவீதம் பேர் கத்தோலிக்கர்களாக இருந்தனர். பெண்கள் குழந்தைகள் உள்ளிட்ட யூதக் கைதிகளை விஷவாயுக் கூடத்தில் அடைத்துக் கொல்வது ஆக்கிரமிக்கப்-பட்ட நாட்டு மக்களைச் சித்-திரவதை செய்து கொல்வது போன்றவற்றை இந்த கத்தோ-லிக்க நாஜிகள் கூசாமல் செய்த-னர். சாமானிய கத்தோலிக்கர் களை விடுங்கள். ஐரோப்பா முழுவதும் யூதர்கள் படுகொலை செய்யப்பட்ட போது, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கத்தோலிக்க குருமார்களும், பல அரசுகளும் போப் 12வது பயசிடம் எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக் கொண்ட போதும் இந்தப் படுகொலைக்கெதிராக ஒரே ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. கண்டனம் தெரிவிக்காவிட்டாலும் வருத்தம் கூடத் தெரிவிக்கவில்லை.

இப்படியும் ஒரு மனிதர் நடந்து கொண்டி-ருக்க முடியுமா என்று நமக்கு வியப்பு ஏற்படலாம். ஆனால், நூலாசிரியர் அடுத்து விவரிக்கும் சம்பவம் நம் ரத்தத்தை உறையவும் வைக்கிறது. கொதிக்கவும் வைக்கிறது.

1943ஒக்டோபரில் ரோம் நகரிலேயே யூதர்களைச் சுற்றி வளைக்கிறது நாஜிப்படை. அடிமாடுகளைக் கொண்டு செல்வதற்கான லாரியில் அவர்கள் ஏற்றப்பட்டு கொலைக் கூடத்துக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். லாரியின் உள்ளே காவலுக்கு நிற்கின்ற நாஜி இராணுவ அதிகாரிகள் அந்தப் புனித நகரத்தை வேடிக்கை பார்க்க வசதியாக யூதக் கைதிகளின் கைகள் லாரிக்கு வெளியே தொங்க விடப்படுகின்றன. வெளியே தொங்குகின்ற பிஞ்சுக் குழந்தைகளின் கைகள் கடும் குளிரில் நடுங்குகின்றன.

'சென்ட் பீட்டர்ஸ்' என்று அழைக்கப்படும் போப்பின் அரண்மனை வழியே செல்கிறது இந்த அடிமாட்டு லாரிகளின் ஊர்வலம். மாளிகையின் உள்ளே இருக்கிறார் போப். அப்பொழுதும் அவர் பேசவில்லை.

இந்தக் கிரிமினல் குற்றத்தினை நியாயப்படுத்த என்ன விளக்கம் தர முடியும்? எது சரி, எது தவறு என்று தீர்மானிப்பதற்கான அதிகாரத்தைத் தேவனிடமிருந்து பெறுகிறார்கள் போப்பாண்டவர்கள் என்று கூறப்படுகிறது. எது கிறிஸ்தவ நல்லொழுக்கம் என்பது போப்புக்குத் தெரியாதா?

தெரியாமலென்ன? ஹிட்லரின் போருக்கும், படுகொலைகளுக்கும் எதிராக ஒரு வார்த்தை கூடப் பேசாத போப் 12வது பயஸ் இரண்டாம் உலகப்போர் முடிந்த பின் ஹிட்லரை ரசியா தோற்கடித்த பின் சுறுசுறுப்பாகச் செயல்பட்டார்.

கம்யூனிசத்திற்குப் பெருகி வரும் ஆதரவைக் கண்டு பீதியுற்று உலகெங்கும் உள்ள' கத்தோலிக்கர்-களை படையாய்த் திரட்டினார். சோசலிச ரசியா 'மனம் திரும்புவதற்காக' உலகம் முழுவதும் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

12வது பயசின் இந்த கொடூரமான மௌனத்திற்கு இரண்டு காரணங்களைக் கூறுகிறார் நூலாசிரியர். "முதலாவதாக ஹிட்லரைப் போன்றே பயசும் ஒரு சர்வாதிகாரி. எனவே ஹிட்லரின் உணர்வுகளை அவர் மதித்தார், ரசித்தார்."

"இரண்டாவதாக ஹிட்லரைப் போன்றே பயசும் யூத, அராபிய எதிர்ப்பு இனவெறி கொண்டவர். ரசியப் புரட்சியைத் தொடர்ந்து 1919ல் ஜெர்மனியின் மூனிச் நகரில் நடைபெற்ற தொழிலாளர் எழுச்சிக்குத் தலைமை தாங்கிய மாக்ஸ் லெவியன் என்பவரைப் பற்றிக் குறிப்பிடும் போது, "குடிகாரனைப்போலக் கண்கள். வெளிறிய முகம். விகாரமான தோற்றம் கொண்ட அழுக்கு மூட்டையான யூதன், ரசியன்" என்று எழுதுகிறார் 12வது பயஸ். எனவே ஹிட்லர் யூதர்களைக் கொன்று குவித்ததைக்கூடப் போப் தனது அடிமனதில் ஆதரித்திருப்பார்" - என்கிறார் நூலாசிரியர் கார்ன்வெல்.

தற்போது புனிதராக்கப்படுவதற்காக விண்ணுலகில் காத்திருக்கும் 12வது பயஸ், மண்ணுலகில் துறவியாக வாழ்ந்திருந்த காலத்தில் விமானப் பயணம், அதிவேகக் கார்ப்பயணம் போன்றவற்றைப் பெரிதும் விரும்பியவராம். ஹாலிவூட் நடிகைகள் பற்றிய கிசுகிசுச் செய்திக-ளையும் ஆவலுடன் கேட்டுத் தெரிந்து கொள்வாராம்.

போப் 12 வது பயஸைத் தரிசித்து அவரது புறங்கையைப் பணிந்து முத்தமிட்டு அருளாசிபெற்ற ஒரு ஆங்கிலேயர், "போப்பின் கையில் அதிகாலைப் பனியின் தூய்மையான மணம் வீசியதாகவும், அது புனிதர்களின் உடலிலிருந்து மட்டுமே வீசக்கூடிய நறுமணமாக இருக்கக்கூடும்" என்றும் எழுதி வைத்துள்ளார்.

"கையை முத்தமிடும் பக்தர்களிடமிருந்து கிருமிகள் தொற்றிக் கொள்ளாமலிருப்பதற்காக மணம் வீசும் கிருமி நாசினித் தைலத்தில் கையை முக்கி எடுத்து விட்டுத் தான் பக்தர்களுக்கு அவர் தரிசனம் தந்திருக்கிறார்" என்று அந்த ரகசியத்தையும் போட்டு உடைக்கிறார் வத்திகான் ஆவணங்களைக் குடைந்த நூலாசிரியர்.

அன்பு, மனித நேயம் போன்ற கிருமிகள் தன்னைத் தொற்றிக் கொண்டால் விளையக்கூடிய அபாயத்தை போப் யோசித்திருப்பார் போலும்! 12வது பயஸை புனிதராக அறிவிப்பதற்கான 'புனித நறுமணம்' என்ற கடைசி ஆதாரத்தையும் நாறடித்துவிட்டார் கார்ன்வெல்.

000

தன்னைச் சுற்றிலும் கோடிக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்ட போதும் கல்லுளி மங்கனைப் போல மௌனம் சாதித்தற்கான காரணத்தையும் 12வது பயஸ் எழுதி வைத்துள்ளார். "ஒரு வேளை தான் ஹிட்லரை எதிர்த்துப்-பேசியிருந்தால் கத்தோலிக்கர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும்" என்பது தான் போப் கூறும் காரணம்.

இந்த விளக்கமே அநீதியானது என்பது ஒரு புறமிருக்க இது உண்மைக்கும் புறம்பானதாகும். ஹிட்லரின் ஆக்கிரமிப்புக்குள்ளான ரசியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் நாஜிகளால் கொல்லப்பட்ட-வர்களில் கத்தோலிக்கர்களும் தான் அடக்கம்.

நாஜிகள் மீது நடத்தப்பட்ட நூரம்பர்க் விசாரணையில், அவர்களுக்கு உதவியவர்களும் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால், போப்பின் நடத்தை பரிசீலிக்கப்படவில்லை ஏனென்றால், கம்யூனிசத்திற்கெதிராக அமெரிக்காவும், பிற ஏகாதிபத்தியங்களும் தொடர்ந்து நடத்திய யுத்தத்திற்கு வத்திகானின் ஆன்மீக அடியாள் படை அவர்களுக்குத் தேவைப்பட்டது. கம்யூனிச எதிர்ப்பு என்ற பொது நோக்கத்திற்காகப் போப்பின் பாவம் மன்னிக்கப்பட்டு விட்டது.

தற்போதைய போப்பான இரண்டாவது ஜான் பால் கூட ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட போலந்துக்காரர் தான். இருந்தாலும் தனது கம்யூனிச எதிர்ப்பு 'லட்சியத்தை' அவர் கைவிட்டு விடவில்லை.

போலந்தின் லெக்வாலேசாவை ஆட்சியல-மர்த்துவதற்கும் ரசியாவை உடைப்பதற்கும் அமெரிக்காவின் உளவுப்படையாகவே செயல்பட்டது வத்திகான். நிகராகுவாவில் அமெரிக்கக்-கூலிப்படைக்கு எதிராகப் போராடி உயிர்நீத்த சான்டினிஸ்டா இளைஞர்களுக்காக பிரார்த்தனை செய்யக்கூட மறுத்தவர் தான் இன்றைய போப். ஆழ்ந்த மதப்பற்றுள்ள தாய்மார்களும், இலட்சக் கணக்கான நிகராகுவா மக்களும் இந்தப் போப்பை விரட்டியடித்த காட்சியெல்லாம் வீடியோப் படமாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பாவிலும், ரசியாவிலும் போலி சோசலிசம் வீழ்ந்த பிறகு, மேற்கத்திய 'சுதந்திரச் சந்தை' வேலையின்மையையும், பட்டினியையுமே அம்மக்களுக்குப் பரிசாக வழங்கியிருக்கிறது. அமெரிக்காவின் மேலாதிக்கமோ இப்போது பச்சையாக சந்தி சிரிக்கிறது.

நிலைமையைக் கணக்கில் கொண்ட போப் இரண்டாவது பால் "நான் கம்யூனிசத்தை எதிர்க்கிறேன் என்பதனால் முதலாளித்துவத்தை ஆதரிக்கிறேன் என்று பொருள் அல்ல: நான் கம்யூனிசத்தை எதிர்த்ததற்குக் காரணம் கூட அதன் பொருளாதாரக் குறைபாடுகளால் அல்ல: அது தனிமனித கௌரவத்தைக் குலைக்கிறது என்பதனால் தான்" என்று மெதுவாகத் தட்டைத் திருப்பிப் போடுகிறார். இது புதிய தந்திரம்.

000

"யாரிடமிருந்து காசு வாங்குகிறோம் என்பது பற்றிக் கவலையில்லை. அதை எப்படிப்-பயன்படுத்துகிறோம் என்பதே முக்கியம்" என்று கூறிக் கொலைகார இராணுவ சர்வதிகாரிகளிடம் நன்கொடை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு அருளாசி வழங்கியதை நியாயப்படுத்தினார் தெரசா.

"நாஜிகளுடன் உறவு வைத்துக் கொள்வது ஒன்றும் பாவமல்லை" என்று தனது பாசிச ஆதரவை நியாயப்படுத்தினார் போப் 12வது பயஸ்.

இந்த இரண்டு பேரும் தான் 'புனிதர்' ஆக்கப்படுவதற்காகக் காத்திருக்கும் 'இறைவனால் தெரிவு செய்யப்பட்ட ஆத்மாக்கள்'.

கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவ திருச்சபைக்கும் உள்ள சிறிய வேறுபாட்டை ஒரே வரியில் விளக்கினார் கார்ல் மார்க்ஸ்:

"கிறிஸ்தவத்தின் மாபெரும் ஞானி (கிறிஸ்து), மக்களின் ஆன்மாக்களுக்கு விமோசனம் கோரித் தமது உடம்பைத் தியாகம் செய்தார். நவீனமான, கல்வியறிவு மிகுந்த ஞானியோ தமது சொந்த ஆன்மாவின் விமோசனத்திற்காக மக்களின் உடம்புகளைத் தியாகம் செய்கிறார்".

– சூரியன

*குறிப்பு: போப்பை அம்பலப்படுத்தியதற்காக இந்து வெறியர்களான 'ஆர்.ஆர்.எஸ்-காரர்கள் குதூகலிக்கத் தேவையில்லை..அகில உலக ஹிட்லர் ரசிகர் மன்றத்தின் தலைவரே கோல்வால்கர் தான் என்பதை "ஞான கங்கை'யைப் படித்துத் தெரிந்து கொள்க.*

நன்றி: புதிய கலாசாரம்

நன்றி - நூலகத்திட்டம்



## புத்தாயிரமாம் ஆண்டு:

# யாருடைய கொண்டாட்டம்?

மனித வரலாறு ஏறத்தாழ 60 லட்சம் வருடங்களைக் கொண்டது. ஆனால், மனித வரலாற்றை 2000 ஆண்டுகளாக காட்டுவது கிறிஸ்தவ ஆதிக்க பண்பாட்டின் தொடர்ச்சியாகும். இயற்கையின் வரலாற்றை மறுத்த மனிதன், மனித வரலாற்றை இயற்கை வரலாறாக காட்டுவது போல், மனித வரலாற்றை மறுத்து, மேற்கின் கிறிஸ்தவ ஆதிக்கத்தை, அதன் வரலாற்றை மனித வரலாறாகக் காட்டுவதே, இந்தப் புது வருடக் கூத்துகள். கிறிஸ்து பிறந்ததை அடிப்படையாகக் கொண்டு வரையறை செய்யும் இந்த வரைமுறை, மேற்கின் பொருளாதார ஆதிக்கத்தால் உலக மயமாகின்றது. மனித வரலாற்றில் எத்தனையோ பண்பாடுகள், எத்தனையோ கலாசாரங்கள், (ஒவ்வொரு மக்கள் குழுமத்தினருக்கும் வேறுபட்ட புது வருடம் உண்டு) இருந்த போதும், அவற்றை மறுத்து மேற்கின் காலனித்துவம் கிறிஸ்தவ வடத்தையே உலகின் புதுவருடமாகக் காட்ட முனைகிறது.

கிறிஸ்தவப் புது வருடத்தை வரையறுத்து அடையாளப்படுத்திய 2000 ஆண்டு உலகம் அழிந்து போகும் என்று மதப் பிரச்சாரத்தை அதன் கொண்டாட்டத்தின் ஊடாகச் செய்து வந்தன சில மதக் குழுக்கள். இதையே பன்னாட்டு நிறுவனம் தனது வர்த்தக நலன் சார்ந்து கொம்பியூட்டர் ஊடான அழிவாகப் பிரமிக்க வைத்தன. 1999க்கு அடுத்தது 2000 என்பது வெறும் எண் என்பதை மறுத்து; இந்த மாற்றம் மனிதனுக்குப் புறம்பான (கற்பனையான) சக்திகளுக்கு உட்பட்டதாக பிரமிக்க வைத்தே இதை அரங்கேற்றினர். இதன் மூலம் மதப் பிரச்சாரத்தை மதவாதிகளும், பன்னாட்டு நிறுவனங்கள் வர்த்தக விளம்பரத்தையும், இந்த அழிவு மிரட்டல் ஊடாக சாதித்தன. இதன்போதான வர்த்தக சூறையாடலுக்காக தாங்கள் உருவாக்கிய சொந்த கண்டுபிடிப்புகளைக் கேலிசெய்தபடியே தான் இந்த விளம்பரத்தை மெருகேற்றினர்.

மேற்கு நாடுகளிலும், மற்றைய நாடுகளின் முன்னணி தலைநகரத்திலும் பணத்தைக் கோடி-கோடியாக வாரியிறைத்து புதுவருடக் கொண்டாட்டத்தை ஏகாதிபத்தியப் பண்பாடாக்கினர். பொருளாதார ரீதியாக வசதியான ஏகாதிபத்திய ஆதரவுப் பிரிவுகளின் கொண்டாட்டம் உலகெங்கும் பண்பாடாகிப் போன வக்கிரத்தின் பின்னால் இன்னொரு உலகம் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் ஏகாதிபத்திய பண்பாட்டு நடிகர், நடிகைகள் தொடங்கி வைக்க, இந்தப் பண்பாட்டு கலைஞர்கள் முன்னிற்க, அந்நாட்டு தலைவர்கள் இரண்டாவது வரிசையில் நின்று புதுவருட வாழ்த்துக்களைக் கூறிக் கொண்ட போது பன்னாட்டு நிறுவனங்கள் தமது சந்தைக்கான விளம்பரத்தை இலவசமாக சர்வதேசமயமாக்கின. இந்த வக்கிரத்தின் பின்னால் ஒரு உலகம் மூச்சுவிட நேரமின்றி அழுகின்றது.

புதுவருட கிறிஸ்தவ பொருளாதார ஆதிக்க பண்பாடு இன்று ஏகாதிபத்திய பண்பாட்டால் கொண்டாடப்படுகின்ற போது, இந்த புதுவருடம் பிறந்ததையே தெரியாது போன மக்கள் கோடிக்கணக்கில் வாழும் சூனியமான உலகமிது. கொண்டாட்டத்தின்போது கோடிக்கணக்கில் மிதமிஞ்சிய வகையில் உண்டும், குடித்தும் வீணாக நாசமாக்கிய இரவு, 150 கோடி மக்கள் இரவு பட்டினியுடன் இந்தக் கொண்டாட்டத்துக்காக கொண்டாடும் ஜனநாயகவாதிகளுக்காக, தமது வயிற்றை வழமை போல் சுருக்கி கொண்டனர்.

ஏகாதிபத்திய புதுவருடம் பிறந்த அந்த வினாடிக்கு முன்பின்னாக 48 மணித்தியாலத்தில், உலகில் 3332 பச்சிளம் குழந்தைகள் தமது முதல் ஏழு நாட்களுக்குள்ளாகவே பட்டினியில் துடித்து சாகின்ற போது, அவர்கள் இந்த கொண்டாட்டத்துக்கு தமது பாலையே தியாகம் செய்தனர். அதேநேரம் ஒரு லட்சம் பேர் 48 மணித்தியாலத்தில் பட்டினியால் செத்துப் போகின்றனர். முதல் பத்து நோய்காரணமாக மருந்து வாங்க பணமின்றி உலகில் 48 மணித்தியாலத்தில் 2.9 லட்சம் பேர் இறந்து போகின்றனர். இந்த குழந்தைகளின் உறவினர் 50 கோடி பேர் குறைந்த பட்சம் தண்ணீரைக் கூட குடிக்க முடியாது தாகத்தால் தவித்த போது வில்லங்கமாக வயிற்றை நிரப்பிய போதையில் வக்கிரத்தை வெளிப்படுத்தினர்.

எல்லா தலைநகரத்திலும் ஏகாதிபத்திய புதுவருடம் தொடங்கிய போது வானவேடிக்கைக்கு இடையே பெண் அரைகுறை நிர்வாண ஆட்டத்தை ஆடவைத்து ஆணாதிக்கத்தை உலகமயமாக்கி வக்கிரப்படுத்தினர். ஆனால், புது வருடத்துக்கு முதல் நாளும் அடுத்த நாளும் இந்த வக்கிரத்தால் உருப் பெற்றவர்கள் பெண்களை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்குகின்றனர். அமெரிக்காவில் ஒன்றரை நிமிடத்துக்கு ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குஉள்ளாக்கப்படுகின்றாள் எனின், 1920 பெண்கள் இந்த புதுவருடத்துக்கு முன் பின் என 48 மணித்தியாலத்தில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட போது புதுவருடம் அப்பெண்ணுக்கு ஆணாதிக்கமாகவே வக்கரித்து பிறந்து இருக்கும். உலகில் எத்தனை பெண்கள் இந்த ஆணாதிக்க புதுவருடத்தை சொந்த அனுபவத்தின் ஊடாக கண்டிருப்பர்.

முதல் குழந்தை பிறப்பது பற்றிய பிரமிப்புகளும், அதற்கு அள்ளிக் கொடுக்கும் பரிசுகளும் சுரண்டும் ரிக்கற்ரை சுரண்டிப்பார்க்கும் சுரண்டும் வக்கிரத்தை கொட்டியது. முதல் குழந்தை பற்றிய வருணனைகள், பட்டினியில் பிறந்தவுடன் செத்துப் போன எந்தக் குழந்தைகள் தொடர்பாகவும் காட்டப்படுவதில்லை. புதுவருடம் பிறந்த அந்த நிமிடமே, இரண்டு குழந்தைகள் தமது முதல் ஏழு நாட்களுக்குள் இதைக் கொண்டாடுபவர்களின் நல்வாழ்வுக்காக தம்மை அந்த நிமிடம் தியாகம் செய்தனர். இதில் பிறந்தவுடன் தியாகம் செய்தவர்களையும் உள்ளடக்கும். அதே நேரம் புதுவருடம்



பிறந்த அந்த நேரம் தொடங்கி ஒவ்வொரு நிமிடமும் கொண்டாட்ட முழக்கத்துக்கிடையே ஒரு தாய் இந்த புதிய ஏகாதிபத்திய நுகர்வு வருடத்துக்காக தனது பிரவசத்தின்போதே தியாகம் செய்து செத்துப் போகின்றாள்.

புதுவருடத்தில் முதல் பாலியல் வல்லுறவு, முதல் பட்டினிச்சாவு, முதல் மருந்தின்றி சாவு, முதல் குடிக்க தண்ணீர் இன்மையின் அவலம், முதல் பிரசவ இறப்பு, முதல் குழந்தையின் பிரசவ இறப்பு என்ற மனித அவலமும் முதல் ஏகாதிபத்திய புதுவருட முதல் நிமிடத்தில் நிகழத் தான் செய்தது. இது தொடர்ந்து ஒவ்வொரு நிமிடமும் தொடர்ந்த வண்ணம் தான் இந்தப் புதிய வருடம் நகருகின்றது. இதே போல் நிறம், சாதி, இனம், மத ஆதிக்கத்தால் முதல் படுகொலையும், முதல் அவமானமும் தொடரத்தான் செய்கின்றது. இது இரத்தக் கண்ணீரில், இந்தக் கொட்டும் வக்கிர இசை மழையில், ஆடிக்காட்டும் நிர்வாண ஆட்டத்தில், வெடித்து அதிர்ந்து செல்லும் ஓசையில் புதைந்து போகின்றது. இந்தக் கொண்டாட்ட வெளிறிப்போன வெளிச்சத்தில் வெளிறிப் போகின்றது. இந்த ஏகாதிபத்திய சமுதாயத்தின் தொடர்ச்சியைப் போற்றித் தான் புதுவருடம் கொண்டாடப்படுகின்றது. உலகில் எந்த மனிதரும், புதுவருட மகிழ்ச்சியில் ஆனந்த கண்ணீர் வடித்ததில்லை. எந்த மனிதருக்கும் (முதலாளிகளைத் தவிர) புதிய வாழ்வும், நம்பிக்கையையும் புதுவருடம் கொடுத்து விடுவதில்லை. மாறாக, மேலும் அவலம் காத்திருப்பதையே யதார்த்த வாழ்வாக கொள்கின்றனர்.

இந்த வெம்பிப் போன கொண்டாட்டத்தை சந்தைப்படுத்தியதில் பன்னாட்டு நிறுவனங்கள் வெற்றி பெறுகின்றன. ஆடம்பரமாக தின்னவும், குடிக்கவும், பரிசளிக்கவும், கூத்தடிக்கவும், கற்றுக்கொடுத்த இப்புதுவருடம் பல ஆயிரம் கோடிகளை கோடீஸ்வரர்களுக்கு அள்ளிக் கொடுத்தது. இந்தப் பண்பாடு அடுத்த நூற்றாண்டில் மக்களைச் சுரண்டி கோடிகளை திரட்ட கதவை திறந்துள்ளதை இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் தமது கொண்டாட்டத்தின் ஊடாக வெளிப் படுத்துகின்றன. இதற்காக கோடிக்கணக்கான மக்கள் தம்மை தியாகம் செய்வதன் ஊடாக இந்தக் கொண்டாட்டம் அழகுபடுத்தி கவர்ச்சி காட்டுகின்றது. ஆனால், புகைந்துகொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தில் தீ பற்றும் போது, இந்த ஏகாதிபத்திய புதுவருடத்தின் பொய்மை பொய்த்துப் போகும். இந்த ஏகாதிபத்திய புதுவருடத்திற்காக தியாகம் செய்யும் கோடிக்கணக்கான மக்கள் புதிய வாழ்வை, அந்தப் புதிய வரலாற்றில் புதிய புதுவருடமாக்குவர். அதுவரை இந்த விபச்சார புதுவருடங்கள் அழகு காட்டும், கவர்ச்சி காட்டும். இதை கண்டு மயங்கி விபச்சாரம் செய்வது பண்பாடாகும்.

- பி. ரஜாகரன்

---

புத்தாயிரமா, சகத்திரமா என்ற சொற்களுக்கான சர்ச்சைகளோடு புதிய ஆயிரமாம் ஆண்டை வரவேற்கும் முயற்சிகள் 99 நடுப்பகுதிகளிலேயே இங்கு ஆரம்பமாகி விட்டது தெரிந்த விடயமே. அதன்பின் கண்கள் தழுவிச் செல்லும் இடமெலாம் மில்லேனிய மயம்....

புது ஆயிரமாம் ஆண்டை வரவேற்கும் முகமாக பல தரப்பட்ட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்த வகையில் தொலைக்காட்சி ஊடகங்களின் பிரதான ஏற்பாட்டிற்கமைய நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை இம்முறை புத்தாண்டு நிகழ்ச்சிகளின் சிறப்பம்சமாகச் சொல்லப்பட்டது.

எனினும், மிகவும் ஆடம்பரமாக, ஆர்ப்பாட்டமாக புதிய ஆயிரமாம் ஆண்டு வரவேற்கப்பட பொதுவாக இலத்திரனியல் ஊடகங்கள் தாம் பெரும் பங்கு வகித்தன எனலாம். வருட ஆரம்பத்திலேயே மில்லேனியத்தை வரவேற்கும் வகையில் நிகழ்ச்சிகள் யாவும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

சமாதான தீபமேற்றல், சமாதான ஊர்வலம் என்றவாறான பல செயற்பாடுகளும், களியாட்ட விழாக்களும் இதனுள் அடங்கும். எனினும், புத்தாயிரமாவது, புதுவருடமாவது என சலித்துக் கொள்ளுபவர்கள் நம்மத்தியில் உள்ளனர் என்பதை மறந்து, சுபீட்சமான சமாதானமான நாட்டில் களிப்படைவதே இந்த செயற்பாடுகளின் நோக்கம் என்றவாறு புதிய ஆண்டுக்கான வரவேற்பு நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

இந்த வகையில் தொலைக்காட்சி நிறுவனங்களான ரூபவாகினி, ஸ்வர்ணவாஹினி, டி.என்.-எல், சுயாதீன தொலைக்காட்சி சேவை, சிரச டிவி என்பன தம் பங்குக்கு தமது சக வானொலி அலைவரிசைகளுடன் இணைந்து இந்த கொண்டாட்டங்களை நடாத்தி முடித்துள்ளன. எனினும் கொண்டாடி மகிழ்வுறும் அளவுக்கு புத்தாண்டு அமைந்து விடவில்லை என்பதனை பலரும் நன்கறிவர்.

ரூபவாஹினி- தெதஹசே பிரசங்கய, சுயாதீன தொலைக்காட்சி சேவை- யுகாந்தய, ஸ்வர்ணவாஹினி- சகஸ்ர யாத்திரா, சிரச டிவி குழந்தைகளுக்கான சமாதானம் என்று பலவாறு பெயர்களைச் சூட்டி நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளன. இந்தக் கொண்டாட்டங்கள், களியாட்ட விழாக்கள் நடாத்துவதற்கு பெருமளவு பணம் செலவளிக்கப்பட்டது என்பது அவர்களது நிகழ்ச்சி பற்றிய அறிமுகங்களின் போது தெரியவருகின்றது.

ஸ்வர்ணவாஹினியின் சகஸ்ர யாத்திரா 500 லட்ச ரூபா செலவில் கொழும்பு காலிமுகத்திடலில் பலவித மேடை அலங்காரங்களுடன், இரவு 12.00 மணிக்கு பூமிக்கு வரும் செய்மதி ஒன்று என்றவாறான ஆச்சரியமூட்டல்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதேபோல் சிரச டிவி நிறுவனம் வருட மத்தியில் 'கார்னிவல் 2000' என்ற பெயரில் கொழும்பு பி.ஆர்.சி மைதானத்தில் நடாத்தி முடித்த களியாட்ட விழாவின் நிகர லாபம் 80 லட்சம் என்றும் தெரிய வருகின்றது. இது போன்று பல தொடர்ச்சியான களியாட்ட விழாக்களும் நடைபெற்றிருந்தன.

வழமை போல் சிங்கள பௌத்த பெருமைகளையும், இலங்கையின் சிங்கள வரலாற்று சிறப்புகளையும் வெளிப்படுத்தும் வகையிலும், பெண்களை அலங்காரப் பதுமைகளாக ஆட விட்டு ரசிகர்களை பரவசப்படுத்தும் பரவலான போக்கும் இந்த நிகழ்ச்சிகள் அனைத்திலும் காணக் கிட்டியது.

இவ்வாறு புது ஆயிரமாம் ஆண்டை வரவேற்ற இந்நிகழ்ச்சிகள் பற்றி அவ்வவ் இலத்திரனியல் ஊடகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் கூறிய விடயங்கள் கீழே தரப்படுகின்றன. ஏன் இத்தனை ஆர்ப்பாட்டம், ஏன் இத்தனை வரவேற்பு என்ற சாதாரண மக்களின் வினாக்களுக்கு தங்கள் தரப்பிலிருந்து அவர்கள் பின்வருமாறு பதிலளிக்கத் தலைப்பட்டனர்.

***ஹேம நளின் கருணாரத்ன* - ரூபவாகினி**

டிசம்பர் 31 நிகழ்ச்சி என்பது ஒரு தந்திரம் மட்டுமே. டிசம்பர் 31 இரவு 7.00 மணிக்கு ஆரம்பித்து 2000 ஜனவரி காலை 4.00 மணிவரை காலி கோட்டையில் சமனல அரங்கில் இடம் பெறும் இசை நிகழச்சிக்கு முன்னர், இதேபோன்று மூன்று நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவை காலிமுகத்திடலில், அனுராதபுரம் மற்றும் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றன. காலை 7.00 மணி தொடக்கம் பகல் 12.00 மணி வரை சிறுவர் நிகழ்ச்சி ஒன்று நேரடியாக நடாத்தப்படுகின்றது. 2.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர் நிகழ்ச்சி ஒன்றையும் நடாத்துகின்றோம்.

இவ்வாறான நிகழ்ச்சிகளின் மூலம் சிறுவர்களதும், இளைஞர்களதும் திறமையை வெளிக் கொணர்வதே எமது நோக்கம். மாறாக இது வெறும் 31ம் திகதி இரவு ஆடும் ஆட்டமல்ல. இதன் மூலம் நன்மையடைவது நாமில்லை அவர்களே.

***ஸ்ரீமால் வெடிசிங்க* - ஸ்வர்ணவாஹினி**

தொலைக்காட்சி வரலாற்றில் மிகவும் பாரிய களியாட்ட நிகழ்ச்சியை நாங்கள் தான் வழங்குகின்றோம். "சகஸ்ர யாத்ரா" என்ற பெயரில் நாம் மேற்கொள்ளும் இந்த நிகழ்ச்சியின் தொனிப்பொருள் "இரத்தின துவீபத்தின் வரலாற்று பெருமைகளினூடாக நாம் மூன்றாவது சகத்திரத்தில்" என்பதாகும். புதிய தொழினுட்பம் வந்தாலும் எமது வரலாற்று உரிமைகள், கலாசாரங்கள், உண்மைகள் இவற்றை அழிக்காமலேயே நாம் புத்தாயிரத்திற்குள் புக வேண்டும். காலிமுகத்திடலில் நிகழச்சிக்கென அமைக்கப்படவுள்ள மேடைக்கு நாம் ஐந்து லட்சத்திற்கு அதிகமாக செலவு செய்துள்ளோம். இலவசமாக கண்டு களிக்கக் கூடிய இந்த நிகழ்ச்சியை நாம் நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்கின்றோம்.

***நீல் கருணாரத்ன* - ரி.என்.எல்**

புதிய வருடத்தின் பிறப்புடன் மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்த மேடை நிகழ்ச்சிகளை தயாரித்தது முதன்முதல் நாம் தான். எனினும் தற்போது அனைவரும் இதனை கடைப்பிடிக்கின்றனர். இம்முறையும் எளிய செலவில் நிகழ்ச்சி ஒன்றை நாம் ஒழுங்குபடுத்தியுள்ளோம். இந்த நிகழ்ச்சியை பிரதான ஹோட்டல் ஒன்று ஏற்பாடு செய்துள்ளது.

***ரஞ்சித் ஹேவாபட்டகே* சுயாதீன தொலைக்காட்சி**

எமது பிரதான நிகழ்ச்சியான யுகாந்தய 31ம் திகதி இரவு 9.00 மணிக்கு ஆரம்பமாகி அடுத்த நாள் வரை பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். மேடை பின்னணியில் உள்ள திரையில் மிகப் பழமையான காலத்தின் படைப்புகள் காட்டப்படும். இறந்த கலைஞர்களை நினைவூட்டி பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களுக்கு விருது வழங்கி கௌவிக்கப்படுவர். குறிப்பிட்ட ஒரு துறைக்கென ரூ.50,000 பரிசும் உண்டு. "மில்லேனியம் லைவ் ஹியுமனிஸ்ட் புரோட்காஸ்ட் " என்ற நிகழ்ச்சியை செய்மதியூடு பெற்று 2.00 மணி முதல் ஒளிபரப்பவுள்ளோம்.

***நிமல் லக்ஸபத்திஆரச்சி* - சிரச**

பிபிசியும் அமெரிக்காவின் பொஸ்டனின் டபிள்யூஜிவிஎச் தொலைக்காட்சி நிலையமும் பிறக்கும் புதிய ஆயிரமாம் ஆண்டில் தொலைக்காட்சி மூலம் உலகத்தை ஒன்றுபடுத்தல் வேண்டும் என்ற யோசனையை முன்வைத்திருந்தது. உலகத்துடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு கிட்டும் அந்த சிறிய நேரத்தில் யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்படும் சிறுவர்கள் பற்றி நாம் கதைக்க தீர்மானித்தோம். சிறுவர்களுக்கான சமாதானம் என்ற தொனிப்பொருளில் நாம் நிகழ்ச்சியை படைத்தோம். தலா 8 நிமிடம் 150 நாடுகளுடன் இணைய மூன்று சந்தர்ப்பங்கள் இலங்கைக்கு கிடைத்துள்ளது. இந்த நிகழ்ச்சியில் 2000 சிறுவர்களுடன் இசைக்கப்படும் சமாதான பாடலும் உள்ளடங்கும். சிறுவர்களை நோக்காகக் கொண்ட இந்த நிகழ்ச்சி ஜனவரி 01க்காக மட்டும் மேற்கொள்ளப்பட்டதல்ல. சிறுவர்களுக்காக இந்நாட்டில் தேசிய கொள்கைகளை வகுப்பது வரையில் ஒரு நீண்ட பயணத்தை மேற்கொள்ளவே நாம் நடவடிக்கை எடுத்தோம்.

இவ்வாறு இவர்களது கருத்து அமைகின்ற போதிலும் புதிய ஆயிரமாம் ஆண்டில் நாம் எம்முடன் எடுத்துச் சென்றிருக்கும் பல விடயங்கள், கூடிக் கொண்டாடி மகிழும் தன்மையானதா என்பது சற்று சிந்திக்கத் தலைப்பட வேண்டிய விடயம். ஏனெனில் இன்னும் விடியாமல் விடிவுக்காக ஏங்கியிருக்கும் மக்கள் நம்மத்தியில் ஏராளம்....ஏராளம்.....

- ருத்ரா

நன்றி - நூலகத்திட்டம்



# பாலங்கள்

## 'வெளிக்குள் வெளி'
## கல்லூரன் கவிதைகள்

"வெளிக்குள் வெளி" என்ற தலைப்பில் கவிஞர் கல்லூரனின் கவிதைகள் தொகுப்பாகி வெளிவந்துள்ளன.

கவிஞர் கல்லூரன் பற்றி "ஆகவே" ஆசிரியர் ஜபார் அவர்கள் பின்வருமாறு கூறுவது நமக்கு அவரை அறிமுகப்படுத்துவதாக அமைகிறது. "கல்முனைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த "கீற்று" சஞ்சிகை பற்றிய நினைவுகள், கவிஞர் ஆர்.என். லோகேந்திரலிங்கனுடன் இணைந்து செயல்பட்ட கவிஞர் கல்லூரனை அறிமுகம் செய்து வைப்பதை அவசியமற்றதாக்கி விடுகின்றன".

இக்கவிதை நூலுக்கு கவிஞர் சண்முகம் சிவலிங்கம் நீண்டதோர் முன்னுரை வழங்கியுள்ளார். இம்முன்னுரையில் சில நுணுக்கமான விஷயங்களை சண்முகம் சிவலிங்கம் வெளிக்கொணர்ந்திருக்கிறார். கல்லூரன் தான் வாசித்த பிற கவிதைகளின்- குறிப்பாக ஆங்கிலக் கவிதைகள்- அருட்டுணர்வால் எழுதப்பட்ட கவிதைகளையும், அவ்வாறன்றி, கல்லூரன் தன் சொந்த அனுபவ உந்துதலில் படைத்த கவிதைகளையும் இனம் பிரித்துக் காட்டுகிறார். முதலாவது வகைக் கவிதை பற்றி சண்முகம் சிவலிங்கம் கூறுகையில், "இது தனது உணர்வைப் பிற சிந்தனை மூலத்தில் அடையாளம் கண்டு, அவைகளை உள்ளிணைத்துக் கொண்ட ஒரு நிலையே. இந்த உள்ளிணைப்புக்களில் வெளிப்படுவது கல்லூரனின் சொந்த உணர்வும், பிரச்சினைகளுமே ஒழிய மூலத்தினுடையது அல்ல. பிற படிம மூலங்களை உள்ளிழுத்து மீளமைப்புச் செய்கின்ற இவ்வகையான கவிதைகளை உள்ளிணைத்த கவிதைகள்" என்று கூறுகிறார். இரண்டாவது வகையான கவிதைகளை "சுயம்புவான கவிதைகள்" என்கிறார்.



கல்லூரன் ஆங்கிலத்திலும் கவிதை எழுதுபவர் பொன் கணேஷ் என்ற பெயரில்! இவரின் ஆங்கிலக் கவிதைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு கல்லூரன் ஆங்கிலத்திலும் நல்ல பரிச்சயமுடையவராதலால் இவர் வாசித்த ஆங்கிலக் கவிஞர்களான ஷெல்லி, கீற்ஸ், ரி.எஸ். எலியட் போன்றவர்களின் பாதிப்பு, எவ்வாறு இவரால் உள்வாங்கப்பட்டு, பின்னர் அவை இவரின் சுய வெளிப்பாட்டுப் படைப்புகளாக மாறுகின்றன என்பது பற்றி சண்முகம் சிவலிங்கம் விரிவாகத் தந்துள்ளார்.

மேலே குறிப்பிட்டவை, கல்லூரன் கவிதைகளை படிக்க முனைவோருக்கு சிறிது வெளிச்சத்தை தருவதாய் அமையலாம்.

இவைபோக, கல்லூரன் கவிதைகள் பற்றி சுருக்கமாகச் சொல்வதானால், -அவரது கவிதைகளுக்கு பின் இயக்கியாக அமைவது- அவரது கவிதையொன்றின் தலைப்பாக போடப்பட்டுள்ள "புலப்படாத துயரம்" என்றே கூறலாம்.

இப்புலப்படாத துயரமே அனேக நல்ல கவிஞர்களின் கவிதைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளனவென்றால் மிகையாகாது. இக்கவிதைத் தொகுப்பின் முதல் கவிதையான "ஒரே முகம்" என்ற கவிதையிலும்- அது வேறு கருத்தைச் சுட்டிய போதும்- இதே துயரே பின்னணியாகப் புலப்படாது நிற்கிறது.

"சிரித்திருக்கும் மலர்களைப் போல
நான்.
யாருக்காகவும் சோடித்துக்
கொள்வதற்கில்லை
இடுகாட்டிலும்
பூத்துக்
கிடப்பேன்
எனது
ஒரே முகத்துடன்"

இவரது துயருக்கு காரணமாக இருப்பது- மிகக் கூர்ந்த கவனிப்பில் தெரிவது ஏதோ நிறைவேறாது போன காதல், கூடவே இன்றைய விடுதலைப் போராட்டத்தின் விளைவாய் இவர் இழந்து போன அன்பு நண்பர்கள். "விடுதலையும் விரோதமும்" என்னும் கவிதை இதற்கு உதாரணம். தமிழீழ விடுதலைக்கென வீறார்ந்தெழுந்த இயக்கங்கள் பின்னர் தமக்குள் இடறுப்பட்ட போது, அவற்றுள் சிக்கி நசிந்த இதயங்களில் ஒன்றாக கல்லூரனின் உள்ளம் கவிதைகளில் வெளிவருகிறதா?

இவை இல்லாத "புதிய தர்மத்தை நோக்கிய பயணத்தில், சிந்தனைச் சலனமற்ற ஒரு தேசத்தில் உணர்ச்சிபூர்வ மனிதர்கள் எழட்டும்" என கனவு காணும் கல்லூரன் காணத் தவறுவது என்னவெனில், இத்தகைய "சலனமற்ற தர்ம தேசம்" குருஷேத்திர யுத்தத்திற்கு பின்னர் தான் ஏற்பட வாய்ப்புண்டு.

அப்படியானால் இப்போது கல்லூரன் போன்ற கவிஞர்களின் கவிதைகள் கவனிக்க வேண்டியவை, 18 நாள் குருஷேத்திர யுத்தத்தின் போது, தர்மத்துக்காகப் போராடுகின்ற பாண்டவர்கள் தர்மத்தைக் கடக்காதிருக்க வேண்டுமென்பதையே.

இவரது ஆங்கிலக் கவிதைகளும் நான் கூறிய புலப்படாத துயரின் வெளிக் காட்டலாகவே நிற்கின்றன என்பதற்கு இவரது Still I Love என்ற கவிதையும் "Hope" என்ற கவிதையும் உதாரணம்.

1997ல் இக்கவிதைகளை வெளிக் கொணர "ஆகவே" ஆசிரியர் ஜபார் எடுத்த முயற்சிகள் நிறைவேறாது போக, தற்போது "வியூகம்" ஆசிரியர் உமா வரதராஜன் இதை வெளிக் கொணர்ந்திருக்கிறார். நல்ல கவிதைகளை வெளிக் கொணர்ந்த பெருமை இவர்களுக்குரியது.

- துவைதிலி

---

சற்று விலகியிருங்கள்

முயன்று முயன்று வரைகிறேன்
சித்திரவதை;
இன்றுவரையிலும்
முற்றுப்பெறாமலே கிடக்கிறது.

ஒவ்வொரு தடவையும்
முயலும் போதிலும்
ஏதோவொரு இடைச்செருகல்
புகுந்துவிடுகிறது.

நான்
அசட்டையீனமாய் இருக்கும் போதில்
ஆலோசனை வழங்கும் சாக்கில்
அல்லது
சோர்வுற்றிருக்கும் போது
புத்துணர்வூட்டுவதாகக் கூறிக்கொண்டு
எங்காவது ஒருமூலையில்
கிறுக்கிவிடுகிறது.

சிலசமயம்
அழகெனப் புகழ்ந்தும்
அவலட்சணமென இகழ்ந்தும்
இடைஞ்சல் தருகிறது.
அல்லது
வரன்முறையென்று
அறிவுரை சொல்கிறது.
எனக்கு
எந்தவிதிமுறையோடும்
உடன்பாடு கிடையாது.

என் மூலத்தை தரிசித்து
மனதுக்கிசைந்தபடி சுயத்தை வரைய
விழைகிறேன் - சற்று
விலகியிருங்கள்

பெயர் எழுத வேண்டும்

– திருமாவளவன்

---

ஈழத்து இலக்கியச் சோலையின் பதினோராவது வெளியீடாக வெளிவந்துள்ளது "கவிதாலயம் கவிதைத் தொகுதி".




திருகோணமலையில் வாழ்ந்த- வாழ்ந்துகொண்டிருக்கும் ஐம்பது கலைஞர்களிடமிருந்து ஒவ்வொரு கவிதை பெற்று இத்தொகுப்பை தொகுத்தளித்திருக்கிறார் த.சித்தி அமரசிங்கம் அவர்கள்.

இந்நூலின் இருபக்க அட்டைகளும் கலைஞர்களின் புகைப்படங்களால் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. கவிதைகளுடனும் கவிஞர்களின் படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

தம்பலகாமம் தந்த தவப்புதல்வன் கலாநிதி புலவர் ஸ்ரீகாந்தன் சத்தியமூர்த்திக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அவர்பற்றிய கட்டுரையும், தகவல்களும் நூலில் இணைக்கப்பட்டுள்ளன.


நூலுக்கு அணிந்துரை எழுதிய திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் இ.தண்டாயுதபாணி அவர்கள் தனது அணிந்துரையில் "ஒவ்வொரு கவிஞனும் பாடுகின்ற கவிதைப் பொருள் வேறுதான். ஆனால் அநேகமான கவிதைகளில் இன்றைய எம் மக்களின் அவல வாழ்வு ஒரு பொதுவான விடயமாகச் சித்தரிக்கப்படுவதைக் காணமுடிகிறது. போரினால் ஏற்பட்டிருக்கின்ற துன்ப துயரங்கள், சுதந்திரமற்ற வாழ்க்கை, உரிமைகள் மறுக்கப்பட்ட இழிந்த நிலை, அஞ்சி வாழ வேண்டிய துர்ப்பாக்கியம் அரசியல் வியாபாரிகளின் வேடம் முதலான விடயங்களை அநேகமான கவிஞர்கள் வெவ்வேறுபட்ட பாங்கில் பாடியிருப்பதைக் காணலாம். இலக்கியங்களைக் காலத்தின் கண்ணாடி என்பார்கள். சமகாலப் பிரச்சினைகளின் தாக்கங்கள் கவிதைகளாக வெளிப்பட்டிருப்பதை உணரமுடிகிறது" என்று கூறியிருப்பது நூலுக்கு முற்றும் பொருந்தும்.

இத்தொகுப்பு திருக்கோணமலை புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து மட்டக்களப்பு திருகோணமலை மறை மாவட்ட ஆயர் திருத்தந்தை கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை அவர்களால் 1.1.2000 அதிகாலை 1.30 மணிக்கு வெளியிட்டுவைக்கப்பட்டது.

- விவேகி

நன்றி - நூலகத்திட்டம்






# நீதி வழங்க வேண்டியவரே ஒப்பந்தக்காரரானால் ...?

ஜனாதிபதி பதவியேற்றதும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்ந்து அரச சேவையில் இருக்க அனுமதிக்க முடியாது என அறிவித்தார். பின்னர் மிக அவசியமான பதவிகளுக்கு மட்டும் அத்தியாவசியமெனில் பணியாற்ற அனுமதிக்கப்படுவர் என அறிவித்தார். ஆனால், நடந்தது என்ன? வடக்கு கிழக்கு மாகாண அமைச்சுக்கள் திணைக்களங்கள் எங்கும் ஒப்பந்த அடிப்படையிலான உத்தியோகத்தர்களே ஆளுநரின் விசேட அனுமதியின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆளுநரிலிருந்து நிர்வாக உத்தியோகத்தர் வரை ஒப்பந்த நீடிப்புகள் நடைபெறுகின்றது. பலர் 5 வருடங்களுக்கும் மேல் ஒப்பந்தம் பெற்று வேலை செய்கின்றனர். இதன் பின்னணி என்ன? வடக்கு கிழக்கு மாகாணம் சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் விருத்தியடைவதையும், கல்வி, சுகாதாரத் துறைகளில் மேம்படாமலும் பார்த்துக் கொள்ளத் தமக்குப் பொருத்தமான அலுவலர்களை நியமிப்பதையே அரசு விரும்பும். இன்று மாகாண அமைச்சுக்களில் கடமையாற்றும் அனேகர் வடக்கு கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்ட போது அரசியல் செல்வாக்கின் மூலம் நியமனம் பெற்றவர்களாவர். இவர்கள் சமூக நலனை விட தமது பதவி நலனையே குறியாகக் கொண்டவர்கள். இவர்களைப் பதவியலமர்த்துவதன் மூலம் வயதான காலத்துக்குரிய நிபந்தனையுடனும் மீண்டும் ஒரு வருடத்துக்கு ஒப்பந்தம் பெற வேண்டும் எனும் நோக்கிலும் இட்ட கட்டளைகளை அப்படியே நிறைவேற்றுபவர்களாகவிருப்பர். இளைய அதிகாரிகளின் நிலை அவ்வாறு இல்லை. அவர்களின் வயதுக்கும் முற்போக்குச் சிந்தனைகளும் அபிவிருத்தி சார்ந்ததாக இருக்கும். அதனை முறியடிக்கவே இளம் தலைமுறையினரைப் பதவியுயர்த்தாமலும் தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய ஆளணியினரையே தொடர்ந்தும் பணியாற்ற ஆளுனர் அனுமதி வழங்கப்படுகிறது.

இலங்கை நிர்வாகச் சேவையிலும் இலங்கை கல்வி நிர்வாக சேவையிலும், கணக்காளர் சேவையிலும், பொது எழுதுவினைஞர் சேவையிலும், ஏனைய துறைகளிலும் இருக்கக் கூடிய பதவிநிலை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை அரசோ, ஆளுனரோ பொதுச் சேவை ஆணைக்குழுவோ அறியாதவர்களல்ல. அந்த ஆளணிக் கட்டமைப்புக்கு அமைய காலத்துக்கு காலம் பதவியுயர்வு மூலமோ, ஆட்சேர்ப்பு மூலமோ பதவியணிகள் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியது பொது நிர்வாக அமைச்சினதும், ஆளுனரதும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் கடமையாகவிருந்த போதிலும் அவ்வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்காமல் காலங்கடத்திக் கொண்டு தம்மைத் தாமே சிபாரிசு செய்து கொண்டும் தமது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அரசியல்வாதிகளின் கையாட்களுக்கும் மீண்டும் மீண்டும் சேவை நீடிப்புச் செய்துவருவது நிர்வாக நடைமுறைகளுக்கு மாறானதாகும். இதன் மூலம் அடுத்த அடுத்த பதவிக்குத் தயாராக வேண்டிய ஆளணியினர் அப்படியே இருக்க, தங்களைவிட வேறு எவருக்கும் இந்த நிர்வாக வேலை தெரியாது நாமில்லாவிடில் அமைச்சுகளே மூடப்படவேண்டியிருக்கும் எனும் பாங்கில் ஏதுமறியாப் பூனைகள் போல ஓய்வூதியத்தையும் பெற்றுக் கொண்டு மேலதிக கொடுப்பனவையும் - பிரயாணப்படிகளையும் பெற்றுக் கொண்டு காலம் கடத்துகின்றனர். இவர்கள் வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு துணைபோனார்களா? அழிவுக்குத் துணை போனார்களா? என்று வடக்கு கிழக்கு மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாவர். மாகாணங்களில் மாகாண சபையையும் அரசும் செய்த செய்த அபிவிருத்தி நடவடிக்கைகளையும் செய்யப்பட்ட முதலீடுகளையும் இவர்களும், ஆளுனரும் பட்டியலிட்டுக் காட்டுவார்களா? ஏனைய மாகாணங்களில் போர் நடவடிக்கைகளால் அழிவுகள் குறைவாகவிருக்கும் போது வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட இழப்புக்கள் கணக்கிலடங்காதிருக்கும் போது இவற்றைப் புனரமைக்கவும், புனர்வாழ்வளிக்கவும் இவர்கள் எடுத்த நடவடிக்கைகள் தான் என்ன? புனர்வாழ்வுக்கென வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட நிதி எந்தளவுக்கு இங்கு செலவு செய்யப்பட்டது என்பதையும் இந்த அதிகாரிகள் கணக்குக் காட்டுவார்களா? இளைப்பாறிய இவர்கள் ஒப்பந்தம் பெற்றுச் சாதித்தது என்ன?

வடக்கு கிழக்கில் தமிழ் மொழி அமுலாக்கம் என்று கூறிக் கொண்டு இவர்கள் ஆங்கிலம், சிங்களம், அமுலாக்கமா செய்கிறார்கள்? ஆங்கில மொழி அமுலாக்கம் செய்யவா இவ்வுயர் அதிகாரிகள் பதவி நீடிப்பு பெறுகிறார்கள்? மொழிபெயர்ப்புச் செய்ய ஆளணியினர்களை அமர்த்துவதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தபோதும் இவர்கள் இப்படி நடந்துகொள்வது ஏன் என்ற வினாவே எழுகிறது.

பொது எழுதுவினைஞர் பலர் சேவையில் தர உயர்வுகளை எதிர்பார்த்திருக்க பழம் பெரும் நிர்வாக உத்தியோகத்தர்கள் பலர் தாங்கள் இல்லாவிடில் எதுவும் நடைபெறாது என்பது போல ஆங்கிலக் கடிதம் எழுதி வேலை கூட்டுகிறார்களா? சிங்கள உத்தியோகத்தர்களும், தமிழ் படிக்க வேண்டியுள்ள நிலையில் அதை அவர்கள் செய்யாது இருக்க தமிழர்கள் மட்டும் சிங்களம் படிக்க வேண்டும். இல்லையெனில் ஆங்கில மொழி மூலம் தொடர்புகொள்ள வேண்டும் என அரசு எதிர்பார்ப்பது தமிழ் மொழி அமுலாக்கத்தைத் திட்டமிட்டே தடுக்கும் முயற்சியா? இதனை அமுல்படுத்த இந்த வயதானவர்கள் உடந்தையா? காலையில் தமிழ் மொழி அமுலாக்கம் பற்றிப் பேசும் அதிகாரிகள் மாலையில் ஆங்கிலம் இல்லாவிடில் உலகே அழிந்து விடுமோப் போல வக்காலத்து வாங்குவது போதைப் பொருள் பாவித்தவர் பேச்சாகவே தென்படுகிறது. எவரிடம் நீதியை எதிர்பார்க்கின்றோமோ அவரே ஒப்பந்தக்காரரானால் யார் தான் என்ன செய்வது? உரியவர்கள் பதில் சொல்வார்களா?

இ.ஆனந்தசிவம், திருகோணமலை

# பதில்களைத் தேடுங்கள்!

சரிநிகர் 187 இலும் 188இலும் சிவகணேசன் செல்விஆகியோருடைய கடிதங்களைஅவதானித்தவன் என்ற வகையில் எனது அபிப்பிராயங்கள் இவை.

சிவகணேசன் மூன்று விடயங்களை எழுப்பியிருந்தார்.

ஒன்று அமைப்பு?இயக்கம் பற்றியது.

இரண்டாவது புரொன்ட் லைன் மற்றும் இந்தியா ருடே பற்றியது.

மூன்றாவது ரூபவாஹினியும் செல்வியும் பற்றியது.

இலங்கையைப் பொறுத்தளவில் பெருமளவான பெண்கள் அமைப்புக்கள் அரச சார்பற்ற நிறுவனங்களாகவே இருக்கின்றன என்பது வெளிப்படையான உண்மை.

இந்த அரச சார்பற்ற நிறுவனங்களில் பெரும்பாலானவை ஆரம்பத்தில் இயக்கங்களாக இருந்து பிறகு அமைப்புக்களாக மாறியவை.

எனது அறிவுக்கெட்டிய வரையில் மேர்ஜ் என்கிற அமைப்பு ஆரம்பத்தில் ஒரு இயக்கமாக 1979ம் ஆண்டு ஜே.ஆர். அரசால் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை எதிர்த்து நாடளாவிய ரீதியில் நடவடிக்கைகளில் இறங்குவதற்காக தமது சொந்த நிதிப்பலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் அதில் அங்கம் வகித்தவர்கள் ஏதோ ஒரு வகையில் இடதுசாரிப் பாரம்பரியம் கொண்டவர்களாகவும் இருந்தனர். என்றைக்கு அவர்கள் அரச சார்பற்ற நிறுவனமாக வெளிநாட்டு நிதியில் தங்கியிருக்க ஆரம்பித்தார்களோ அன்றிலிருந்து மெல்ல மெல்ல மக்களுடைய நலன்களுக்காகச் செயற்படுதல் என்றதிலிருந்து விலகி அமைப்பாக தமது பணியைக் குறுக்கி தடம் புரண்ட வரலாறு நம் கண் முன் உள்ளது. உண்மையாகவே இயக்கமாகத் தொழிற்படும் அரச சார்பற்ற அமைப்புக்கும் நிதி வழங்குனர்களுக்கும் இடையே ஒரு கயிறிழுப்பு எப்பொழுதும் நடந்து கொண்டே இருக்கும். நிதி வழங்குனர்களின் நலன்கள் அல்லது தேவைகள் புறக்கணிக்கப்படின் நிதி வளம் தடைப்படும். இதற்காக நிதி வழங்குனர் எதை எதிர்பார்க்கிறாரோ அதையே தம்முடைய செயற்பாடாக மாற்றி விடும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தான் அதிகமானவை.

இதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களில் இருப்போர் கொதித் தெழுவதில் அர்த்தமில்லை.

அதற்காக அரச சர்பற்ற நிறுவனங்களால் எவ்வித நன்மையுமே விளையவில்லை என்று நான் கூற வரவில்லை. உதாரணமாக சிங்களத்தில் ராவய, யுக்திய போன்ற பத்திரிகைகளும் தமிழில் சரிநிகர் என்ற பத்திரிகையும் வெளிவருவதற்கு அவை மூல காரணமாக இருந்திருக்கின்றன. இப்பத்திரிகைகள் சமூக அசைவியக்கத்தில் ஏற்படுத்திய பாதிப்புகள் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவை.

இவ்வகையில் இயக்கம், அமைப்பு என்பவற்றை செல்வி பார்க்கும் கண்ணோட்டம் வேறு வகையானது. மிக மேலெழுந்தவாரியானது.

இரண்டாவது, புரொன்ட் லைன், மற்றும் இந்தியா ருடே பற்றியது. சிவகணேசன் இவ்விரு சஞ்சிகைகள் பற்றிக் குறிப்பிட்டவற்றை செல்வி மறுக்கவில்லை. பதிலுக்கு அவற்றிலிருந்து சில குண்டு மணிகளைப் பொறுக்கலாம் என்று தான் சொல்கிறார். பதிலாக அப்பத்திரிகைகளின் போக்கை அவதானித்து அவர் முடிவுக்கு வரவில்லை. சோ.ராமசாமியின் துக்ளக்கூட பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது கறுப்புநிற அட்டையுடன் துயரம்(?) தாங்கி வந்தது. ஆனால் துக்ளக்கையும் சோவையும் தொடர்ந்து அவதானிப்பவர்களுக்கு அது எவ்வளவு பம்மாத்து என்பது தெளிவாக விளங்கும்.

புரொன்ட்லைன், இந்தியா ருடே,துக்ளக் போன்றவற்றைத் தொடர்ச்சியாக - சில சமயங்களில் சற்று உன்னிப்பாகவும் - வாசித்து வந்தால் 'இந்து-இந்தி-இந்தியா' எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.

சில வேளைகளில் அது வெளிப்படையாகவும் நெருக்கடியான சில சமயங்களில் வரிகளுக்கிடையிலும் (between the lines) அது தனது இந்துப் பார்ப்பனிய நஞ்சைக் கக்கி விடும்.

மூன்றாவதாக, ரூபவாஹினியில் எத்தகைய மாற்றத்தை அவரால் ஏற்படுத்த முடிந்தது? இது சிவகணேசனின் கேள்வி.

அது பேரினவதத்தின் தமிழ்க்குரலாக இன்னமும் ஒளித்துக்/ஒலித்துக் கொண்டு தானிருக்கிறது. மனோரஞ்சன் என்கிற மனித உரிமைவாதியும்(?) அதன் தமிழ்ச் செய்திப்பிரிவு ஆலோசகர்களில் ஒருவர் என்று அறிந்தேன். என்ன புண்ணியம். என்ன மாற்றம் நடந்தது?

ரூபவாஹினுக்குள் சற்று மாற்றுக் கருத்துக்களை கொணர முயன்ற வசந்தராஜாவுக்கு என்ன நடந்தது?

பிரேம்ஜி ஞானசுந்தரம் என்கிற முற்போக்குவாதி இதற்குள் இருந்த காலத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தமிழுக்குத் தனிச் சனல் தேவையென ஒரு கோரிக்கையை ஈ.பி.டி.பியினர் எழுத்து மூலமாக முன்வைத்தனர். இருக்கிறதை முதலில் பயன்படுத்துவோம். தனிச்சனலைப் பிறகு பார்ப்போம் என்று அரச பிரதிநிதி பதில் சொல்ல முதல் பாய்ந்து பதில் சொன்ன பிரேம்ஜி கணக்கான நேரத்தில் கனடாவுக்குப் பாய்ந்து விட்டார். ஈ.பி.டி.பியினரும் வழமை போல அதை மறந்து போய் விட்டார்கள்.

சரி, இந்த மூன்றாவது விடயத்திலும் சிவகணேசன் குறிப்பிட்டது நியாயமாக இருக்கையில் தன்னைத் தனிப்படத் தாக்கி விட்டதாகச் செல்வி புலம்புவதில் ஒரு அர்த்தமுமில்லை. செல்வி எழுதிய பதிலுக்குப் பின்னரும் சிவகணேசனின் மூன்று கேள்விகளும் வலுவுடையதாகவே இன்னமும் இருக்கின்றன. சிவகணேசன் ஒன்றும் செல்வியின் தனிப்பட்ட விடயங்கள் பற்றிக் கேள்வியெழுப்பவுமில்லை. தாக்கவுமில்லை.

கேள்விகளுக்காக பதில்களைத் தேட முற்படுங்கள்.

அது சற்றுப் பிரயோசனமானது.

சுந்தரகுமாரன், கொழும்பு -03

# தலை குனிய வைத்த அடி!

இதழ் 186ல் சுனந்தவிற்கு விழுந்த அடி என்ற செய்தி அதிர்ச்சியைத் தந்தாலும் வியப்பைத் தரவில்லை. இந்நாட்டில் இயங்கும் மனித உரிமை அமைப்புக்கள் பெயர் "உரிமை"யை மாத்திரம் தாங்கியிருப்பது அனைவரும் அறிந்ததே.

மனித உரிமைகளுக்கான (யாழ்.) பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பைச் சார்ந்த ஒருவரால் சுனந்தவிற்கு அடி நிகழ்த்திய சம்பவம், இந்த ஏதேச்சாதிகார அரசையும், அது நடத்தும் அட்டூழியங்களை ஆதரிக்கும் சகபாடிகளையும், சமாதான யுத்தம் பற்றி கனவுகாணும் சிலருக்கு அப்பட்டமாக தோலுரித்துக் காட்டியிருக்கும். காட்டியும் என்ன நடிப்பவர்களுக்கு, பாசாங்கு செய்பவர்களுக்கு எது எப்படியானாலும் என்ன மடி நிறைவது தானே.

சமாதான தேவதை மற்றும் மனித உரிமை பேசும் மகான்களுக்கு வன்முறையின் பெயர் தான் சமாதானமும் சகவாழ்வும் என புரியவைக்கப்பட்டுள்ளதோ தெரியாது.

துரத்தி அடிக்கும் அளவிற்கு சுனந்த என்ன. செய்தார்? தமிழ் மக்களுக்கு ஜனநாயகம் வழங்கப் புறப்பட்டவர்கள் சுனந்தவை தாக்குவதானால் சுனந்தவின் பாணியில் கதைக்கும் ஒரு தமிழ் ஊடகவியலாளர் எனின், உடனே தமிழ் புலி எனப் பட்டம் வழங்கி ஆறாம், நாலாம் மாடிகளில் அடைக்கலம் நல்கி விடுவார்கள். இவர்களின் ஜனநாயக ஊதுகுழல்கள் "புலி"வேட்டை பற்றி பத்தி எழுதும்.

வீதியோர சண்டியர்களை விட மோசமானவர்கள், யாழ் பல்கலைக்கழக மனித உரிமை அமைப்பு என பேசும் படி ஆகிவிட்டிருப்பது துரதிருஷ்டம். சுனந்த அவர்களே! ஒட்டு மொத்த தமிழினமும் வெட்கி தலைகுனிகிறது.

- கேகாலை மலர்.கேகாலை

# பொலிஸாருடன் தொடர்பில்லை

சரிநிகர் 185வது இதழில் இறுதிப்பக்கத்தில் வெளியான கட்டுரையில் நடந்த சம்பவங்கள் அனைத்தும் உண்மை என்றும் ஆனால் அதில் கேள்வியெழுப்பியபடி கணேந்திரராவுக்கோ கஜதேவ சங்கரிக்கோ பொலிஸாருடன் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் மீரிகான பொலிஸில் வைத்து மிக மோசமாகத் தாக்கப்பட்டதாகவும் சட்டத்தரணியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகர பிரதி மேயருமான ரவிராஜ் சரிநிகருக்குத் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டிருந்த இளைஞர்களை தான் மீரிகான பொலிஸில் சென்று பார்த்து விட்டு வந்த பிற்பாடும் பொலிஸார் அவர்களை மிக மோசமாகத் தாக்கியுள்ளார்கள் என்று தெரிவித்த அவர் தான் உதவத் தயாராயிருந்த போதும் பொலிஸாரின் இந்தத் தாக்குதலுக்கு எதிராக தாக்குதலுக்குள்ளான இளைஞர்கள் சட்டரீதியான நடவடிக்கை எதனையும் எடுக்க முன்வராதது மிகவும் துரதிஸ்டமானது எனவும் அவர் தெரிவித்தார்.

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

*"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"*
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## பேசுக:
## பொறுப்புடனும் நிதானத்துடனும்!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நோர்வே மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப உரையாடல்கள் தொடங்கியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

ஒரு நல்ல, வரவேற்கப்பட வேண்டிய தொடக்கம்.

இலங்கை வாழ் மக்கள் அனைவராலும், குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்களால் மிகவும் ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புடனும் கோரப்பட்ட ஒரு கோரிக்கை தான் இந்தப் பேச்சுவார்த்தை.

கடந்த ஆண்டு மாவீரர் தினப் பேச்சின் போது பிரபாகரன் இலங்கை அரசாங்கத்தை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தார். ஆயினும், அந்த அழைப்பிலும் அவர் இலங்கை அரசாங்கம் குறித்தும், குறிப்பாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறித்தும் தனக்குள்ள சந்தேகத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக தனது கண்களில் ஒன்றைப் பறி கொடுத்த குண்டுவெடிப்பிற்குப் பின் ஜனாதிபதி வெளியிட்ட அறிவிப்பொன்றில், கொலை வெறி கொண்டவர் என்ற போதும் மக்களின் நலனுக்காக பிரபாகரனுடன் தான் பேசுவேன் என்று அறிவித்திருந்தார்.

பேச்சுவார்த்தை நடாத்துவதை மனப்பூர்வமாக, மக்களின் நலனுக்கான ஒரு செய்கையாக கருதும் எவரும் இப்படியான ஒரு அறிவிப்பைச் செய்யமாட்டார்கள் என்ற போதும், ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை ஒரு நல்ல சமிக்ஞையாகவே அரசியல் அவதானிகள் கருதினர்.

எவ்வாறாயினும் இப்போது பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப உரையாடல்கள் தொடங்கப்பட்டிருப்பது வரவேற்புக்குரியதே.

ஆனால் இந்தப் பேச்சுவார்த்தை புலிகள் குறிப்பிட்டபடி பரஸ்பர சந்தேகத்தைக்கலைக்கிற விதத்தில் மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்தத்துடன் வெற்றிகரமாகத் தொடரப்பட வேண்டும் என்பதே அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகும்.

இப்பேச்சுவார்த்தையும் முன்னைய பேச்சுவார்த்தைகளைப் போலல்லாமல் இரு தரப்பும் ஒரு புரிதலுக்கு வரவேண்டுமென்ற நோக்கத்துடன் செய்யப்படுவதாக அமைய வேண்டும். அவ்வாறான ஒரு இதயசுத்தியுடனான அணுகுமுறையை இரு தரப்பும் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு தரப்பு, இந்த நடைமுறையில் தவறிழைத்தால் அல்லது வேண்டுமென்றே இழுத்தடித்தால் அதைக் கூட பேச்சுவார்த்தை நடைமுறையை மனதில் கொண்டு, குலைத்து விடா வண்ணம் பிரச்சினையைக் கையாள முயல வேண்டும்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த புதிதில் நடந்த பேச்சுவார்த்தையின் போது இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைக் காலம் முழுவதும் பேச்சுவார்த்தை நடைமுறையை இழுத்தடித்தது. அதே இழுத்தடிப்பை முறையான விதத்தில் அணுகுவதற்கு பதில், விடுதலைப் புலிகளும் திருகோணமலை தாக்குதலை நடாத்தினர். இது பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்ள அரசாங்கத்திற்கு ஒரு வசதியான காரணமாகப் போய் விட்டது. இரு தரப்பும் இந்தப் பேச்சுவார்த்தை விடயத்தில் அரசியல் முதிர்ச்சியுடனும், அரசியல் தீர்வு இலக்குடனும் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இதன் மூலம் உரித்துடையவர்கள் ஆனார்கள்.

அன்று பேச்சுவார்த்தையைக் குழப்பியதில் யார் பக்கத்தில் தவறு என்று கேட்பதோ, யாராவது ஒருவர் மீது பழியைச் சுமத்தி விடுவதோ இன்றைய சூழலில், மீண்டுமொரு முறை பேச்சுவார்த்தைச் சூழல் உருவாகியுள்ள தருணத்தில் அவசியமற்ற ஒன்று. ஆனால் கடந்த பேச்சுவார்த்தை முறிவின் பின் நடந்த யுத்தம், அதனால் இறந்த போரர்ளிகள், இராணுவத்தினர், அழிந்த சொத்துக்கள், அவலத்துக்குள்ளாகிய மக்கள் என்று ஏற்பட்ட இழப்புக்களின் அளவினைக் கணக்கெடுத்துப் பார்க்கையில், அப் பேச்சுவார்த்தை அனுபவங்களை நினைவு கூர்வது தவிர்க்க முடியாததே.

சமரசப் பேச்சுவார்த்தை என்பது இரு தரப்பும் பரஸ்பரம் கொண்டும், கொடுத்தும் உடன்பாட்டிற்கு வரவேண்டிய ஒன்று என்பதும், இந்தக் கொள்ளல் கொடுத்தல் இரு தரப்பாராலும் நியாயமான கௌரவத்தையோ அரசியல் அபிலாசைகளையோ பாதிக்காத வண்ணம் அமைய வேண்டும் என்பதும் இணக்கப்பாட்டிற்கு முயலும் சகல தரப்பாருக்கும் தெரிந்திருக்க வேண்டிய பள்ளிப்பாடம். விடாக் கண்டன் கொடாக் கண்டன் நிலையில் நின்றபடி சமரசத்திற்கு வருவது ஒருபோதும் சாத்தியமில்லை.

கடந்த அரை நூற்றாண்டுக் கால அரசியல் வரலாற்றில், தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் தலைமைகள், தமிழ் மக்களின் சார்பில் முன்வைத்த அனைத்து நியாயமான அரசியல் கோரிக்கைகளும் அரச தரப்பினால் கணக்கெடுக்கப்படாது புறந்தள்ளப்பட்டு வந்துள்ளன. இந்த கோரிக்கைகள் வன்முறை சாரா போராட்ட வழிகளால் நிர்ப்பந்திக்கப்பட்டு கிடைக்காதது மட்டுமல்லாமல், வன்முறை சாரா போராட்டத் தொண்டர்கள் மீது அரச வன்முறை தீவிரமாக கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்த அரச பயங்கரவாத வன்முறை தான் பதில் வன்முறைப் போராட்டம் தமிழ்த் தரப்பிலிருந்து உருவாவதற்கு அடியெடுத்துக் கொடுத்தது.

இந்த வன்முறைப் போராட்ட வரலாற்று உண்மைகள் தெளிவாக்கப்படாத நிலையில், சிங்கள அரசியல் தலைமைகள் தமது மக்களை -சிங்கள மக்களை- உருவேற்றி வைத்திருப்பதுடன், தமிழ்த் தரப்பினர் வன்முறையாளர்கள் என்றும் அநீதியான கோரிக்கையை முன்வைக்கிறார்கள் என்றும் காலங்காலமாக பிரச்சாரம் செய்து வந்திருப்பதால், சமரச உடன்பாடொன்றை சிங்கள மக்கள் மத்தியில் வெற்றிகரமாக ஏற்க வைப்பது இலேசான காரியமல்ல. ஆனால் அது என்னதான் இலேசான காரியமல்ல என்றாலும் அவசியம் செய்யப்பட வேண்டிய ஒன்று.

குறுகிய அரசியல் லாபங்களுக்காகவும் தனிப்பட்ட செல்வாக்குகட்காகவும் இத்தனை காலம் அரசியல்வாதிகள் நடந்து கொண்ட விதம் தான் இன்று இந்த நாட்டை ஒரு பிணக்காடாக மாற்றி விட்டுள்ளது.

பேச்சுவார்த்தை தொடங்கும் இந்த தருணத்தில் நிச்சயமாக இரு தரப்பினரிடையேயும் இருக்கக் கூடிய கசப்புணர்வுகள், கடந்தகால வரலாற்று வடுக்கள் என்பவற்றை போக்கக் கூடிய விதத்தில் இதை நடாத்த வேண்டுமென்பதை மனதில் கொண்டு இரு தரப்பும் பேச்சில் இறங்க வேண்டும்.

இந்த பரஸ்பர நம்பிக்கை உருவாதலில், மத்தியஸ்தம் வகிக்கும் மூன்றாம் தரப்பும் முன்முயற்சியுடன் பங்காற்ற வேண்டும்.

மூன்றாம் தரப்பு ஒன்றை முன்நிறுத்துவது, பேச்சுவார்த்தை முறிந்த பின் தவறு யார் பக்கம் என்று சாட்சி சொல்வதற்கல்ல. அந்த மூன்றாம் தரப்பின் துணையுடன் நமது நாட்டுப் பிரச்சினையை நாம் முடிந்தளவு சுமுகமாக தீர்த்துக் கொள்ளவே என்பது கணக்கில் எடுக்கப்பட வேண்டும்.

வரலாற்றில் மீண்டும் ஒரு முறை வந்துள்ள இந்த அரிய சந்தர்ப்பம், பயன் விளை தரக் கூடிய விதத்தில் நிதானமாகவும், பொறுப்புணர்வுடனும் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதே இந்த நாட்டில் சமாதானத்தின் மீது அக்கறை உள்ள சிங்கள மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகும்.

சரிநிகரின் எதிர்பார்ப்பும் அதே!

# விற்பனையாகும் வவுனியா மாவட்டப் பல்கலைக்கழக ஒதுக்கீடுகள்!

தொடர்ந்து கொண்டு வரும் போர்ச் சூழல், தமிழ் மக்கள் அனைவரதும் அன்றாட நிகழ்வுகள் அனைத்திலும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருவதும் அனைவரும் அறிந்ததே. தமிழ் மக்கள் கல்வியைத் தமது உயிரினும் மேலாகக் கருதுபவர்கள், எதை இழப்பினும் அதனை இழக்க மாட்டாதவர்கள். தமிழரின் கல்வி வாய்ப்பில் இடம்பெற்ற மாற்றங்களும், இன்றைய சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதில் பிரதான பங்கு வகித்தன. சமகால நிகழ்வுகள், வவுனியா மாவட்ட மக்களிடையேயும் பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்தவே செய்தன. அவற்றுள் குறிப்பிடப்படக் கூடிதொன்று மாணவர் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக இடம்பெற்ற முறை கேடுகளாகும்.

இவற்றுள் அண்மைக் காலத்தில் இடம்பெற்றவற்றுள் ஒன்று 1996ம் அண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் போது, அப்போது பிராந்தியக் கல்விப் பணிப்பாளராக இருந்த துரைதியாகராஜாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவரது மகள் து. பிரேமினி 1995ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பரீட்சைக்குத் தோற்றி, நான்கு பாடங்களிலும் சித்தியடையாதவர். இவர் தனது பாடசாலைக் காலத்தில் ஒரு சில நாட்களே பாடசாலைக்குச் சமூகமளித்திருந்தார். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் பாடசாலைக் காலத்தில், மாதப் பரீட்சை, தவணைப் பரீட்சை எதிலுமே தோற்றிப் புள்ளிகளைப் பெறாதவர். இத்தகைய மாணவி 1996ம் ஆண்டுப் பரீட்சையில், பரீட்சை மண்டபத்திலும் விடைகள் எதனையும் எழுதாமலேயே வினாத் தாள்களையும், வெற்று விடைத் தாள்களையும் மேற்பார்வையாளரிடம் கையளித்திருந்தார். பின்னர் பாடங்கள் ஒவ்வொன்றும் முடிய முடியத் தந்தையாகிய கல்விப் பணிப்பாளரால், மாவட்டத்தின் தலை சிறந்த ஆசிரியர்களிடம், வினாத் தாள்கள் வழங்கப்பட்டு, விடைகளைச் சரி பார்க்க எனவும், இம்முறை புள்ளி வழங்கும் திட்டத்தைத் தயாரிப்பதற்காகப் பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளதாகவும் கூறி விடைகள் பெறப்பட்டன. இவ்விடைகளின் அடிப்படையில் து. பிரேமினியின் விடைத் தாள்கள் துரைதியாகராஜாவின் பொறுப்பிலேயே இருந்த பிராந்திய சேகரிப்பு நிலையத்தில் இருந்த விடைத்தாள்கள் பொதியில் இருந்து வேறாக்கப்பட்டு, மீண்டும் விடைகள் து. பிரேமினியினால் எழுதுவிக்கப்பட்டு வைக்கப்பட்டன. பொதிகளைப் பிரித்து அடைத்த போது சேதமாகிய "மஞ்சள் சிட்டைகளை"ப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் இருந்து பெற்றுப் புதிய சிட்டைகள் மூலம் பிரதியீடு செய்திருந்தார்.

1996ம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்ததைத் தொடர்ந்து, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட புகார்களின் அடிப்படையில், மாகாணக் கல்வி அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டு துரைதியாகராஜா, புவனேஸ்வரன் ஆகியவர்களைச் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்தது. அப்போது கல்வித் திணைக்களப் பிரதம இலிகிதராக இருந்த ஜெயராஜை இடமாற்றம் செய்தது. து. பிரேமினியைப் பல்கலைக்கழக அனுமதியின் பொருட்டுக் கருத்திற் கொள்ள வேண்டாமெனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினை, விசாரணைக் குழு கேட்டுக் கொண்டது. ஆனால், பின்னர் பரீட்சைத் திணைக்களம், ஒரு கண் துடைப்பு விசாரணையை நடாத்தியதன் மூலம் து. பிரேமினியைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குத் தெரிவு செய்யக் காரணமாக இருந்தது. இதற்கு அடிப்படைக் காரணங்களாக இருந்தவை, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் காலில் விழுந்து, துரைதியாகராஜா அழுதமையும், பரீட்சை ஆணையாளரிடம் தனது மகள் பரீட்சை எழுதவுள்ளதாக துரைதியாகராஜா ஏற்கெனவே வெளிப்படுத்தியிருந்த போதும், நம்பிக்கையானவர்கள் இல்லையெனக் குறிப்பிட்ட ஆணையாளர், அவரிடமே பரீட்சைக் கடமைகளை ஒன்றிணைக்கும் பொறுப்பை ஒப்படைத்தமையும் ஆகும்.

அடுத்த விடயம், 1998ம் ஆண்டு ஓகஸ்ட் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தொடர்பானது. இம்மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியின் போது, வழமைக்கு மாறாக அம்முறை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, அனுமதியின் பொருட்டான மாவட்டத்தைத் தீர்மானிக்க வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவகர்களின் சான்றிதழ், வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுப்புப் போன்றவற்றைக் கோரியிருந்தது. இந்த ஏற்பாடு, புலம் பெயர்வுகளினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கானதாக இருந்தது. ஆனால், இதனைப் பயன்படுத்தி, வவுனியா மாவட்ட ஒதுக்கீட்டின் கீழ், பல்கலைக்கழக அனுமதியைப் பெற முடியாத பல மாணவர்கள் அவற்றைப் பெற்றுக் கொண்டதுடன், இம்மாவட்டத்தில் தொடர்ந்து கற்ற மாணவர்கட்குப் பல்கலைக்கழக அனுமதியே கிடைக்க முடியாமல் செய்துள்ளனர்.

> குடிசையிலும், குப்பி இலாம்பிலும், மர நிழலிலும், அகதி முகாம்களிலும் இருந்து படித்து முன்னுக்கு வருகின்ற தமிழ் மாணவர்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்ற இழி நிலைக்குத் தள்ளி விடும்.

இவ்வாறான நிலையைத் தோற்றுவிப்பதில், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் திருமதி க. சிதம்பரநாதன், வவுனியா வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள், சில கிராம சேவகர்கள் போன்றோர் பெரிதும் பங்கு வகித்துள்ளனர். மேற்படி அதிபர் 05 மாணவர்கட்கு, அவர்கள் பாடசாலையில் கல்வி கற்ற காலத்தைத் தவறாகக் குறிப்பிட்டு இருக்கிறார். இம்மாணவர்கள் கல்வி கற்ற காலப் பகுதியும், இக்காலப்பகுதியில் இவர்கள் பாடசாலைக்குச் சமூகமளித்த நாட்களின் எண்ணிக்கையும் வருமாறு :- (01)

01. இராசநாயகம் நிதர்சன் 21.05.1996 - 29.03.1997, 91 நாட்கள் (02)
02. உமாபதி சஜந்தன் 04.01.1996 - 29.03.1997, 167 நாட்கள் (04)
03. குலசிகாமணி சுகுணன் 20.05.1996 - 29.03.1997, 116 நாட்கள் (05)
04. அருளானந்தம் செந்தில் குமாரனந்தா 02 நாட்கள் மட்டுமே பாடசாலைக்குச் சமூகம் தந்துள்ளார்.
05. பொன்னம்பலம் குமரசேன் என்ற மாணவன் 17.03.1997 அன்று பாடசாலையில் சேர்ந்திருந்த போதும் ஒரு நாட் கூட வகுப்புகட்குச் சமூகமளிக்க வில்லை.

அத்துடன் இப்பாடசாலையில் மீட்டல் வகுப்பு மாணவராகச் சேர்ந்தவர்கட்குக் கூட, 80 வீத செய்முறைகளைப் பூர்த்திசெய்ததாக அதிபரினால் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. (03) இக்கடிதங்களை அவர்கள், ஏற்கெனவே கல்வி கற்று, முதலாந் தடவை பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைகளில் இருந்தே பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும். தற்பொழுது இத்தகவல்கள் அனைத்தும் தவறானவை என, அதே அதிபரினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தான் அப்படி அறிவித்ததற்குக் காரணம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஒஸ்வேள்ட் என்பவரின் வற்புறுத்தல் என்றும், அவர் தன்னைப் பழிவாங்கும் நோக்கத்திலேயே, இவ்வாறு கட்டாயப் படுத்தியே எழுதி வாங்கினார் என்றும், இதற்குக் காரணம், ஒஸ்வேள்ட் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக வருவதற்கு, மறைந்த புளொட் இராணுவத் தளபதி மாணிக்கதாசன் ஊடாக முயற்சித்தபோது, தானும், வேறு சில அதிபர்களும் அதனை எதிர்த்தமையும், விசாகலிங்கம் அவர்கள் கல்விப் பணிப்பாளராக வருவதற்குக் காரணமாக இருந்தமையும் எனக் கூறுகின்றார்.

கல்வித் துறைக்குள் அரசியல் புகுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒன்று. ஆனால், தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தவே பொலிசார் போதுமானதாக இல்லாத, இந்த யுத்தச் சூழ்நிலையிலும், வவுனியாத் தேசியப் பாடசாலை அதிபர் ஒருவரினை, இடைநிறுத்தும் அதிகாரம் வலயக் கல்விப் பணிமனைக்கு இல்லையென்பதனைப் பின்பு அறிந்து கொண்ட வலயக் கல்விப் பணிமனை, அவரை மீண்டும் கடமையில் சேர அனுமதி அளித்தபோது, பொலிஸ் பாதுகாப்புடனேயே அதிபர் திருமதி சிதம்பரநாதன் பாடசாலையை நடத்த அனுமதித்தது. அதே அதிபர் இப்போது தான், மாணிக்கதாசன் இறந்த பின்னர், திருமதி ஒஸ்வேள்ட்டிற்குப் பயந்து தான் அத்தாட்சிப்படுத்தியது பிழை என்று உறுதிப்படுத்த வேண்டி வந்துள்ளது என்று கூறுகிறார்.

பாதிப்பினை ஏற்படுத்திய மாணவர்கட்கு எதிராக, வவுனியா மாவட்டப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமே (09) பகிஸ்கரிப்பினை ஒழுங்கு படுத்தியிருந்தது.

பாதிப்பினை ஏற்படுத்திய மாணவர் சார்பில், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் போன்றவர்களுக்கு 02. 10. 1999 திகதியிடப்பட்டு (11) அனுப்பி வைக்கப்பட்டுள்ள கையெழுத்து இடப்படாத பிரசுரம் ஒன்றில் "வவுனியா மாவட்டம் இவர்கட்கு இரத்துச் செய்யப்படுமாயின், இலங்கையின் வேறு எந்த ஒரு மாவட்டத்தின் கீழும், இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளமையானது, இவர்களால் இழைக்கப்பட்ட தவறுகளைப் பட்டவர்த்தனமாக்குகின்றது.

இவை பற்றித் தமிழ்ப் பத்திரிகைகள் மூலம் சம்பந்தப்பட்டவர்களைச் சந்திக்குக் கொண்டு வருவது அல்லது அம்பலப்படுத்துவதன் மூலம், எமது கண்ணை எமது விரலால் குத்துவது அல்லது எமது இனத்தை, மற்றைய இனத்திற்குக் காட்டிக் கொடுப்பது போன்ற வாதங்கள் எழுந்த போதும், இன்று ஏனைய ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் மூலமாகக் குடிசையிலும், குப்பி இலாம்பிலும், மர நிழலிலும், அகதி முகாம்களிலும் இருந்து படித்து முன்னுக்கு வருகின்ற தமிழ்ச் சமுதாய்த்தினைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்ற இழி நிலைக்குத் தமது சுயநலத்திற்காகத் தள்ளி விடுபவர்களை இனிமேலும் இக்காரணங்களைக் கூறி அமபலப்படுத்தாமல் விடுவது சமூகத்திக் கடைநிலையிலிருந்து கல்வியினூடாக முன்னேற முயலும் மாணவர்களுக்கு நாம் செய்யும் துரோகமாகும்.

**– அரிச்சந்திரன்**

வெளியிடுபவர்: ச.பாலகிருஷ்ணன், இல.18/02, அலோசாலை, கொழும்பு 03, அச்சுப்பதிவு:பிறின்ற்இன், இல.07,கெகட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 25.01.2000